விலை ரூபா 20 பக்கங்கள் 28

# உதயன்

30°c - 23°c
தெளிவான வானம்

சுடர் 31 கதிர் 71 வள்ளுவர் ஆண்டு 2047 தை 22, வெள்ளிக்கிழமை 05.02.2016

**சுதந்திர தினமான நேற்று வடக்கில் போராட்டங்கள்**

காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள்கறுப்பு நாளாகக் கடைப் பிடித்து ஆர்ப்பாட்டம்



பக். 02

# அனைவரது கௌரவத்தையும் பாதுகாத்தே ஐ.நா. தீர்மானம் நடைமுறைப்படுத்தப்படும்

## சுதந்திர தின வைபவத்தில் ஜனாதிபதி தெரிவிப்பு

கொழும்பு, பெப்.5
இலங்கை அரசினதும், மக்களினதும், படையினரினதும் கௌரவத்தைப் பாதுகாக்கும் வகையிலேயே ஐ.நா. மனித உரிமைகள் சபையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானம் நடைமுறைப்படுத்தப்படும் என்று ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.
உலகில் ஏற்றுக்கொள்ளப்பட்ட படையினராக எமது முப்படையினரை மாற்றும் வகையிலுமே ஐ.நா. தீர்மானத்தை நாம் எதிர்கொள்வோம். இந்த விடயத்தில் பொறுமையுடனும், பக்குவமாகவும், புத்திசாதுரியமாகவும் நாம் செயற்படுவோம் என்றும் அவர் குறிப்பிட்டார். பக். 22



# இரவோடு இரவாக மக்கள் பேரவை தமிழரசுக் கட்சியுடன் ரகசியப் பேச்சு

## தமது செயற்பாட்டுக்கு ஆதரவு தருமாறு கெஞ்சல்

யாழ்ப்பாணம், பெப்ரவரி 5
தமிழ் மக்கள் பேரவையின் அங்கத்தவர்களுக்கும், இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான மாவை.சேனாதிராசாவுக்கும் இடையில் கடந்த 2 ஆம் திகதி இரவு இரகசியச் சந்திப்பு நடைபெற்றுள்ளது.
இந்தச் சந்திப்பைத் தொடர்ந்து, தமிழ் மக்கள் பேரவையினால் வெளியிடப்பட்ட தீர்வுத் திட்டம், மாவை.சேனாதிராசாவிடம் கையளிக்கப்பட்டுள்ளது. அத்துடன், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தனுக்கும் தமக்கும் இடையில் சந்திப்புக்கு ஏற்பாடு செய்து தருமாறும் மக்கள் பேரவையினர் கோரிக்கை விடுத்துள்ளனர்.
தமிழ் மக்கள் பேரவையின் ஏற்பாட்டுக் குழு உறுப்பினர்கள், இணைத் தலைவர்களில் ஒருவர் உள்ளிட்ட ஏழு பேர் கொண்ட குழுவினர், இலங்கைத் தமிழரசுக் கட்சி யின் யாழ். மார்ட்டீன் வீதியில் உள்ள அலுவலகத்துக்குக் கடந்த 2 ஆம் திகதி இரவு 8 மணியளவில் சென்று, தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை.சேனாதிராசாவைச் சந்தித்தனர். இந்தச் சந்திப்புத் தொடர்பில், நாடாளுமன்ற உறுப்பினர் மாவை.சேனாதிராசாவிடம் கேட்டபோது,
தமிழ் மக்கள் பேரவையின் ஏழு உறுப்பினர்கள் வரை வந்து சந்தித்தனர். அவர்களது அரசமைப்பு வரைவு வெளியீட்டு விழாவுக்கு என்னை அழைத்திருந்தனர். அதன் போது நான் அவர்களிடம், பக். 24

## 606 கைதிகள் விடுதலை

யாழ்ப்பாணம், பெப்.5
இலங்கையின் 68 ஆவது சுதந்திர தினத்தை முன்னிட்டு நாடளாவிய ரீதியில் தடுத்து வைக்கப்பட்டிருந்த 606 பேர் விடுதலை செய்யப்பட்டுள்ளனர் எனச் சிறைச்சாலைகள் ஆணையாளர்நாயகம் தெரிவித்துள்ளார்.
இதற்கமைவாக வடக்கில் யாழ். சிறைச்சாலையிலிருந்து 2 பேரும், வவுனியா சிறைச்சாலையிலிருந்து 14 பேரும் நேற்று விடுதலை பக். 23




## சுதந்திர தின நிகழ்வில் சம்பந்தன்



கொழும்பு, பெப்.5
இலங்கையின் 68 ஆவது சுதந்திர தினம் நேற்று கொழும்பு, காலிமுகத்திடலில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையில் மிகக் கோலாகலமாகக் கொண்டாடப்பட்டது. ஆளும் ஐக்கிய தேசியக் கட்சி – சிறிலங்கா சுதந்திரக் கட்சி இணைந்து கொண்டாடிய இந்தத் தேசிய சுதந்திர தின நிகழ்வில் பிரதான எதிர்க்கட்சியான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பங்கேற்றது.
எனினும், மகிந்த அணி இந்த நிகழ்வைப் புறக்கணித்திருந்தது.
இலங்கையின் 68 ஆவது சுதந்திர தின வைபவம் நேற்றுக் காலை காலிமுகத் திடலில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையில் பக். 23

முச்சந்தி முரளி



தமிழரசே சரணம் ஐயா...

## யோசிதவுக்கு எதிராக முக்கிய ஆவணங்களை மீட்டனர் பொலிஸார்

கொழும்பு, பெப். 5
விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள நாடாளுமன்ற உறுப்பினர் மகிந்த ராஜபக்சவின் புதல்வர் யோசித ராஜபக்ச, கால்டன் ஸ்போர்ஸ்ட் நெட்வேர்க் (சி.எஸ்.என்) நிறுவனத்தின் தலைவர் என்பதை உறுதிப்படுத்தும் பல சாட்சிய ஆவணங்கள் கிடைத்துள்ளன என பொலிஸ் நிதி மோசடி விசாரணைப் பிரிவினர் தகவல் வெளியிட்டுள்ளனர்.
இந்த நிலையில் குறித்த ஆவணங்களில் கிடைக்கப் பக். 22

## இறுதியில் ஒலித்தது தமிழில் தேசிய கீதம்

கொழும்பு, பெப்.5
காலிமுகத்திடலில் நேற்று இடம்பெற்ற இலங்கையின் 68 ஆவது சுதந்திர தின வைபவத்தில் தமிழ் மொழியில் தேசிய கீதம் பாடப்பட்டது. பக். 22



## அரசமைப்புக்கு கருத்தறியும் அமர்வு 2 நாள் வவுனியாவில்

யாழ்ப்பாணம், பெப். 5
புதிய அரசமைப்புக்கு மக்கள் கருத்தறியும் அமர்வு வவுனியா மாவட்டத்தில் இன்றும் நாளையும் இடம்பெறவுள்ளது. மாவட்டச் செயலகத்தில் காலை 9.30 மணி தொடக்கம் இந்த அமர்வு நடைபெறவுள்ளது. வவுனியா மாவட்டத்தைச் சேர்ந்த மக்கள் இதில் கலந்து கொண்டு தமது பிரச்சினைகளை – ஆலோசனைகளை முன்வைக்க பக். 22

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுதந்திர தினமான நேற்று வடக்கில் போராட்டங்கள்

## காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் கறுப்பு நாளாகக் கடைப்பிடித்து ஆர்ப்பாட்டம்


மட்டக்களப்பு

யாழ்ப்பாணம், பெப். 5
இலங்கையின் 68 ஆவது சுதந்திர தினம் கொழும்பில் கொண்டாடப்பட்ட அதே வேளையில், தமிழர் தாயகமான வடக்கு, கிழக்கில் காணாமற் போனோரின் உறவுகள் மற்றும் தமிழ் அரசியல் கைதிகளின் உறவுகள்


கிளிநொச்சி

இணைந்து தமது பிரச்சினைகளுக்கு உடனடியாகத் தீர்வைக் காண வலியுறுத்திப் போராட்டம் நடத்தினர்.
கிளிநொச்சி, மன்னார், முல்லைத்தீவு, வவுனியா, திருகோணமலை, மட்டக்களப்பு ஆகிய மாவட்டங்களிலும் காணாமற் போனவர்களுடைய உறவினர்களால் அரசுக்கு எதிரான ஆர்ப்பாட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன.

### கிளிநொச்சி.

காலை 9.30 மணியளவில் கிளிநொச்சி கந்தசுவாமி கோயில் முன்றலில் காணாமற் போனவர்களுடைய உறவினர்கள் சுதந்திர தினத்தைக் கறுப்பு நாளாகய கடைப்பிடித்தனர். அதில் 50இற்கும் மேற்பட்டவர்கள் கலந்து கொண்டனர். தமது பிள்ளைகள் மற்றும் கணவர்களின் படங்களைத் தாங்கியவாறு தலையில் கறுப்புத் துணியணிந்து தமது எதிர்ப்பினை வெளியிட்டனர்.
இந்த நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன், மன்னார் பிரஜைகள் குழுவின் உப தலைவர் சகாயம், கிளிநொச்சி மாவட்ட காணாமல் ஆக்கப்பட்ட குடும்பங்களின் சங்கத் தலைவி பொதுமக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

### முல்லைத்தீவு

முல்லைத்தீவில் காணாமற் போன உறவினர்களால் கறுப்புக் கொடிகள் ஏந்தப்பட்டு ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டது. முல்லைத்தீவு மாவட்டச் செயலகத்தின் முன் குறித்த ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. இந்த நல்லாட்சி அரசு எமது பிள்ளைகளை, உறவுகளை எம்மிடம் கண்டுபிடித்து ஒப்படைக்கவேண்டும் என்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபபட்ட காணாமற் போனவர்களுடைய உறவினர்கள் தெரிவித்தனர். ஆர்ப்பாட்டம் நடைபெற்றபோது பத்துக்கும் மேற்பட்ட புலனாய்வாளர்கள் ஆர்ப்பாட்டம் செய்தோரை ஒளிப்படம் எடுத்தனர் என்று கூறப்படுகின்றது.


முல்லைத்தீவு

### மன்னார்.

மன்னார் பிரஜைகள் குழு அலுவலகத்தில் இருந்து காணாமற் போனவர்களின் உறவினர்கள் மற்றும் அரசியல் கைதிகளின் உறவினர்கள் ஊர்வலமாக மன்னார் பஸார் பகுதிக்குச் சென்று அரசுக்கு எதிரான தங்களுடைய கண்டனத்தை வெளிப்படுத்தினர்
கண்டன ஊர்வலத் தில் மன்னார் பிரஜை கள் குழுவின் தலைவர் இருட் தந்தை இ.செபமாலை, தமிழ் தேசியக் கூட்டமைப்பின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சாள்ஸ் நிர்மலநாதன், மன்னார் சமாதான அமைப்பின் தலைவர் பீ.ஏ.அந்தோனி மார்க், இலங்கை தமிழரசுக் கட்சியின் இளைஞர் அணிச் செயலாளர் வி.எஸ்.சிவகரன், மன்னார் நகர சபையின் முன்னாள் உறுப்பினர் இரட்ணசிங்கம் குமரேஸ், சமூக பொருளாதார மேம்பாட்டு நிறுவனத்தின் மாவட்ட இணைப்பாளர் ஏ.ஜான் சன் பிகிராடோ, மன்னார் திருமறைக் கலாமன்றத்தின் மாவட்ட இணைப்பாளர் ஏ.ரி. மேகன்ராஜ் உட்பட காணமற் போனவர்களின் உறவினர்கள் என பலர் கலந்து கொண்டனர்.


திருகோணமலை


மன்னார்

### வவுனியா

வவுனியா மாவட்ட பிரஜைகள் குழு மற்றும் கையளிக்கப்பட்டு, கடத்தப்பட்டு காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளைத் தேடிக் கண்டறியும் சங்கங்கள் காணாமல் ஆக்கப்பட்டோர் அமைப்புக்கள் இணைந்து நேற்று உணவு தவிர்ப்புப் போராட்டம் ஒன்றை முன்னெடுத் திருந்தனர். வவுனியா நகர சபைக்கு முன்பாக அமைக்கப்பட்ட பொங்கு தமிழ் நினைவு தூபியடியில் குறித்த உணவு தவிர்ப்புப் போராட்டம் ஆரம்பிக்கப்பட்டது . அடையாள உணவு தவிர்ப்புப் போராட்டத்தில் காணாமற் போனவர்களுடைய உறவினர்கள் தமது வாய்களைக் கறுப்புத் துணியால் கட்டியவாறும், கறுப்புத் துணிகளை ஏந்தியவாறும், பாதாகைகள் மற்றும் காணாமற் போன உறவினர்களுடைய புகைப்படங்களை ஏந்தியவாறும் காணப்பட் டனர்.



வவுனியா

### மட்டக்களப்பு

மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள காணாமற்போனவர்களின் உறவினர்கள் மட்டக்களப்பு நகரில் ஆர்ப்பாட்டம் ஒன்றை நடத்தினர். தாயக மக்கள் மறுமலர்ச்சிச் சங்கம், காந்தி சேவா சங்கம் மற்றும் காணாமற் போனவர்களின் உறவுகளின்ஏற்பாட்டில் காந்தி பூங்கா அருகில் இந்த ஆர்பாட்டம் இடம் பெற்றது. ஆர்பாட்டத்தில் தாயக மக்கள் மறுமலர்ச்சிச் சங்கம் மற்றும் காந்தி சேவா சங்கத்தின் தலைவர் ஏ.செல்வேந்திரன்,முன்னாள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் பா.அரிய நேத்திரன் மற்றும் பெருமளவானோர் கலந்து கொண்டனர்.

### திருகோணமலை

திருகோணமலை மாவட்டத்திலுள்ள பாதிக்கப்பட்ட பல குழுக்கள் இணைந்து பல கோரிக்கைகளை முன்வைத்து கவனவீர்ப்புப் போராட்டங்களை முன்னெடுத்திருந்தனர். திருகோணமலையில் ஆளுநர் செயலகத்துக்கு முன்பாக இப்போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன.
(5,21,402,56,ரி3)

# வடக்கில் நேற்று சுதந்திர தின நிகழ்வுகள்


பருத்தித்துறை

யாழ்ப்பாணம், பெப்.5
இலங்கையின் 68 ஆவது சுதந்திர தின பிரதான நிகழ்வுகள் நேற்று வியாழக்கிழமை காலிமுகத்திடலில் நடைபெற்றன.
அதேவேளை நாட்டின் பல பாகங்களிலும் பல்வேறு சுதந்திரதின நிகழ்வுகள் இடம்பெற்றன. வடமாகாணத்திலுள்ள மத்திய அரச அலுவலகங்களிலும், திணைக்களங்களிலும் மாகாண அரச திணைக்களங்களிலும், அலுவலகங்களிலும் நேற்றுக்காலை சுதந்திரதின நிகழ்வுகள் தேசியக் கொடியேற்றலுடன் ஆரம்பமாகின.
யாழ். மாவட்ட செயலகத்தில் காலை 8.50 மணியளவில் இடம்பெற்ற சுதந்திரதின நிகழ்வுகளின்போது யாழ். மாவட்ட அரச அதிபர் நாகலிங்கம் வேதநாயகன் தேசியக் கொடியை ஏற்றினார். தொடர்ந்து மாவட்டச் செயலக வளாகத்தில் மரக்கன்றுகள் நடும் நிகழ்வுகளும் இடம்பெற்றிருந்தன. அரச அதிபர் நா.வேதநாயகன், மேலதிக அரச அதிபர் செந்தில் நந்தனன், உதவி மாவட்டச் செயலர் (காணி) மற்றும் பிரதம கணக்காளர் ஆகியோர் மரங்களை நட்டனர். வடமாகாண ஆளுநர் அலுவலகத்திலும், தேசிய கொடி ஏற்றி வைக்கும் வைபவம் இடம் பெற்றிருந்தது.



வவுனியா

பருத்தித்துறை மாவட்ட நீதிமன்றத்தில் நேற்றுக் காலை 8.50 மணிக்கு இடம் பெற்ற சுதந்திரதின நிகழ்வுகளின் போது தேசியக் கொடியேற்றல் நிகழ்வு இடம்பெற்றது. பருத்தித்துறை மாவட்ட நீதிவான் பெ.சிவகுமார்,வடமராட்சி பிராந்தியத்திற்கு பொறுப்பான உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் எம்.ஏ.ஜவ்பர் ஆகியோர் நிகழ்வில் கலந்து கொண்டிருந்தனர்.
வவுனியா மாவட்டச் செயலகத்தில் வவுனியா மாவட்டச் செயலாளர் தலைமையில் நிகழ்வுகள் இடம் பெற்றன. தேசியக் கொடியை ஏற்றி வைத்து மாவட்ட செலயாளர் உரையாற்றினார்.
இந்த நிகழ்வுகளில் வவுனியா மாவட்டச் செயலக உத்தியோகத்தர்கள், வவுனியா மாவட்டத்தைச் சேர்ந்த மதத்தலைவர்கள் என பலரும் கலந்து கொண்டிருந்தனர்.


யாழ்ப்பாணம்

வவுனியா மாவட்டத்தில் சுதந்திர தினத்தை முன்னிட்டு முச்சக்கர வண்டிகளுக்கு தேசியக் கொடியின் ஸ்ரிக்கர்கள் ஒட்டும் நிகழ்வுகளும் இடம்பெற்றன. இந்த நிகழ்வுகளில் வவுனியா மாவட்ட அரச அதிபர் றோகண புஸ்பகுமார, வவுனியா, மன்னார், முல்லைத்தீவு உப பொலிஸ்மா அதிபர் ஏக்கநாயக்கா, வவுனியா மாவட்ட பொலிஸ் பொறுப்பதிகாரி வசந்த விக்கிரமசிங்க வவுனியா பொலிஸ்நிலைய பொறுப்பதிகாரி சன்ன அபேரத்தின, மற்றும் முச்சக்கர வண்டி உரிமையாளர்கள், ஐ.தே.கட்சி அமைப்பாளர்கள் ஆதரவாளர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.
சுதந்திர தினத்தை முன்னிட்டு அரச திணைக்களங்களில் தேசியக் கொடியேற்றல் வைபவங்களும் மரநடுகை நிகழ்வுகளும் இடம்பெற்றிருந்த போதும் பொது இடங்களில் எந்தவொரு நிகழ்வுகளும் இடம்பெறவில்லை. ஆங்காங்கே கடைகளிலும் வீதியின் மருங்குகளிலும் சிறிய சிங்கக் கொடிகள் பறக்கவிடப்பட்டிருந்தன. பொதுமக்கள் வழக்கம் போலத் தங்களின் அன்றாட வேலைகளில் ஈடுபட்டிருந்தனர். (ற-106,402,ரி-2)


யாழ்ப்பாணம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுதந்திர தினத்தில் தமிழில் தேசிய கீதம்: மைத்திரிக்கு எதிராக தெற்கில் பரப்புரை

கொழும்பு, பெப்.5
சுதந்திர தின வைபவத்தில் தமிழில் தேசிய கீதம் பாடப்பட்டமையை கண்டித்து ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு எதிரான பரப்புரைகளை முன்னெடுத்துள்ளன தெற்கு இனவாத அமைப்புக்கள்.

காலிமுகத்திடலில் நேற்று இடம்பெற்ற இலங்கையின் 68ஆவது சுதந்திர தின நிகழ்வுகளின் போது, அரசு ஏற்கனவே தீர்மானித்ததன் பிரகாரம் சிங்களம் மற்றும் தமிழ் மொழிகளில் தேசிய கீதம் இசைக்கப்பட்டது.

இந்த நிலையில் இதற்கு ஆரம்பம் முதலே கடும் எதிர்ப்புக்களை வெளியிட்டு வந்த கடும்போக்கு பௌத்த அமைப்புக்கள் மற்றும் சில அரசியல் வாதிகள் நேரடியாகவும், இணையத்தின் ஊடாகவும் ஜனாதிபதிக்கு எதிராக பல நடவடிக்கைகளை முன்னெடுத்தனர்.

இதன் ஒரு கட்டமாக சமூக வலைத்தளத்தில் ஆதிக்கம் செலுத்தும் பிரபல சமூக வலைத்தளமான முகநூலில் ஜனாதிபதியை வீழ்த்துவதற்கான முயற்சிகளை பகிரங்கமாக மேற்கொண்டு வருகின்றனர்.

இதற்கமைய இந்தமுறை 68 ஆவது சுதந்திர தின நிகழ்வுகளின் போது தமிழில் தேசிய கீதம் இசைக்கப்பட்டதற்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் வகையில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் உத்தியோகபூர்வ முகநூல் பக்கத்தை விருப்பமில்லை (அன் லைக்) செய்யுமாறு பரப்புரைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

மேலும், தமிழில் தேசிய கீதம் பாடப்பட்டமைக்கு எதிராக, அம்பகமுவ பிரதேச சபையின் முன்னாள் உறுப்பினரான எலபிரிய நந்தராஜ் என்ற மகிந்த ஆதரவு அணியின் அங்கத்தவர், ஹட்டன் கினிகத்தேன பஸ் நிலையத்துக்கு அருகிலுள்ள மலசலகூடமொன்றின் மீதேறியே இவ்வாறு எதிர்ப்பு நடவடிக்கையில் ஈடுபட்டார்.

நல்லாட்சிக்காரர்கள் நாட்டின் சட்டத்தைமீறி தமிழில் தேசிய கீதம் பாடியுள்ளனர் என்று கோஷமெழுப்பியஅவர் போராட்டத்தில் ஈடுப்பட்டுள்ளார்.

நல்லாட்சி அரசில் சிங்களவர்களுக்கு எதிராக நயவஞ்சக அணுகுமுறை கடைப்பிடிக்கப்படுகின்றது . தேசிய கீதம் தமிழ் மொழியில் இசைக்கப்பட்டதற்கு எதிராக சிங்கள மக்கள் கிளர்ந்தெழ வேண்டும் என்றும் அவர் அறைகூவல் விடுத்துள்ளார். (வ)

# திருமலை பத்திரகாளிக்கு சமுத்திர தீர்த்தோற்சவம்

திருகோணமலை, பெப்.5
எதிர்வரும் திங்கட்கிழமை தைமாத அமாவாசை தினத்தன்று, மஹோதய புண்ணிய காலமாகும். அந்த நன்னாளில் திருகோணமலை மாவட்ட ஆலயங்களிலிருந்து, சுவாமிகள் சமுத்திர தீர்த்தக் கரையில் நீராடி சுவாமி தரிசனம் செய்வது வழமையாகும்.

திருகோணமலை அருள்மிகு பத்திரகாளி அம்பாள், அதிகாலை 5 மணிக்கு ஆலயத்திலிருந்து புறப்பட்டு சூரிய உதயத்தில், சமுத்திர தீர்த்தத்தில் தீர்த்தோற்சவம் விசேட பூசைகளுடன் நடைபெறும்.

அதனூடாக அடியார்கள், புண்ணியகால நற்பயனை அடையலாம்.

தேவஸ்தான பிரதம குருவும், ஆதீன கர்த்தாவுமான வேதாகமமாமணி சோ.இரவிச்சந்திரக் குருக்கள் விசேட பூசைகளை நடத்துவார். (அ)

# இலங்கையிடம் வலுவான உறவை எதிர்பார்த்திருக்கிறது இந்தியா

*மோடி தெரிவிப்பு*

புதுடில்லி, பெப்.5
இலங்கையுடன் எதிர்காலத்தில் வலுவான உறவை எதிர்பார்ப்பதாக இந்தியா தெரிவித்துள்ளது.

இந்திய பிரதமர் நரேந்திர மோடி இலங்கையில் சுதந்திரத்தின நிகழ்வு தொடர்பில் விடுத்துள்ள செய்தியில் இதனைத் தெரிவித்துள்ளார்.



இலங்கையுடனான உறவை இந்தியா விசேடமாக கருதுகிறது. இந்தநிலையில் எதிர்வரும் வருடங்களில் அந்த உறவை பலப்படுத்திக் கொள்ள இந்தியா விரும்புகிறது என்று மோடி தமது டுவிட்டர் செய்தியில் சிங்களத்திலும் தமிழிலும் குறிப்பிட்டுள்ளார். (வ)

# அமெரிக்கா வரவேற்பு

கொழும்பு, பெப்.5
இலங்கையின் சுதந்திர தினமான நேற்று காலிமுகத்திடலில் இடம்பெற்ற உத்தியோகபூர்வ நிகழ்வில் தமிழ், சிங்கள மொழிகளில் தேசிய கீதம் பாடப்பட்டது நல்லிணக்கத்தை நோக்கிய நகர்வின் சமிக்ஞை என்று இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் அதுல் கெசாப், தனது ருவிட்டரில் பதிவிட்டுள்ளார். (வ)

## சிசிலியா கொத்தலாவல கட்டுநாயக்காவில் கைது

கொழும்பு, பெப்.5
பிரபல வர்த்தகரும் தொழிலதிபருமான லலித் கொத்தலாவலவின் மனைவி சிசிலி கொத்தலாவல நேற்று கைது செய்யப்பட்டுள்ளார்.

வெளிநாட்டிலிருந்து நாடு திரும்பிய போது, விமான நிலையத்தில் வைத்துச் சிசிலி கொத்தலாவல கைது செய்யப்பட்டுள்ளார்.

சிசிலி கொத்தலாவலவை கைது செய்ய 2009ஆம் ஆண்டு இலங்கை அதிகாரிகள் இன்டர்போலின் உதவியை நாடியிருந்தனர். கோல்டன் கீ நிறுவனத்தில் இடம்பெற்ற பெரியளவிலான நிதி மோசடி தொடர்பிலான பிரதான சந்தேக நபர்களில் ஒருவராக சிசிலி கருதப்படுகின்றார்.

சுமார் 26 பில்லியன் ரூபா பணம் மோசடி செய்யப்பட்டிருந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

சிசிலியை கைது செய்யுமாறு கல்கிசை நீதிமன்றம் பிடியாணை உத்தரவு பிறப்பித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (வ)

# பொலிஸ் பிணையில் விடுவித்த சந்தேகநபர் சட்டத்துறை மாணவன்

*பொலிஸார் தெரிவிப்பு*

வடமராட்சி, பெப்.5
மது போதையில் மோட்டார் சைக்கிள் செலுத்திய குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டு பொலிஸ் பிணையில் விடுவிக்கப்பட்ட சந்தேக நபர், சட்டத்துறை மாணவன் என விசாரணைகள் மூலம் தெரியவந்துள்ளதாக, வடமராட்சிக்குப் பொறுப்பான உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் ஏ.எம்.ஜவ்பர் தெரிவித்தார்.

குறித்த சந்தேக நபர் சட்டத்தரணி என முன்னர் தெரிவிக்கப்பட்ட போதும், விசாரணைகளின் மூலம் அவர் சட்டத்துறை மாணவர் என்ற விடயம் தெரியவந்ததாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

கடந்த முதலாம் திகதி தலைக்கவசம் இன்றி மது போதையில் வாகனம் செலுத்திய குற்றச்சாட்டில் தும்பளைச் சந்தியில் வைத்துக் குறித்த சந்தேக நபரை,பருத்தித்துறை போக்குவரத்துப் பிரிவுப் பொலிஸார் கைதுசெய்திருந்தனர் எனக் கூறிய உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் ஏ.எம்.ஜவ்பர் பின்னர் அவர் பொலிஸ் நிலையம் கொண்டு செல்லப்பட்டு, பொலிஸ் பிணையில் விடுவிக்கப்பட்டார் எனவும் தெரிவித்தார்.

இதேவேளை, குறித்த சந்தேகநபர் மீதான வழக்கு விசாரணை எதிர்வரும் 10ஆம் திகதி வரை பருத்தித்துறை நீதிவான் நீதிமன்றினால் ஒத்தி வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (வ-109)

# யோசிதவின் உணவை எடுத்துச் சென்ற ஷிராந்தி

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவின் புதல்வர் யோசிதவுக்கு, அவரது தயாரான ஷிராந்தி ராஜபக்ச உணவு எடுத்துச் சென்றுள்ளார்.

வெலிக்கடைச் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள யோசிதவிற்கு, ஷிராந்தி உணவு எடுத்துச் சென்றுள்ளார். சிறையில் வழங்கப்படும் உணவை உண்ண முடியாது என யோசித தெரிவித்ததனைத் தொடர்ந்து இவ்வாறு வீட்டிலிருந்து உணவு கொண்டு செல்லப்படுகின்றது.

சீ.எஸ்.என் தொலைக்காட்சியில் இடம்பெற்ற நிதி மோசடிகள் தொடர்பில் யோசித உள்ளிட்ட ஐந்து பேர் கைது செய்யப்பட்டு விளக்க மறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

யோசித, மூன்று வேளையும் வீட்டிலிருந்து உணவு கொண்டு வந்து உண்பதற்கு அனுமதிக்கப்பட்டுள்ளதாக சிறைச்சாலை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். (வ)

## மைத்திரியுடன் இணைந்து செயற்பட சீனா விருப்பம்

பீஜிங், பெப்.5
இலங்கையின் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுடன் இணைந்து செயற்பட சீனா விரும்புவதாக அந்த நாட்டு ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.

சீன ஜனாதிபதி ஷி ஜின்பிங் இலங்கையின் சுதந்திர தினத்தை முன்னிட்டு அனுப்பியுள்ள வாழ்த்து செய்தியில் இதனை குறிப்பிட்டுள்ளார்.

இரண்டு நாடுகளுக்கும் இடையிலான உறவை முன்னேற்ற சீனா விரும்புவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

சீனாவும் இலங்கையில் நீண்ட உறவு வரலாற்றைக் கொண்டுள்ளது.

இந்தநிலையில் இரண்டு நாடுகளும் நன்மை பெறும் வகையில் உறவு மேம்பட வேண்டும் என்றும் அவர் கூறியுள்ளார். (வ)

## சிறிபால டி சில்வாவை நேரடி விவாதத்துக்கு அழைக்கும் கம்மன்பில

கொழும்பு, பெப்.5
ஐக்கிய தேசியக் கட்சியுடன் யார் ஒப்பந்தத்தில் ஈடுபட்டார்கள் என்று எனக்குத் தெரியும். முடிந்தால் இதனைத் தெளிவுபடுத்த நேரடி விவாதத்திற்கு சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் உப தலைவரும் அமைச்சருமான நிமல் சிறிபால டி சில்வாவுக்கு அழைப்பு விடுக்கின்றேன்.



இவ்வாறு மகிந்த அணி நாடாளுமன்ற உறுப்பினரும் புதிய ஹெல உறுமய கட்சியின் தலைவருமான உதய கம்மன்பில சவால் விடுத்துள்ளார்.

அரச தகவல் திணைக்களத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் உரையாற்றிய நிமல் சிறிபால டி சில்வா, ஐக்கிய தேசியக் கட்சியுடன் பொருத்தனை ஒன்றை மேற்கொண்டே சிறிலங்கா சுதந்திரக் கட்சியைப் பிளவுபடுத்த உதய கம்மன்பில முயற்சிக்கின்றார் என்று தெரிவித்திருந்தார்.

இது தொடர்பில் நேற்று முன்தினம் வினவியபோதே உதய கம்மன்பில மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:- இந்தக் கருத்தை முற்றாக மறுக்கின்றேன். ஜனாதிபதித் தேர்தலின்போது ஐக்கிய தேசியக் கட்சியுடன் ஒப்பந்தமொன்றை ஏற்படுத்திக்கொண்ட மைத்திரிபால சிறிசேன, சிறிலங்கா சுதந்திரக் கட்சியை எவ்வாறு தோற்கடித்தார் என்பது அனைவரும் அறிந்த விடயம். அதேவேளை, அமைச்சுப் பதவிகளைப் பெற்றுக்கொள்வதற்காக பொதுத் தேர்தலின்போது ஐக்கிய தேசி



யக் கட்சியுடன் யார் ஒப்பந்தத்தில் ஈடுபட்டார் என்பது தொடர்பிலும் எனக்குத் தெரியும். இது சம்பந்தமாக தெளிவுபடுத்த நிமல் சிறிபால டி சில்வாவை நான் நேரடி விவாதத்திற்கு அழைக்கின்றேன் என்றார். (ஐ)

**வாடகைக்கு**
அரச பணிபுரியும் பெண்கள் இருவர் தங்குவதற்கு ஏற்ற அறை, சமையலறை வசதியுடன் நல்லூரில் வாடகைக்கு உண்டு.
தொடர்புக்கு: 077 007 8802







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**மணமகள் தேவை**

யாழ்.இந்து.1985.பூசம்.கி.பா60.12இல் செவ்வாய். அரச உத்தியோக மணமகனுக்கு.

077 314 8249, 021 225 6070

**வீடு வாடகைக்கு** 077 815 5921

கோண்டாவிலில் அமைதி யான இடத்தில் சகல வசதிகளுடன் வீடு வாடகைக்கு உண்டு.

(66481)(11.16.17)

**கார் விற்பனைக்கு** 021 226 3246

ZODYE, NOMAD II WPKT-XXXX இலக்க நல்ல நிலையிலுள்ள கார் விற்பனைக்கு.

தொடர்பு: எஸ்.கதிர்காமநாதன், புற்றளை, புலோலி.

(68490)(11.17.18)

**காணி விற்பனைக்கு உண்டு**

பழைய பூங்கா வீதியிலுள்ள காணி நிலப்பரப்பு 5 குழி 1.63 உள்ள காணி விற்பனைக்குண்டு.

077 843 5356

**வீடு வாடகைக்கு உண்டு**

யாழ் மாநகரசபை எல்லைக்குள் சிறிய குடும்பத்துக்கு வீடு வாடகைக்குண்டு.

தொடர்பு: 077 517 1346

**மணிவிழா வாழ்த்து**



சமூக நேய அர்ப்பணிப்பாளனும் எமது இல்லத்தின் குழந்தைகளை வளர்ப்பதற்கு பேருதவியாற்றிவரும்

"பொன்மனச் செம்மல்"

"மனிதநேய ஈகையாளன்"

"கல்விக்காருண்யன்"

ஆகிய உன்னத கௌரவப் பட்டங்களைப் பெற்று மணிவிழாக் காணும்

உயர்திரு.

E.S.P.நாகரத்தினம்

அவர்களுக்கு எமது வாழ்த்துக்களை இல்லக் குழந்தைகள் சார்பாக தெரிவித்துக்கொள்வதில் மகிழ்ச்சியடைகின்றோம்.

வாழ்க வளமுடன்

வாழ்த்துவோர் :

தலைவர் - தி.இராசநாயகம்,

இல்லப்பணிப்பாளர்கள், பணியாளர்கள், இல்லக்குழந்தைகள்,

மகாதேவா சுவாமிகள் சிறுவர் இல்லம்.

ஜெயந்திநகர் - கிளிநொச்சி.

(சி.29010) (13.16.17.18)

# முன்னாள் எம்.பி. வீட்டில் திருடியதாக 4 பேர் கைது

## காட்டிக்கொடுத்தது மோப்பநாய்

முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரின் வீட்டில் திருட்டு இடம்பெற்ற நிலையில், மோப்ப நாய் முகர்ந்து சென்று அடையாளம் காட்டியதற்கிணங்க 4 பேரைக்கைதுசெய்துள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

யாழ்.கோயில் வீதியில் உள்ள தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் சூ.சிறில் வீட்டில் நேற்று முன்தினம் இந்தத் திருட்டு இடம் பெற்றிருந்தது. இதன்போது 20 பவுண் நகைகள் மற்றும் 15 ஆயிரம் ரூபா பணம் என்பன திருடப்பட்டிருந்தன.

இது தொடர்பில் யாழ்.பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டிருந்த நிலையில், நேற்று மோப்பநாய் சகிதம் அங்கு சென்ற பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டனர்.

இதன்போது மோப்பநாய் திருட்டு இடம்பெற்ற வீட்டிலிருந்து கோயில் வீதி, பிரதான வீதி, கண்டி வீதி வழியே சென்று கண்டி வீதியிலுள்ள ஒருவரது வீட்டுக்குச்சென்றுள்ளது. அங்கு மேசன் வேலை செய்து கொண்டிருந்த 3 பேரையும் நாய் அடையாளம் காட்டியுள்ளது என்று பொலிஸார் தெரிவித்தனர். அவர்கள் கைது செய்யப்பட்டதோடு, அந்த வீட்டுக்கு அருகே இருந்த ஒருவரையும் அதனுடன் தொடர்புடைய குற்றச்சாட்டில் கைது செய்துள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

அவர்களிடம் விசாரணை மேற்கொள்ளப்பட்டுள்ளதாக பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

(த-4-51)

**தையல் வேலையாள் தேவை** 077 670 1495

ஜீன்ஸ், சேர்ட் தைக்கத் தெரிந்தவர்களுக்கு எண்ணிக்கை அடிப்படையில் போதியளவு வேலை வழங்கப்படும்.(பீஸ்றேட்)

(60726)(11.17.18)

# கேள்வி அறிவித்தல்

## மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை, யாழ்ப்பாணம் 2016/2017 ஆம் ஆண்டுக்கான வழங்கல் சேவைகள்

01. வட மாகாண சுகாதார சேவைகள் திணைக்களத்தின் பெறுகைக் குழுவினால் வவுனியா பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பிரிவுக்குட்பட்ட நிறுவனங்கள் / வைத்தியசாலைகளுக்கு 2016/2017 ஆம் ஆண்டுக்கான பின்வரும் வழங்கல் / சேவைகளுக்கு பொறியிடப்பட்ட கேள்விகள் கோரப்படுகின்றன.

| வழங்கல் வகை | ஆவண இலக்கம் | வைத்தியசாலை / நிறுவனங்கள் | மீளளிக்கப்படாத வைப்பு தொகை | மீளளிக்கப்படும் வைப்பு தொகை |
|---|---|---|---|---|
| சமைத்த உணவு | RDHS V 2016 M 01 | பிரதேச வைத்தியசாலைகள் நெடுங்கேணி. புளியங்குளம். மாமடுவ. சிதம்பரபுரம். பூவரசங்குளம். உளுக்குளம். நேரியகுளம். | 1.000.00 | 20.000.00 |
| அழுக்கு துணி சலவை சேவை | RDHS V 2016 M 02 | ஆதார வைத்தியசாலை செட்டிகுளம். பிரதேச வைத்தியசாலைகள் நெடுங்கேணி. புளியங்குளம். மாமடுவ. | 500.00 | 10.000.00 |
| | | சிதம் பரபுரம். பூவரசங்குளம். உளுக்குளம். நேரியகுளம. பாவற்குளம். | 200.00 | 3.000.00 |
| வாகன சுத்திகரிப்பு சேவை | RDHS V 2016 M 03 | வவுனியா பிராந்தியம் | 1000.00 | 10.000.00 |
| வாயு சீராக்கி (AC) பராமரிப்புச் சேவை | RDHS V 2016 M 04 | வவுனியா பிராந்தியம் | 500.00 | 5.000.00 |
| கணினி பராமரிப்பு சேவை | RDHS V 2016 M 05 | வவுனியா பிராந்தியம் | 500.00 | 5.000.00 |

02. விலைக் கேள்விதாரர் ஒரு தனிநபராகவோ வியாபார பதிவினையுடைய நிறுவனமாகவோ இருத்தல் வேண்டும். விலைக்கேள்விதாரர் தனி நபராயின் வவுனியா மாவட்டத்தில் நிரந்தரமாக வசிப்பவராக இருப்பதுடன் கிராம சேவையாளரினால்வதிவிடத்தினை உறுதிப்படுத்திய சான்றிதழ் கேள்வி ஆவணத்துடன் சமர்ப்பித்தல் வேண்டும். பதிவு செய்யப்பட்ட நிறுவனமாயின் வவுனியாவில் ஒரு முகவரையோ அல்லது ஒரு கிளையையோ கொண்டிக்க வேண்டும்.

03. நாட்டமுள்ள விலைக் கேள்விதாரர் எழுத்து மூலமான விண்ணப்பத்தின் பேரில் மீளளிக்கப்படாத வைப்பு பணத்தினைச் செலுத்தி கேள்வி ஆவணங்களை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை. வவுனியாவில் அலுவலக நேரங்களில் 24.02.2016 திகதி வரை பெற்றுக் கொள்ளலாம்.

04. மீளளிக்கப்படும் கேள்வி வைப்புத் தொகை செலுத்தப்பட்டமைக்கான சான்றுகள் கேள்வி ஆவணங்களுடன் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

05. கேள்வி ஆவணங்கள் 25.02.2016 மு.ப 10.30 க்கு முன்பதாக கிடைக்க கூடியவாறு **"தலைவர். திணைக்களப் பெறுகைக்குழு. பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை. மன்னார் வீதி வவுனியா"** என்ற முகவரிக்கு பதிவுத் தபாலிலோ அல்லது இவ் அலுவலகத்தின் நிதிக்கிளையில் காணப்படுகின்ற பெறுகைப் பெட்டியிலோ இடப்படவேண்டும்.

06. கடிதவுறையின் இடது பக்க மேல் மூலையில் வழங்கல் வகை. அடையாள இலக்கம் மற்றும் வைத்தியசாலை நிறுவனத்தின் பெயர் என்பன தெளிவாக எழுதப்பட வேண்டும்.

07. முத்திரையிடப்படாத. தாமதமான. உரிய மீளளிக்கப்படும் வைப்பு தொகை செலுத்தாத கேள்வி ஆவணங்கள் நிராகரிக்கப்படும்.

08. கேள்வி நேரம் முடிவடைந்ததும் உடனடியாக கேள்வி ஆவணங்கள் திறக்கப்படும். இதில் விலைமனுதாரரோ அல்லது அவரால் எழுத்து மூலம் அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதி ஒருவரோ கலந்து கொள்ளலாம்.

09. கிடைக்கப்பெற்ற விலைக் கேள்விகளை முழுமையாகவோ. பகுதியாகவோ நிராகரிப்பதற்கோ மீள் கேள்வி கோரலைக் கோரவோ கோரப்பட்ட பொருள்கள். சேவைகள் வேறு மூலங்களிலிருந்து பெற்றுக் கொள்வதற்கோ ஒப்பந்தகாரர்களை மாற்றி அமைப்பதற்கோ பெறுகைக் குழுவிற்கு அதிகாரம் உள்ளது.

10. மேலதிக விபரங்களை நேரடியாகவோ அல்லது 024-2222140 என்ற தொலைபேசி மூலமாகவோ பெற்றுக் கொள்ளலாம்.

தலைவர்.
திணைக்களப் பெறுகைக் குழு.
மாகாண சுகாதார சேவைகள் பணிமனை யாழ்ப்பாணம்.
05.02.2016

**வீடு வாடகைக்கு உண்டு**

இல. 991 கே.கே.எஸ் வீதியில் அரசடி பிள்ளையார் கோயிலடி அருகில் வீடு வாடகைக்கு உண்டு.

077 5455878, 071 173 4375

**தவறிவிட்டது**

சண்முகசுந்தரம் முருகானந்தன் ஆகிய எனது தேசிய அடையாள அட்டை (581843968V) சாரதி அனுமதிப் பத்திரம். வரி அனுமதிப்பத்திரம், காப்புறுதி அனுமதிப்பத்திரம் அடங்கிய சிறிய பை சுன்னாகம் மதவடிக்கும் மருதனார்மடம் சந்திக்கும் இடையில் தவறவிடப்பட்டுள்ளது. கண்டெடுத்தவர்கள் 077 588 9359 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொண்டு தந்துதவுமாறு தாழ்மையுடன் கேட்டுக்கொள்கின்றேன.

(68490)(11.17.18)

**மணமகன் தேவை**

யாழ்.இந்து கௌர்வகுடும்பம். 1983 சதய நட்சத்திரம், சூரியன் செவ்வாய் 6 இல், கிரகபாவம் 12, கல்வியியற் கல்லூரி ஆசிரியைக்கு மணமகன் தேவை.

075 509 6149

**S.L.A.S, S.L.E.A.S**

**சமுர்த்தி போட்டிப்பரீட்சைகளுக்கான வகுப்புக்கள்**

வடமராட்சி பரீட்சார்த்திகளின் நன்மை கருதி பிரபல ஆசிரியர்களால் மேற்படி வகுப்புக்கள் நெல்லியடி NSB வங்கி மேல்மாடியில் 13.02.2016 சனிக்கிழமை காலை 9.00 மணிக்கு ஆரம்பமாகவுள்ளது.

தொடர்பு:- 0778760992

Majestic Cineplex Jaffna

**கார்கில்ஸ் ஸ்குவெயர்**

(யாழ் போதனா வைத்தியசாலை எதிரில்)

இப்பொழுது திரையில்




விசாரணை 021-2227712

Ceylon Theatres
www.ceylontheatres.lk

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யாழ்ப்பாணம் மாநகரசபை

### யாழ்.பொது நூலக சிற்றுண்டிச்சாலையைக் குத்தகைக்கு வழங்குவதற்கான

## கேள்வி அறிவித்தல்-2016

யாழ்.பொது நூலக சிற்றுண்டிச்சாலையை 16.03.2016 ஆம் திகதி முதல் 31.12.2016 ஆம் திகதி வரையான காலப்பகுதிக்குக் குத்தகைக்கு வழங்குவதற்கான அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகள் யாழ்ப்பாணம் மாநகர சபையினால் கோரப்படுகின்றன.

**கேள்விப்படிவக் கட்டணம்** - ரூபா.500.00 (வரி நீங்கலாக)
**கேள்விப்படிவம் விநியோகித்தல்** - 05.02.2016 - 18.02.2016ஆம் திகதி வரை
**கேள்விப் படிவம் ஏற்றுக்கொள்ளல்** - 19.02.2016 முற்பகல் 9.30 மணிவரை
**கேள்வி திறத்தல்** - 19.02.2016 முற்பகல் 10மணிக்கு

**குறிப்பு:**

1. கேள்வியில் சித்தி பெறுபவர் குத்தகைக்கு எடுக்கத்தவறின் இரண்டாவது கேள்விதாரருக்குச் சந்தர்ப்பம் வழங்கப்படமாட்டாது.
2. கேள்விப் படிவக்கட்டணம்,கேள்வித் தொகை என்பவற்றுக்கு 11% VAT, 2%NBT சேர்த்துச் செலுத்துதல் வேண்டும்.
3. கேள்விப்பத்திரம் பெற வருபவர்கள் அடையாள அட்டை சமர்ப்பிப்பதுடன் அதன் ஒளிப்படப் பிரதியும் சமர்ப்பித்தல் வேண்டும். மேலும் தங்கள் பகுதி கிராம சேவையாளர் மூலம் தங்கள் வதிவிடத்தை உறுதிப்படுத்த வேண்டும்.

04. சமர்ப்பிக்கப்பட்ட கேள்விகளை ஏற்றுக்கொள்ளும் அல்லது நிராகரிக்கும் உரிமை யாழ்.மாநகர சபைக்கே உரியது.

05. கேள்விப் பத்திரங்களைப் பெறுபவர்கள் முன்பு மாநகரசபைக்கு எந்த வித கொடுப்பனவும் செலுத்த முடியாத காரணத்தால் கறுப்புப் பட்டியலில் சேர்க்கப்பட்டவராக இருத்தல் கூடாது.

| விவரம் | மீளளிக்கக்கூடிய கேள்விப் பிணைப்பணம் | ஏற்றுக்கொள்ளக்கூடிய ஆகக் குறைந்த கேள்வித்தொகை (வரி நீங்கலாக) |
|---|---|---|
| 1.யாழ்.பொது நூலக சிற்றுண்டிச்சாலை. | 5.000.00 | 190.000.00 |

மேலதிக விவரங்களை மாநகர சபையின் நானாவித இறைவரிப்பகுதியில் அலுவலக நேரங்களில் பெற்றுக் கொள்ளலாம்.

பொ.வாகீசன்
ஆணையாளர்,
யாழ்.மாநகரசபை.

மாநகரசபை அலுவலகம்,
யாழ்ப்பாணம்.

(அ/26998)(11.16.18)

## வேலை வாய்ப்பு

எமது நிறுவனம் உணவு உற்பத்தி செய்யும் பிரசித்தி பெற்ற நிறுவனமாகும். அதி உயர் சம்பளம் பெற்றுக்கொள்ளலாம். பிஸ்கட்,சொக்லேட்,கிளவுஸ், குளிர் பானம்,லேபல் பொதியிடல் பிரிவுகளுக்கு OT - 150-மாத சம்பளம் Rs. 45000 மேல். திறமையானவர்களுக்கு. விசேட கொடுப்பனவு கொடுக்கப்படும். உணவு தங்குமிடம் முற்றிலும் இலவசம் நாள் சம்பளம்,கிழமை சம்பளம் பெற்றுக்கொள்ளலாம். (மொதம் ஒரு முறை போனஸ் Rs.25.000)பெற்றுக் கொள்ளலாம்.
(வயது - 18-55)

**076 915 5233, 077 165 7473**

## சோதிடம் 077 899 6281

ஜாதகம், கைரேகை, எண் விஞ்ஞானம் மூலமாக உங்களின் பலன்களை அறிந்திடவும் திருமணம் எப்படிஎன்பதைத் தெரிந்து கொள்ளவும் நாடுங்கள். வீடு, கட்டடம் அமைப்பதற்கான நிலையமும் வகுத்துத் தரப்படும்.

**'சிவா சோதிடம்'**
**இல.100,அரசடி வீதி,கந்தர்மடம், யாழ்ப்பாணம்.**
(யாழ்.இந்து மகளிர் கல்லூரியடி)



கோண்டாவில் கிழக்கு பொற்பதி வீதி,
பழைய காளிகோயில் என விளங்கும்
## திருவருள் மிகு ஸ்ரீ சிவமஹாகாளி அம்பாள் தேவஸ்தானம்

## 11 ஆம் ஆண்டு மஹோற்சவம் - 2016

**அம்பிகை அடியார்களே!**

மேற்படி எமது ஆலயத்தில் 08.02.2016 திங்கட்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு கொடியேற்றமும்
17.02.2016 புதன்கிழமை இரவு திருமஞ்சமும்
20.02.2016 சனிக்கிழமை இரவு சப்பறமும்
21.02.2016 ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு பஞ்சரதபவனியும்
22.02.2016 திங்கட்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு தீர்த்தோற்சவமும் இரவு கொடியிறக்கமும்.
26.02.2016 வெள்ளிக்கிழமை பகல் காத்தவராயர். ஆஞ்சநேயர் அபிஷேகம். காத்தவராயர் மடையும் (சுளகு மடையும்)
இரவு ஆஞ்சநேயர் உற்சவமும் இடம்பெறுவதோடு

சிவராத்திரி அன்று (07.03.2016) திங்கட்கிழமை இரவு ஆசிமட அரசடி விநாயகர் ஆலயத்திலிருந்து அடியார்கள் நான்கு சாமமும் தீர்த்தக்காவடி எடுத்து வந்து இங்கு வீற்றிருக்கும் காசி ஈஸ்வர லிங்கத்துக்கு தங்கள் கைகளினால் அபிஷேகம் செய்யலாம் (பால் காவடியும் எடுக்கலாம்) என்பதை அறியத்தருவதோடு அடியார்கள் அனைவரும் வருக அன்னையின் திருவருள் பெறுக.

(68629) (3.17)

அம்பாளின் தொண்டில், **அறங்காவலர்.**

# கோகில்ஸ் பேபி நீட்ஸ் & பான்சி

# கடைத் திறப்பு விழா





நெல்லியடியில் இயங்கும் கோகில்ஸ் பேபி நீட்ஸ் & பான்சி கடை புதுப் பொலிவுடனும், நவீன வசதியுடனும்
05.02.2016 வெள்ளிக்கிழமை காலை 7.00 மணிதொடக்கம் 9.00 மணிவரை வரும் சுபநேரத்தில்

## இல.45, பிரதான வீதி, நெல்லியடியில்

திறந்து வைக்கப்படும். வாடிக்கையாளர்கள், அன்பர்கள், ஆதரவாளர்கள் அனைவரும் வருகை தந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## புதிய நிர்வாகம் தெரிவு

சாவகச்சேரி,பெப்.5
மீசாலை தெற்கு மதுவன் சனசமூக நிலையத்தின் பொதுக் கூட்டம் அண்மையில் நிலைய மண்டபத்தில் இடம் பெற்றது. இதில் புதிய நிர்வாகத் தெரிவில் தலைவராக வல்லிபுரம் நாகலிங்கம், உப தலைவராக நாகன் சரவணமுத்து, செயலாளராக வசந்தகுமார் வநக்ஷன், உதவிச் செயலாளராக நாகசுந்தரம் நிரூசன், பொருளாளராக பரிகரன் நிதுர்சன் ஆகியோரும், ஒன்பது பேர் கொண்ட நிர்வாக சபை உறுப்பினர்களும் தெரிவுசெய்யப்பட்டனர்.

(ஜ-9)


## கண்ணீர் அஞ்சலி



உரும்பிராய் ஓடையம்பதி கற்பக விநாயகர் ஆலயத்தின் முன்னாள் பிரதம குருக்களான பொன்னையா குருக்களின் பேரனும், குமாரசாமி குருக்கள் - சிதம்பரேஸ்வரி அம்மா (அம்மணி அம்மா) தம்பதியினரின் மகனுமாகிய

**ஸ்ரீஸ்கந்த புஸ்பநாத சர்மா** (ராசுக்குட்டி ஐயா)

அவர்களின் மறைவு குறித்து எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதுடன் அன்னாரது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

ஓடையம்பதி கற்பக விநாயகர் ஆலய பரிபாலன சபையினர்.
உரும்பிராய்.

(சி.29016)(13.16.17.18)

## ஐந்தாம் ஆண்டு நினைவு

திருமதி
**நீற்றா சுகிர்தம் யோண்** (யோண் அன்ரி)
(முன்னாள் முகாமையாளர் - யாழ். ப.நோ.கூ.சங்கம்)



மலர்வு
28.05.1932

உதிர்வு
05.02.2011

சிறுவயதில் தந்தையை இழந்த எம்மை
நல்வழிகாட்டி நல்ல பாடசாலையில்
கல்வி அறிவை ஊட்டி நல் நிலைக்கு உயர்த்திய அம்மா
தொழிற் சங்க வாதியாகவும் சமூக சேவகியுமாகிய தாயே!
ஐந்தாண்டுகள் சென்றாலும் என்றும் உமை நாம் மறவோம்.

*என்றும் நினைவில் வாழும்*

அன்ரன் கிளஸ்ரர் யோண் (ஓய்வுநிலை முகாமையாளர், மக்கள் வங்கி)
கெக்ரர் கேமன் யோண் (ஓய்வுநிலை பாதுகாப்பு பரிசோதகர் - யாழ்.பல்கலைக்கழகம்)
– பிள்ளைகள், கொழும்பு - 15

திருமதி யூலியானா மனுவல்பிள்ளை (சகோதரி - லண்டன்)
(ஓய்வுநிலை ஆங்கில ஆசிரியை-யாழ். சிங்கள மகாவித்தியாலயம்)

(68443) (13.15)

## ஈரவிழிகளுடன் 41 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவில்லும்

# வின்சன் வின் ஜக்ஷன்

யாழ்/பரியோவான் கல்லூரி பழையமாணவர்
(வர்த்தகப்பிரிவு - 2007)

பிறப்பு 1990.04.04 — இறப்பு 2015.12.25



எமது மருமகனின் திடீர் மறைவினால் ஆறாத்துயரில் ஆழ்ந்திருந்த வேளை உடன் வந்து ஆறுதல் அளித்த அன்பு நெஞ்சங்களுக்கும் துண்டுப் பிரசுரங்கள், பதாகைகள், மலர் வளையங்கள் வைத்து அஞ்சலி தெரிவித்தோருக்கும் இலங்கை பெந்தக்கோஸ் சபையினருக்கும் மற்றும் அவரின் இறுதி சடங்கின் போது தோளோடு தோள் நின்ற அனைத்து ஈழத்து திரைப்பட கலைஞர்களுக்கும் மற்றும் பல வழிகளிலும் உதவி ஒத்தாசை புரிந்தோருக்கும் எமது நெஞ்சம் நெகிழ்ந்த நன்றிகளை தெரிவித்துக்கொள்கின்றோம்.

குடும்பத்தினர்.
திரு.திருமதி ஜெயக்குமாரன்
(P.J.பர்ணாண்டோ)
131, பிரதான வீதி,
யாழ்ப்பாணம்.

(68486)
(13.16.17.18)

## இரண்டாம் ஆண்டு நெகிழல் நாள்



பிறப்பு 30 . 05 . 1942

இறப்பு 28 . 01 . 2014

### அமரர் நாகப்பு நல்லையா

*(ஓய்வு பெற்ற எழுதுவினைஞர், விவாகப் பதிவாளர்)*

ஆண்டுகள் இரண்டு கடந்தாலும் நினைவால்
இருநொடியும் கடக்க முடியவில்லையே
அதை ஏன் என்று அசைபோட உயிரோடு
மனமும் இசையவில்லையே பப்பா
எம்மை ஆறாத்துயரில் விட்டுப்போனதேனோ ?
புன்னகை புரியும் உங்கள் முகம்
எமக்கு தினமும் தெரிகிறது
ஆனாலும் அது உண்மையில்லை - என்று
நினைத்த பின் எம் மனம் கலங்குகிறது
என்றும் உங்கள் ஆத்மா எங்களுடன் இருக்கும் பப்பா
தினமும் கண்ணீர் விட்டபடி நிற்கும்.....
உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

*ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!*

பிரகாஸ்பதி, மாலானந்தை,
புலோலி வடமேற்கு, புலோலி.

021 226 3984

உங்கள் அன்பு மனைவி,
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

## இன்று இருபத்துமூன்றாவது ஆண்டு அமரத்துவ அஞ்சலி

மலர்வு:26-04-1926
உதிர்வு:19-01-1993



திதி 05.02.2016 இன்று

அமரர் உயர்திரு இ. ச. பேரம்பலம் (E. S. P) அவர்கள்

காரைநகர் - வாரிவளவு

FOUNDER OF E. S. P. GROUP - JAFFNA - COLOMBO

ஏற்றமுடன் நிகழ்வதற்கு

நீவிர் விதைத்த விதைகள் நிழல் தரும் விருட்சங்களாயிற்று. வருடங்கள் இருபத்து மூன்று வந்து போனாலும் திருவடித் தாமரைகளை என்றும் தியானித்தே வாழ்ந்திடுவோம்.

நீங்காத நினைவுகளுடன் குடும்பத்தினர்கள்.

இ. ச. பேரம்பலம் சக நிறுவனம்
கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

கணேச பவனம்
வாரிவளவு,
காரைநகர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உருவச்சிலை திறப்பு விழா

யாழ்ப்பாணம்,பெப்.5
பாசையூர்கடற்கரையில் அமைக்கப்பட்ட பாசையூர் புனித அந்தோனியார் ஆலயத்தின் முன்னாள் பங்குத்தந்தை விக்ரர் டெலான் அடிகளாரின் உருவச்சிலை திறப்பு விழா இன்று வெள்ளிக்கிழமை மாலை 5 மணிக்கு இடம் பெறவுள்ளது.
இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக அமலமரித்தியாகிகளின் வடமாகாண முதல்வர் அருட்பணி எட்வின் வசந்தராஜா அடிகளாரும், சிறப்பு விருந்தினர்களாக பாசையூர் புனித அந்தோனியார் ஆலயத்தின் பங்குத் தந்தை அருட்பணி சி.லியோ ஆம்ஸ்ரோங் அடிகளார், வடமாகாணசபைஉறுப்பிரும்விளையாட் டுத்துறை இணைப்பாளருமான இ.ஆனோல்ட் ஆகியோரும் கலந்து கொள்ளவுள்ளனர். (ற-ஜ-23)

## சைவசித்தாந்த நூல் இறுவட்டு வெளியீடு

யாழ்ப்பாணம்,பெப்.5
திருமறைக்கலா மன்றத்தின் 'மெய்யியல் துளிகள்' சைவ சித்தாந்த நூல் இறுவட்டு வெளியீட்டு நிகழ்வு, நாளை சனிக்கிழமை மாலை 4.30 மணிக்கு யாழ். பிரதான வீதியில் அமைந்துள்ள கலைத் தூது கலையகத்தில் நடைபெறவுள்ளது.
யாழ்.பல்கலைக் கழக இந்து நாகரிகத்துறை ஓய்வு நிலை சிரேஷ்ட விரிவுரையாளர் திருமதி நாச்சியார் செல்வநாயகம் தலைமையில் இடம்பெறும் நிகழ்வில், சிறப்புரையை திருநெல்வேலி பரமேஸ்வரா வித்தியாலய அதிபர் ந.விஜயசுந்தரமும், நூலுக்கான அறிமுகவுரையை யாழ்.பல்கலைகழக நுண்கலைத்துறைத் தலைவர் பேராசிரியர் ஏ.என்.கிருஷ்ண வேணியும் ஆற்றவுள்ளனர்.
திருமறைக் கலா மன்றத்தின் கலைத்தூது அழகியல் கல்லூரி மாணவிகள்வழங்கும்'பொழிவும் தெளிவும்' என்னும் ஆடல் அளிக்கை நிகழ்வும் இடம்பெறவுள்ளது. (ற-ஜ-23)

## சிறப்புச் சொற்பொழிவு

வடமராட்சி, பெப்.5
தொண்டமானாறு சந்நிதியான் ஆச்சிரம சைவக் கலைப் பண்பாட்டுப் பேரவை, சந்நிதியான் ஆச்சிரம மண்டபத்தில் நடத்தி வரும் வாராந்த நிகழ்வு வரிசையில் இன்று வெள்ளிக்கிழமை முற்பகல்10.30மணிக்கு "பகவத்கீதை - மகாபாரத மகிமை" என்னும் தலைப்பில் சிறப்புச் சொற்பொழிவு இடம் பெறும். (ற-ஜ-173)

## நிர்வாகசபைத் தெரிவு

கொழும்புத்துறை, பெப்.5
கொழும்புத்துறை ஜே/62 கிராம அபிவிருத்திச் சங்கத்தின் அங்குரார்ப்பணமும், புதிய நிர்வாக சபைத் தெரிவும் கடந்த புதன்கிழமை நடைபெற்றது.
அதில் தலைவராக க.சரவணபவனும், செயலாளராக இ.விஜயகுமாரும், பொருளாளராக இ.காங்கேயனும், உப தலைவராக ந.இரட்ணசிங்கமும், உபசெயலாளராக க.இராசதுரையும், போசகராக வி.மனோகரனும் தெரிவு செய்யப்பட்டனர். (ற-ஜ-135)

# யாழ். மாநகர சபைப் பகுதியில் இதுவரை 532 பேருக்கு டெங்கு

யாழ்ப்பாணம், பெப்.5
யாழ். மாநகரசபைப்பிரதேசத்தில் கடந்த காலத்தில் 532 பேர் டெங்குத் தொற்றுக்கு உள்ளாகியுள்ளனர். 3 வயதுக் குழந்தை ஒன்றும்டெங்குத்தொற்றால் இறந்துள்ளது என சுகாதாரப் பகுதியினர் தெரிவித்தனர்.
கடந்த திங்கட்கிழமை யாழ். பிரதேச செயலகத்தில் நடைபெற்ற ஒருங்கிணைப்புக்குழுக் கூட் டத்தில் சுகாதாரம் தொடர்பான விடயங்கள் ஆராயப்பட்ட போதே இந்தத் தகவல்கள் தெரிவிக்கப்பட்டன.
டெங்குத்தொற்றைப்பரப்பும்நுளம்புக் குடம்பிகள் காணப்படும் இடங்கள் கண்டுபிடிக்கப்பட்டு, அதனைத் தடுக்கும் நடவடிக் கைகள் மேற்கொள்ளப்பட்டு வரு கின்றன.
அதில் கழிவகற்றல் முகாமைத்துவம், வடிகாலமைப்பு புனரமைப்பு என்பன பெரும் பங்காற்றுகின்றன. இவைசீராகமேற்கொள்ளப்படுகின்ற போதும், குப்பைகளைத் தரம் பிரித்துப் போடுவதாலும் டெங்குத் தொற்றைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரலாம் எனவும் சுகாதாரப் பிரிவினர் தெரி வித்துள்ளனர்.
போர்இடம்பெற்றபோதுபுலிகளின் தாக்குதலுக்கு அஞ்சி இராணுவத்தினர் வடிகால்களை மூடினர். இதனால்மக்கள்பெரும் அவலங்களை எதிர்கொண்டனர்.
அதில் சில திறக்கப்பட்டு சீரமைக்கப்பட்டபோதிலும், சிலவடிகால்கள் தற்பொழுதும் சீரமைக்கப்படாமலே காணப்படுகின்றன. மேலும் மாநகரசபையில் வளப் பற்றாக் குறை, ஆளணிப்பற்றாக்குறை தொடர்ந்தும் காணப்பட்டு வருகின்றது. இவை நிவர்த்தி செய்யப்படவேண்டும் என மாகாண சபை உறுப்பினர் விந்தன் கனகரட்ணம் தெரிவித்தார்.

> டெங்குத் தொற்றைப் பரப்பும் நுளம்புக் குடம்பிகள் காணப் படும் இடங்கள் கண்டுபிடிக் கப்பட்டு அதனைத் தடுக்கும் நடவடிக்கைகள் மேற் கொள்ளப்பட்டு வரு கின்றன.

வடிகால்கள் மூடிக்கட்டப்படுவதால்அவற்றைச் சீர் செய்ய முடியாத நிலை ஏற்பட்டுத் தண்ணீர் தேங்கித் தொடர்ந்து வெளியேற முடியாத நிலை ஏற்படுகிறது. இதுபெரிய சுகாதாரச் சீர்கேடாகக் காணப்படுகிறது. இவை சீர் செய்யப்பட வேண்டும் எனவும் யாழ்ப்பாணத் தில் 35 குளங்களைத் திருத்து வதற்கு நிதி ஒதுக்கப்பட்ட போதிலும் அதில் ஒரு சில குளங்களே திருத்தப்பட்டன.
இதற்கு ஒதுக்கப்பட்ட நிதி எங்கு எப்படிச் சென்றது எனத் தெரிய வில்லை என பேராசிரியர் பால சுந்தரம்பிள்ளை கேள்வி எழுப்பினார்.
இதேவேளை இடர் முகாமைத்துவத் திட்டத்தால் கடந்த 2014 ஆம் ஆண்டு இறுதியில் 8 வாய்க்கால்களுக்கு 8 மில்லியன் நிதி ஒதுக்கித் தூய் மைப்படுத்திக் கொடுக்கப்பட்ட போதிலும், மீளவும் 3 மாதங்களில் அவை அதே நிலைக்கு வந்ததன் காரணத்தால், 2015 ஆம் ஆண்டு நிதி கோர முடியாத நிலை தோன்றியது. இதனைக் கவனத்தில் கொண்டு மாநகர சபை கண்காணிப்பு நட வடிக்கையில் ஈடுபட்டு இப்படியான நிலை மீண்டும் ஏற்படாத நிலைக்குக் கொண்டு வர வேண்டும் எனக் கூறப்பட்டது.
இந்தக் குறைபாடுகளை நிவர்த்தி செய்வதற்கு மாநகரசபைக்கு பொருத்தமான அதிகாரி மற்றும் இதனுடன் தொடர்புடைய பிற அதிகாரிகள் வரவழைக்கப்பட்டு தனியான ஒரு கூட்டம் கூட்டி முடிவெடுக்க வேண்டும்என இணைத் தலைவர்களில் ஒருவரான மாவை சேனாதிராசா தெரிவித்தார். (ற-ஜ)

## சிறுவர் மனவடு தொடர்பான பயிற்சி

யாழ்ப்பாணம், பெப்.5
சாந்திகம் நிறுவனத்தின் ஒழுங்குபடுத்தலில் சிறுவர் மனவடு தொடர்பான அரைநாள் பயிற்சி நிகழ்வு நாளை 6 ஆம் திகதி சனிக்கிழமை காலை 9 மணி தொடக்கம் பிற்பகல் 1.30 மணி வரை யாழ்.மாவட்டச்செயலக கேட்போர் கூடத்தில் இடம்பெறவுள்ளது.
இந்த பயிற்சிகளை லண்டனில் இருந்து வருகைதரும் சிகிச்சை உளவியலாளர்கள் பேராசிரியர் வில்லியம் யூலி, சாமில் ஆகியோர் வழங்கவுள்ளனர் என்று சாந்திகம் நிலைய பணிப்பாளர் வி.முருகதாஸ் தெரிவித்துள்ளார். (ற-ரி2)

## கௌரவிப்பும் பரிசளிப்பு விழாவும்

யாழ்ப்பாணம்,பெப்.5
யாழ். இந்துக் கல்லூரியின், மூத்த பழைய மாணவர்கள் கௌர விப்பும், சதுரங்கப் போட்டிப் பரிசளிப்பு விழாவும் நாளை மறுதினம் ஞாயிற்றுக் கிழமை பிற்பகல் 3 மணிக்கு கல்லூரியின் சபாலிங்கம் அரங்கில் நடைபெறவுள்ளது.
இந்த நிகழ்வில் பிரதமவிருந்தினராக பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளரும், யாழ். இந்துவின் முன்னாள் சதுரங்க அணி வீரருமான க. நந்தகுமாரன் கலந்து கொள்ளவுள்ளார் என கல்லூரியின் பழைய மாணவர் சங்கத்தினர் தெரிவித்துள்ளனர். (ஜ-ரி5)

# அச்சுவேலி சங்கக் கட்டடத்தை இராணுவம் விடுவிக்க வேண்டும்

### ஒருங்கிணைப்புக் கூட்டத்தில் சங்கத் தலைவர் கோரிக்கை

யாழ்ப்பாணம், பெப்.5
அச்சுவேலி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கக் கட்டடத்தில் உள்ளஇராணுவத்தினர்அதனை விட்டு வெளியேறாத பட்சத்தில் கட்டடத்தைச் சுற்றியுள்ள ஒன்பது வீடுகளிலும் மக்கள் குடியமர்வது சாத்தியமற்ற ஒன்று - என அச்சுவேலி பலநோக்குக் கூட்டுறவுச்சங்கத் தலைவர் தெரிவித்துள்ளார்.
வலிகாமம் கிழக்கு, கோப்பாய் பிரதேச ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டத்திலேயே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.
இராணுவத்தால் பாதுகாப்புச் செயற்பாடுகளுக்காக அச்சுவேலி பல நோக்குக் கூட்டுறவுச் சங்கக் கட்டடம் மற்றும் சுற்று வட்டாரப் பகுதிகள் 1992 ஆம் ஆண்டில் கைப்பற்றப்பட்டன.
கூட்டுறவுச் சங்கத்தைச் சுற்றியுள்ள ஒன்பது வீடுகளையும் காணிகளையும் மட்டும் விடுவித்து விட்டு தொடர்ந்தும், கூட்டுறவுச் சங்கக் கட்டடத்தில் தம்முடைய படை முகாமை அமைத்து இராணுவச் செயற்பாடுகளை முன்னெடுத்து வரும் நிலை ஏற்பட்டால், மக்களின் அன்றாட நடவடிக்கைகள் பாதிக்கப்படும்.
கூட்டுறவுச்சங்கக் கட்டடத்தில் இராணுவம் தொடர்ந்து செயற்படுவதால் சூழவுள்ள பகுதிகளில் 'மீண்டும் குடியமர்வதற்கும் தாமதம் ஏற்படலாம் பல வருடங்களாக அதிக வருவாயும் தொழில் வாய்ப்புக்களை யும் ஏற்படுத்தும் சங்கமாக செயற்பட்டுவந்த அச்சுவேலி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் தற்போது தற்காலிகமான ஒரு கட்டடத்தொகுதியில் போதிய வசதிகள் அற்ற நிலையில் இயங்கி வருகிறது.
எனவே, மீண்டும் சொந்தக் கட்டடத் தொகுதியில் கூட்டுறவுச் சங்கம் செயற்படுவதற்கான நிலைமைகளை ஒருங்கிணைப்புக் குழுவினர் உருவாக்கித் தர வேண்டும் எனவும் கோரிக்கை விடுத்தார்.
இது தொடர்பில் கருத்து வெளியிட்ட வடமாகாண விவசாயத் துறை அமைச்சர் பொ.ஐங்கரநேசன், சங்கத் தொகுதியில் இராணுவ முகாம் இருப்பதால் மக்களுக்கு ஏற்படும் இடையூறுகள் தொடர்பில்பல்வேறு போராட்டங்களை வடமாகாண சபை உறுப்பினர்கள் முன்னெடுத்திருந்தனர்.
தற்போது சங்கத்தின் கட்டடத் தொகுதியை விடுவிப்பதற்கு இராணுவத்தினர் ஒரு மாதகால அவகாசம் கேட்டுள்ளனர்.
கூட்டுறவுச் சங்கத்தில் இராணுவச் செயற்பாடுகள் நிலவும் போது, ஒன்பது வீடுகளிலும் மக்கள் குடியமர்வதில் பின்னடைவு ஏற்பட்டுள்ளது.
எனினும் இந்தவிடயம் தொடர்பாக போதியகவனம் கூட்டுறவுச் சங்கத்தால் மேற்கொள் ளப்படவில்லை என்பதே இவர்களின் பிரதான கருத்தாகவும் உள்ளது -என்றார். (ற-ஐ-15)



சர்வோதய நிறுவனத்தின் அங்கமான தேசோதய சபையால் யாழ்.பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனைப் பயன்பாட்டுக்கென் சைக்கிள்கள் மற்றும் நீர்வடிகட்டி(பில்டர்) என்பவை அன்பளிப்புச் செய்யப்பட்டுள்ளன. அரியாலை கண்டி வீதியில் உள்ள சர்வோதய நிறுவனத்தில் தேசோதய சபையின் யாழ்.மாவட்டக்கிளை அலுவலகத்தைக் கடந்த முதலாம் திகதி சர்வோதய அமைப்பின் தேசிய செயலாளர் வின்னியா ஆரியரத்னா திறந்து வைத்தார். குறித்த நிகழ்வின் போது சுகாதார சேவைகள் திணைக்கள ஊழியர்களது பயன்பாட்டுக்கென 10 சைக்கிள்கள், 3 நீர்வடிகட்டி என்பவற்றை சர்வோதய செயலாளர் வின்னியா ஆரியரத்னா யாழ்.பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் நந்தகுமாரிடம் கையளித்தார். (ற-ஜ-135)

# நூலக நேரம் நீடிப்பு

சாவகச்சேரி, பெப்.5
சாவகச்சேரி நகரசபையின் பொது நூலக வாசிப்புப் பிரிவு மாலை 6.30 மணி வரை செயற்பட்டு வருகிறது.
நூலக வாசிப்புப் பிரிவை இரவு 8 மணிவரை இயங்கவைக்குமாறு வாசகர்கள் விடுத்த வேண்டுகோளையடுத்து, சபையின் அபிவிருத்தி ஆலோசனைக் குழுவின் பரிந் துரையின் பேரில் இதுவரை காலமும் மாலை 5 மணியுடன் மூடப்பட்ட பொது நூலக வாசிப்புப் பிரிவு கடந்த முதலாம் திகதி தொடக்கம் மாலை 6.30 மணி வரை திறந் திருக்குமென சபையின் செயலாளர் கா.சண்முகதாசன் அறிவித்துள்ளார்.
1995 ஆம் ஆண்டுக்கு முன்னர் சாவகச்சேரி பொது நூலக வாசிப்புப் பிரிவு இரவு 8 மணி வரை இயங்கியமை குறிப்பிடத் தக்கது. (ற-ஜ-9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பனம் கைப்பணிப் பயிற்சி நிலையம் இன்று திறப்பு

யாழ்ப்பாணம்,பெப்.5

பனை அபிவிருத்தி சபை மன்னார் மாவட்டத்தில் மூன்று பனம் கைப்பணிப் பயிற்சி நிலையங்களைத் திறக்கவுள்ளது. இன்று வெள்ளிக்கிழமை இவை திறக்கப்படவுள்ளன.

சாந்தபுரம், தோட்டவெளி மற்றும் மாந்தை பாலைப் பெருமாள்கட்டு ஆகிய பகுதிகளில் இந்த மூன்று பனம் கைப்பணிப் பயிற்சி நிலையங்களும் ஆரம்பித்து வைக்கப்படவுள்ளன.

பனை அபிவிருத்தி சபையின் மன்னார் மாவட்ட இணைப்பாளர் யஸ்ரின் பெனில்டன் பீரிஸ் தலைமையில் நடைபெறும் ஆரம்ப விழாவில் பிரதம விருந்தினராக சபையின் தலைவர் மாரிமுத்து கணபதிப்பிள்ளை கலந்து கொள்ளவுள்ளார்.

கௌரவ விருந்தினராக சபையின் விரிவாக்க முகாமையாளர் கே.கோபாலகிருஷ்ணன் மற்றும் சிறப்பு விருந்தினராக சபையின் சிறுசுவடுகள் அமைப்பின் தலைவி பவானி தங்கத்துரை ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

இந்தப் பயிற்சி நிலையம் ஒவ்வொன்றிலும் 25 வரையிலான பயனாளிகள் இணைக்கப்பட்டு பனம் கைப்பணி தொடர்பான பயிற்சிகள் வழங்கப்படும்.

இந்தப்பயிற்சிகள்தொடர்ந்து ஆறு மாதங்களுக்கு நடைபெறும். பயிற்சிக் காலத்தில்பயனாளிகளுக்குபயிற்சிக்கான மூலப்பொருள்கள் வழங்கப்படும்.

அத்துடன் பயிற்சியின் நிறைவில் அவர்களுக்கு பனம்கைப்பணியைஊக்குவிப்பதற்கான உபகரணங்கள் மற்றும் சான்றிதழ்களை பனை அபிவிருத்தி சபை வழங்கும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ற-ஐ-17)

# பஸ்களுக்கான இணைந்த நேர அட்டவணை முதலாம் திகதி முதல்

## வடக்கு போக்குவரத்து அமைச்சர் தெரிவிப்பு



கிளிநொச்சி, பெப்.5

பொதுமக்களுக்குச்சிறப்பானபோக்குவரத்துச் சேவையை வழங்கும் விதத்தில் வடக்கு போக்குவரத்து அமைச்சரால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள பஸ்களுக்கு இடையிலான இணைந்த நேர அட்டவணை தயாரிக்கும் பணிகளில் இதுவரை மூன்று மாவட்டங்களுக்கான இணைந்த நேர அட்டவணைகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன.

மன்னார், வவுனியா, யாழ்ப்பாணம் ஆகிய மாவட்டங்களுக்குரிய இணைந்த நேர அட்டவணைகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன என்றும், ஏனைய இரு மாவட்டங்களுக்கான நேர அட்டவணை பூர்த்தி செய்யப்பட வேண்டியுள்ளது என்றும் போக்குவரத்து அமைச்சர் தெரிவித்துள்ளார்.

நேர அட்டவணை தொடர்பான விசேட கூட்டம் ஒன்று கடந்த முதலாம் திகதி யாழ். வீதி அபிவிருத்தித் திணைக்கள மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது. இந்தக் கலந்துரையாடல் காலை 9.30 மணிக்கு ஆரம்பமாகி இரவு 10 மணி வரை நடைபெற்றிருந்தது. அதன்போதே வடக்கு போக்குவரத்து அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

முதற் கட்டமாக, தனியார் மற்றும் இலங்கை போக்குவரத்து சபை தரப்புக்களுக்கு 60:40 என்னும் விகிதாசார அடிப்படையில் இணைந்த நேர அட்டவணையை தயாரித்து நடைமுறைப்படுத்தும் செயற்றிட்டம் கடந்த ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது. அதன் அடிப்படையில் தனியாருக்கும் இலங்கை போக்குவரத்து சபைக்கும் பாதகமற்ற வகையில் தற்போது வவுனியா, மன்னார், யாழ்ப்பாணம் ஆகிய மாவட்டங்களுக்கான நேர அட்டவணைகள் தயாரிக்கப்பட்டுள்ளன. ஏனைய இரண்டு மாவட்டங்களுக்கும் தயாரித்தபின்னர் எதிர்வரும் முதலாம் திகதி முதல் இதனை நடைமுறைப்படுத்தத் திட்டமிடப்பட்டுள்ளது- என்றும் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

இந்தக் கூட்டத்தில் வடக்கு போக்குவரத்து அமைச்சர் பா.டெனீஸ்வரன், அமைச்சின் செயலாளர் எஸ்.சத்தியசீலன், வவுனியா மற்றும் கிளிநொச்சி மாவட்ட செயலகங்களின் பிரதான கணக்காளர்கள், தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவின் வடக்கு இணைப்பாளர் சுபரகம மற்றும் வடக்கு தனியார் பஸ் ஒன்றியத்தின் பொருளாளர் ஆகியோர் கலந்து கொண்டனர்.

(ற-21)

# வெள்ளத்தில் மூழ்கும் பகுதிகளுக்கு வன்னியில் இருந்து மண் பெறலாம்

## ஒருங்கிணைப்புக் கூட்டத்தில் ஆலோசனை

வெள்ள இடரில் மூழ்கும் யாழ்ப்பாணத்திலுள்ள தாழ் நிலப் பகுதிகளுக்கு மண் நிரப்புவதற்கான மண்ணைப்பெறுவதற்கு வன்னி மாவட்டத்தில் கொக்காவிலிலோ, முறிகண்டியிலோ ஓர் இடத்தைத் தெரிவு செய்து கொள்ளலாம்.

> “ வருடா வருடம் சூரிய வெளிக் கிராமம் வெள்ளத்தில் மிதக்கும் ஒரு கிராமம். ”

இந்த மண் அகழ்வதன் மூலம்யாழில்மண்தேவையுடன் வன்னிப் பிராந்தியத்தில்குளம் ஒன்றை உருவாக்கிக் கொள்வதோடு , எதிர்காலத்தில் குடிதண்ணீர்ப் பிரச்சினையையும் தீர்த்துக்கொள்ளலாம் என நாடாளுமன்றஉறுப்பினர் சி.சிறிதரன் தெரிவித்துள்ளார்.

கடந்த திங்கட்கிழமை யாழ். பிரதேச செயலகத்தில் நடைபெற்ற ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டத்திலே அவர் இந்தக் கருத்தைத் தெரிவித்துள்ளார்.

வருடா வருடம் சூரிய வெளிக்கிராமம் வெள்ளத்தில் மிதக்கும் ஒரு கிராமம். அந்தக் கிராமத்தை நாம் வளப்படுத்திக் கொள்ள வேண்டும். வருடா வருடம் அந்த மக்களுக்குநிவாரணப்பொருள்களை வழங்காது நிரந்தரத் தீர்வை நாம் பெற்றுக் கொடுக்கவேண்டும் என மாகாணசபை உறுப்பினர் ஆனல்ட் இந்தக் கூட்டத்தில் கேட்டுக்கொண்டார்.

தற்பொழுது வெள்ளத்தால் மூழ்கும் கிராமங்கள் ஆரம்பகாலங்களில் விவசாயக் காணிகளாக இருந்தன. இந்தக் காணிகளுக்கு நிரந்தரத் தீர்வை நாம் பெற்றுக் கொடுக்க வேண்டும். வெளியான இடங்களில் இருந்து மண் அகழ்வை மேற்கொண்டு இரண்டு அடி உயரத்துக்கு இந்தக் கிராமங்களுக்கு மண்ணை நிரப்புவதன் மூலம் இதற்கொரு தீர்வைப் பெற்றுக் கொள்ளலாம் என பேராசிரியர் பாலசுந்தரம்பிள்ளை தெரிவித்தார்.

கடந்த தொடர் மழை இடரால் கடற்றொழிலாளர்கள் தொழி லுக்குச் செல்லவேண்டாம் என அறிவிக்கப்பட்டிருந்தது. அதனால், அவர்களின் வாழ்வாதாரம் மிகவும் நெருக்கடிக்குள் தள்ளப்பட்டது.

அந்த நேரத்திலும் அவர்களுக்கு இடர் முகாமைத்துவத்தினால் எந்தவித நிவாரணமும் வழங்கப்படவில்லை. அத்துடன்போரால் பாதிக்கப்பட்ட மீனவர்களுக்கும் எந்தவித நிவாரணமும் வழங்கப்படவில்லை. இவற்றைக் கவனத்தில் எடுக்கவேண்டும், இவர்களுடைய வாழ்வாதாரப் பிரச்சினையை தீர்த்துக் கொள்ள வேண்டும் என்றும் கூட்டத்தில் மாகாணசபை உறுப்பினர் ஆனல்ட் கேட்டுக் கொண்டார்.

(ற-ஐ-ரி4)



முல்லைத்தீவு கல்வி வலயத்தின் கொக்குத்தொடுவாய் அரசினர் தமிழ் கலவன் பாடசாலையில் புதிதாகக் கட்டப்பட்ட மாடிக்கட்டடம் வடக்கு மாகாண கல்வி அமைச்சர் த.குருகுலராஜாவால் திறந்து வைக்கப்பட்டது. உலக வங்கி நிதியின் கீழ் அமைக்கப்பட்ட குறித்த புதிய மாடிக் கட்டட திறப்பு விழா கொக்குத்தொடுவாய் அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை அதிபர் ந.விஜயரத்தினம் தலைமையில் இடம்பெற்றது. வட மாகாண சபை பிரதி அவை இணைத் தலைவர் ம. அன்ரனி ஜெயநாதன் மற்றும் வலயக்கல்விப் பணிப்பாளர் திருமதி உதயராணி முனீஸ்வரன், வட மாகாண கல்வித் திணைக்கள தொழில்நுட்ப உத்தியோகத்தர் மற்றும் சிறுவர் பாதுகாப்பு நிதிய உத்தியோகத்தர்கள் மற்றும் கல்வித் திணைக்கள பிரதிக் கல்விப் பணிப்பாளர்கள், பொதுமக்கள் உட்படப் பலர் நிகழ்வில் கலந்து கொண்டனர். (ற-433)

# முல்லைத்தீவு நகரத்தில் திறக்கப்பட்ட மதுக்கடை தற்காலிகமாக மூடப்பட்டது

முல்லைத்தீவு, பெப்.5

முல்லைத்தீவு நகரை அண்டியதாக முல்லைத்தீவு மணற்குடியிருப்பு பகுதியில் அண்மையில் அமைக்கப்பட்ட மதுபான விற்பனை நிலையம் மாவட்ட அரச அதிபரால் தற்காலிகமாக மூடப்பட்டுள்ளது. பொதுமக்களின் வேண்டுகோளை அடுத்தே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

கடந்த மாதம் 24ஆம் திகதி குறித்த மதுபானசாலை மாவட்டத்தின் நகரப்பகுதியான மணற்குடியிருப்பு பகுதியில் அமைக்கப்பட்டது. அதற்கு மிக அண்மையில் சிறுவர் பூங்கா காணப்படுகின்றது என்றும், முல்லைத்தீவு பகுதியின் சுற்றுலாப் பகுதியாகவும் இவ்வெளி காணப்படுகிறது எனவும் சுட்டிக்காட்டப்பட்டதுடன், சைவ, கத்தோலிக்க மற்றும் இஸ்லாம் மத அமைவிடங்களுடன் சுனாமி நினைவாலயம், சிறுவர் முன்பள்ளி மற்றும் கச்சேரி என்பவை 500 மீற்றர் தூரத்துக்குட்பட்டு இருக்கின்றன என்றும்- தெரிவிக்கப்பட்டது. அதனால் மதுபானசலையை மூட வேண்டும் என்று கோரிக்கை விடுக்கப்பட்டிருந்தது.

வடக்கு மாகாணசபை உறுப்பினர் [illegible], மணற்குடியிருப்பு கிராம, மாதர் கிராம அபிவிருத்திச்சங்கம், புனித பேதுரு ஆலய பங்குத்தந்தை, வண்ணாங்குளம் கிராம, மாதர்கிராம அபிவிருத்திச் சங்கம், வண்ணாங்குளம் சென் யூட்ஸ் கடற்றொழில் அமைப்பு, சென் மேரிஸ் கிராமிய கடற்றொழில் அமைப்பு, மஃறூப் சுபஹனி ஜீம் ஆ பள்ளிவாசல் நம்பிக்கையாளர் சபை, கோயிற்குடியிருப்பு கிராம, மாதர் கிராம அபிவிருத்திச்சங்கம், நெய்தல் கல்வி நிலைங்களாலும் முல்லைத்தீவு மாவட்ட அரச அதிபருக்கு மகனுக்கள் வழங்கப்பட்டிருந்தன. அத்துடன் கடந்த மாதம் இடம்பெற்ற முல்லைத்தீவு மாவட்ட ஒருங்கிணைப்பு குழு கூட்டத்தின் போதும் இந்த விடயம் பேசப்பட்டது.

அதையடுத்துகுறித்தமதுபானசாலையைத் தற்காலிகமாக மூடுமாறு முல்லைத்தீவு மாவட்ட அசர அதிபர் குறித்த மதுபான சாலையின் நிர்வாகத்தினருக்கு கடிதம் அனுப்பியுள்ளார். இதனை அடுத்து நேற்று முதல் குறித்த மதுபானசாலை மூடப்பட்டது. அந்தக் கடிதத்தின் பிரதிகள் வடமாகாண உதவி மதுவரி ஆணையாளர், வடக்கு மாகாணசபை உறுப்பினர்கள், உட்பட குறித்த மாதர்சங்கங்கள், பொது அமைப்புகளுக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. (ற-21)

## சைக்கிள் இலக்கத் தகடுகள் வரியிறுப்பாளருக்கு விநியோகம்

சாவகச்சேரி நகர சபையால் 2016 ஆம் ஆண்டுக்கான சைக்கிள் இலக்கத்தகடுகள் வரியிறுப்பாளர்களுக்கு விநியோகிக்கப்பட்டு வருகிறது.

சைக்கிள் இலக்கத் தகடுகளைப் பெறுவதில் வரியிறுப்பாளர்கள் ஆர்வங்காட்டி வருவதால் எதிர்வரும் மார்ச் 31 ஆம் திகதிக்கு முன்னர் உரிய கட்டணத்தைச் செலுத்தி, இலக்கத் தகட்டைப் பெற்று சைக்கிளில் பொருத்துமாறும் , ஏப்ரல் மாதம் முதலாம் திகதிக்குப்பின்னர் பொலிஸாரின் பரிசோதனைகளின் போதுஏற்படும் அசௌகரியங்களைத் தவிர்க்குமாறும் அறிவிக்கப்பட்டுள்ளது. (ற-ஐ-9)

## மின்சாரத் தடை

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின்விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக இன்று வெள்ளிக்கிழமை காலை 8.30 மணியிலிருந்துமாலை5மணிவரை மின்சாரம் தடைப்படும்.

யாழ்.மாவட்டத்தில்நாச்சிமார் கோயிலடி, இலந்தைக்காடு, கொற்றாவத்தை, பொலிகண்டி, ஆலடி, நெடியகாடு, அச்செழுப் பிரதேசம் ஆகிய இடங்களிலும், வவுனியா பிரதேசத்தில் சாம்பல் தோட்டம் கிராமம் ஆகிய இடங்களிலும், மன்னார் பிரதேசத்தில் மணற்குளம், சூரியகட்டைக்காடு ஆகிய பிரதேசங்களிலும் மின்விநியோகம் தடைப்பட்டிருக்கும் என வடமாகாண மின்வழங்கல் கட்டுப்பாட்டு நிலையம் அறிவித்துள்ளது. (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கோப்பாய் பிரதேச செயலக பிரிவை இரு பிரிவுகளாக்குக

### ஒருங்கிணைப்புக் கூட்டத்தில் சிறிதரன் எம்.பி. தெரிவிப்பு

யாழ்ப்பாணம், பெப்.5

வலி. கிழக்கு, கோப்பாய் பிரதேச செயலகப் பிரிவை இரண்டாகப் பிரித்து அச்சுவேலியை மத்தியாகக் கொண்டு புதிய பிரதேச செயலகப் பிரிவொன்று உருவாக்கப்பட வேண்டும். அதற்கான நடவடிக்கைகள் சில மட்டங்களுடன் நிறுத்தப்பட்டுள்ளன. தொடர்ந்தும் பிரதேச பிரிப்பு நடை முறைகள் முன்னேடுக்கப்பட வேண்டும்.- இவ்வாறு வலி. கிழக்கு பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.சிறிதரன் தெரிவித்துள்ளார்.

வலி.கிழக்குப் பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் கடந்த திங்கட்கிழமை பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் மாவட்ட ஒருங்கிணைப்புக்குழுவின் இணைத் தலைவர்களான மாவை. சேனாதிராசா, இ.அங்கஜன் ஆகியோர் தலை மையில் நடைபெற்றது. அங்கு கருத்துத் தெரிவிக்கும் போதே நாடாளுமன்ற உறுப்பினர் சிறிதரன் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது-

வலி.கிழக்கு பிரதேச செயலகப் பிரிவு, யாழ்மாவட்டத்தில் ஆகக் கூடுதலான குடும்பங்களையும் கூடுதலான குடும்ப உறுப்பினர்களையும் கொண்டது. வலி. கிழக்கில் 22 ஆயிரத்து 708 குடும்பங்களும் 75 ஆயிரத்து 242 மக்களும் வாழ்கின்றனர். இதனை இரண்டாகப் பிரித்து அச்சுவேலியை மத்தியாகக் கொண்டு புதிய பிரதேச செயலகப் பிரிவொன்று நிறுவப்பட வேண்டும். அதே போன்று மிகக்கூடிய பரப்பளவைக் கொண்ட தென்மராட்சி பிரதேச செயலகப் பிரிவும் இரண்டு பிரிவுகளாகப் பிரிக்கப்பட வேண்டும். இதனைக் கால சூழலைக் கருத்தில் கொண்டு நிறைவு செய்ய வேண்டும்.- என்றார்.

இது குறித்து இணைத் தலைவரும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான மாவை.சேனாதிராசா கருத்துத் தெரிவித்தபோது

வலி.கிழக்கு, தென்மராட்சி ஆகிய இரண்டு பிரதேச செயலகப் பிரிவுகளை இரண்டாகப்பிரித்து புதிய பிரதேச செயலகப் பிரிவுகளை உருவாக்குவது தொடர்பான முன்மொழிவுகள் முன்னரே சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. இதனை நிறைவேற்றுவதற்கான உள்ளூராட்சிசபை செயற்பாடுகளில் தனியான பிரதேச நடைமுறைச் செயற்பாட்டுக்குரிய அமைப்புக்கள் உள்ளன. பிரதேச செயலகம் இவற்றினுடாக பிரதே சங்களைப் பிரிப்பதற்கான நடவடிக்கைகளை முன்னெடுக்கலாம் - என்றார். (ற-ரி5,1)

# 34 சுகாதாரத் தொண்டர்களுக்கும் உடன் நியமனம் வழங்க வேண்டும்

### தெல்லிப்பழை பிரதேச ஒருங்கிணைப்புகுழுக் கூட்டத்தில் தீர்மானம்

யாழ்ப்பாணம், பெப்.5

தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலையில் அமைய அடிப்படையில் கடமையாற்றும் 34 சுகாதாரத் தொண்டர்களுக்குமான நிரந்தர நியமனங்களை உடனடியாக வழங்க வேண்டும் என்று தெல்லிப்பழை பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

தெல்லிப்பழை பிரதேச ஒருங்கிணைப்புக்குழுக்கூட்டம் இணைத் தலைவர்களான நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சோ.சேனாதிராசா, நாடாளுமன்ற உறுப்பினர் இ.அங்கஜன் ஆகியோர் தலைமையில் கடந்த செவ்வாய்க் கிழமை நடைபெற்றபோதே மேற்படி தீர்மானம் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

வலி.வடக்கு பிரதேச சபை முன்னாள் உறுப்பினரும், தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலை நோயாளர் நலன்புரி சங்க செயலாளருமான லயன் சி.ஹரிகரன் குறித்த தீர்மானத்தை சபையில் முன்வைத்துக் கருத்துத் தெரிவித்தார். இது குறித்து அவர் தெரிவிக்கையில் -

தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலையில் அமைய அடிப்படையில் கடமையாற்றும் சுகாதாரத் தொண்டர்களுக்கான நியமனம் வழங்கல் இழுபறி நிலையில் உள்ளது. தற்போது அவர்களின் அமைய அடிப்படையிலான காலநீடிப்பு முடிவுறுத்தப்பட்டுள்ளது. சுகாதாரத் திணைக்களத்தினர் அவர்களை நியமித்தது கூட்டுறவுத் துறையே என்கின்றார்கள்.

தெல்லிப்பழை வைத்தியசாலையில் உள்ள சிற்றூழியர்களில் 90 வீதமானவர்கள் பெண்கள். வைத்தியசாலையின் கடினமான பணிகளை அவர்களே ஆற்றுகின்றனர். ஆனால், இந்த 34 சிற்றூழியர்களில் 20 பேர் ஆண்கள். இவர்கள் பலவருடங்களாக சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையின் கீழ் கடமையாற்றி, பின்னர் 4 வருடங்களுக்கும் மேலாக எமது வைத்தியசாலையில் கடமையாற்றி நிறைந்த அனுபவமுடையவர்கள். தற்போது அவர்களுக்கு அமைய அடிப்படையிலான சேவைக் காலநீடிப்பு வழங்காமையால், அவர்களில் பலர் கடமைக்கு வருவதை நிறுத்தி விட்டனர். இதனால் விடுதிச் செயற்பாடுகளில் பெரும் அசௌகரியத்தை வைத்தியசாலை எதிர் கொண்டுள்ளது. இவர்களுக்கான நிரந்தர நியமனம் உடன் வழங்கப்படுவ துடன், அதற்கு முன்னர் அவர்களின் அமைய அடிப்படை யிலான காலநீடிப்பையும் உடன் செயற்படுத்த வேண்டும். - என்றார்.

> நியமனம் தொடர்பில் வடக்கு மாகாண சுகாதார அமைச்சர் தன்னிடம் 700 சுகாதாரத் தொண்டர்களின் பெயர்ப் பட்டியல் உள்ளது. அந்தப் பட்டியலில் இவர்களின் பெயர்களும் உள்ளன. அனைத்தையும் சேர்த்து நிரந்தர நியமனம் வழங்குவோம் எனத் தெரிவித்துள்ளார் என்றார்.

இது குறித்து கருத்துத் தெரிவித்த நாடாளுமன்ற உறுப்பினரும் ஒருங்கிணைப்புக் குழுவின் தலைவருமான மாவை. சோ. சேனாதிராசா, குறித்த ஊழியர்களது நியமனம் தொடர்பில் வடக்கு மாகாண சுகாதார அமைச்சர் தன்னிடம் 700 சுகாதாரத் தொண்டர்களின் பெயர்ப் பட்டியல் உள்ளது. அந்தப் பட்டியலில் இவர்களின் பெயர்களும் உள்ளன. அனைத்தையும் சேர்த்து நிரந்தர நியமனம் வழங்குவோம் எனத் தெரிவித்துள்ளார் - என்றார்.

வடக்கு மாகாணசபை உறுப்பினர் சிவாஜிலிங்கம் குறுக்கிட்டு, மிகுதி ஆள்களுக்கான நியமனத்தைப் பின்னர் வழங்கட்டும். உடனடியாக தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலையிலுள்ள இந்த 34 சுகாதாரத் தொண்டர்களுக்கும் நியமனம் வழங்கப்படவேண்டும் என்ற தீர்மானத்தை நிறைவேற்றுங்கள் என்றார். இதுதொடர்பில் கருத்துத் தெரிவித்த இணைத் தலைவர்களுள் ஒருவரான இ.அங்கஜனும், தன்னிடமும் அவர்கள் இந்தக் கோரிக்கையை முன் வைத்தார்கள். உடனடியாக நியமனம் வழங்கப்படவேண்டும் என்றார். தீர்மானம் அவையால் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டு நிறைவேற்றப்பட்டது. (ற-5)

# வாகனச் சாரதிக்கு ரூ.9,000 அபராதம்

சாவகச்சேரி,பெப்.5

வீதியில் சென்றவர்களை மோதிக் காயப்படுத்திய வாகனச் சாரதியொருவருக்கு சாவகச்சேரி நீதிமன்றில் 9 ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டதுடன், காயமடைந்த ஒரு வருக்கு ஒரு லட்சம் ரூபா நட்ட ஈடு வழங்குமாறும் உத்தரவிடப்பட்டது.

விபத்தில் காயமடைந்த ஒருவர் தனக்கு நஷ்ட ஈடு வேண்டாமெனக் கூறியதையடுத்து, இரண்டாவது நபருக்கு நட்ட ஈடு வழங்குமாறும் உத்தரவிடப்பட்டது.

இதேவேளை பொலிஸாரின் சமிக் ஞையை மீறி வாகனத்தை நிறுத் தாமல் சென்ற மோட்டார் சைக் கிளோட்டி ஒருவருக்கு 18 ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டது.

கொடிகாமம் பொலிஸாரால் தாக்கல் செய்யப்பட்ட வழக்கில் குறித்த மோட்டார் சைக்கிளோட்டியை வீதி போக்குவரத்துச் சேவையில் ஈடுபட்டிருந்த பொலிஸார், வாகனத்தை நிறுத்துமாறு சமிக்ஞை செய்தபோது நிறுத்தாமல் சென்றதால் துரத்திப் பிடித்து சோதனை நடத்திய போது மது போதையில் ஆவணங்கள் எதுவுமின்றியும் தலைக் கவசமின்றியும் வாகனம் செலுத்திய நிலையில் அவர் மீது வழக்குத் தாக்கல் செய்திருந்தனர்.

வழக்கை விசாரித்த நீதிவான் மோட்டார் சைக்கிளோட்டி குற்றங்களை ஒப்புக் கொண்டதையடுத்து அனைத்துக் குற்றங்களுக்குமாக 18 ஆயிரம் ரூபா அபராதம் விதித்தார். (ற-ஐ-9)

# தங்க பிஸ்கட்டுகளை வைத்திருந்த பெண்ணுக்கு விளக்கமறியல்

யாழ்ப்பாணம். பெப். 5

7 கிலோ நிறைகொண்ட தங்க பிஸ்கட்டுகளை கொழும்பில் இருந்து யாழ்ப்பாணம் எடுத்து வந்த போது கைதான மாதகல் பகுதியைச் சேர்ந்த பெண்ணை எதிர் வரும் 16ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு யாழ்ப்பாணம் நீதிவான் எஸ்.சதீஸ்தரன் உத்தரவிட்டுள்ளார்.

கொழும்பில் இருந்து ஹயஸ் வான் ஒன்றில் பெண் ஒருவர் தங்க பிஸ்கட்டுக்களை எடுத்து வருகின்றார் என்று பொலிஸாருக்குக்கிடைத்த இரகசியத்தகவல் ஒன்றையடுத்து சாவகச்சேரி சங்கத்தானைப் பகுதியில் காத்திருந்த பொலிஸார் குறித்த வாகனத்தை சோதனையிட்ட போது அதில் பயணித்த பெண்ணிடம் இருந்து 3 கோடி ரூபா பெறுமதியான தங்கம்,மற்றும் வெளி நாட்டு நாணயத்தாள்கள் என்பவைகைப் பற்றப்பட்டிருந்தன. (ற-107)

# அதிபருக்கு மணிவிழா

சாவகச்சேரி, பெப்.5

சாவகச்சேரி கல்வயல் ஸ்ரீசண்முகானந்தா வித்தியாலயத்தில் அதிபராகக் கடமையாற்றி ஓய்வு பெற்றுள்ள இ.இரவீந்திரனுக்கு பாடசாலைச் சமூகத்தால் நடத்தப்படும் மணிவிழா நாளை மறுதினம் ஞாயிற்றுக் கிழமை பிற்பகல் 2 மணிக்கு கல்வயல் ஆயிலடி வீரகத்தி விநாயகர் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

சாவகச்சேரி இந்துக் கல்லூரி அதிபர் ந.சர்வேஸ்வரன் தலைமையில் நடைபெறும் நிகழ்வில் வட மாகாண கல்விப் பணிப்பாளர் செ.உதயகுமார், மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர் கு.பிரேமகாந்தன் தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் சு.கிருஷ்ண குமார் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

நிகழ்வில் அதிபரின் 36 ஆண்டுகள் கல்வித் துறைப் பணியைக் கௌரவிக்கும் வகையில் மலர் வெளியீடொன்றும் நடைபெறவுள்ளது. மலரை மாகாணக் கல்விப் பணிப் பாளர் செ.உதயகுமார் வெளி யிட்டு வைப்பார். வெளியீட்டுரையை ஓய்வு நிலை வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி அ.வேதநாயகம் நிகழ்த்துவார்.

(ற-ஐ-9)

# தென்மராட்சி கல்வி வலய கட்டடத் திறப்பு விழா

சாவகச்சேரி, பெப்.5

தென்மராட்சி கல்வி வலய அலுவலகத்துக்கென 17 மில்லியன் ரூபா செலவில் மாகாண குறித்தொதுக்கப்பட்ட அபிவிருத்தி நிதியில் புனரமைக்கப்பட்ட மாடிக் கட்டடம் நேற்றுமுன்தினம் வட மாகாண கல்வி அமைச்சர் த.குருகுலராஜாவால் திறந்து வைக்கப் பட்டது.

வலயக் கல்விப் பணிப்பாளர் சு.கிருஷ்ணகுமார் தலைமையில் நடைபெற்ற நிகழ்வுக்கு சிறப்பு விருந்தினர்களாக வட மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் இ.இரவீந்திரன், மாகாணசபை உறுப்பினர்களான கேசவன் சயந்தன், ப.அரியரத்தினம் ஆகியோரும், கௌரவ விருந்தினராக மாகாண கல்விப் பணிப்பாளர் செ.உதயகுமாரும் கலந்து கொண்டனர்.

விருந்தினர்கள் ஊர்வலமாக அழைத்து வரப்பட்டு நினைவுக் கல்லை அமைச்சர் குருகுலராஜாவும், புதிய கட்டட நுழைவாயிலை கல்வி அமைச்சின் செயலாளர் இ.இரவீந்திரன், மாகாண கல்விப் பணிப்பாளர் செ.உதயகுமார் ஆகியோரும், பொது நூலகத்தை ஓய்வுநிலை பிரதிக் கல்விப் பணிப்பாளரும், கட்டடத்துக்கான காணிக் கொள்வனவை மேற்கொண்டவருமான நா. சத்தியநாதனும், மாகாண சபை உறுப்பினர் ப.அரியரத்தினம் மருத்துவர் ச.அம்பிகைபாகன், ஓய்வு நிலை மாகாணக் கல்விப் பணிப்பாளர் வ.செல்வராஜா ஆகியோர் ஒவ்வொரு பிரிவுகளையும் நாடா வெட்டித் திறந்தனர்.



நிகழ்வில் ஓய்வு நிலை மாகாணக் கல்விப் பணிப்பாளர் வ.செல்வராஜா, ஓய்வுநிலை வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி அ.வேதநாயகம், ஓய்வு நிலை பிரதிக் கல்விப் பணிப்பாளர்களான நா.சத்தியநாதன் ஆ.ஸ்ரீஸ்கந்தமூர்த்தி, வே.பாலசுப்பிரமணியம், ஓய்வு நிலை உதவிக் கல்விப் பணிப்பாளர்கள் பணியில் உள்ள பிரதிக் கல்விப் பணிப்பாளர்கள், உதவிக் கல்விப் பணிப்பாளர்கள், சேவைக் கால ஆசிரிய ஆலோசகர்கள், அதிபர்கள், சாவகச்சேரி கைத்தொழில் வணிகர் மன்றத் தலைவர் வ.ஸ்ரீபிரகாஸ், ஓய்வு நிலை மருத்துவர் ச.அம்பிகைபாகன் உட்படப் பலர் கலந்து கொண்டனர். (ற-9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈழத் தமிழர்களுக்கு ஆதரவாக போராட்டங்கள் நடத்தப்படும்

## திருமாவளவன் அறிவிப்பு

சென்னை, பெப். 5

ஈழத் தமிழ் மக்களுக்கு ஆதரவாக தமிழகத்திலும் போராட்டங்கள் முன்னெடுக்கப்படும் என விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் தலைவர் தொல். திருமாவளவன் தெரி வித்துள்ளார்.

விடுதலைச் சிறுத்தைகள் கட்சித் தலைவர் தொல். திருமாவளவனினால் வெளியிடப்பட்டுள்ள ஊடக அறிக்கை ஒன்றிலேயே மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில், போர் நிறைவடைந்து ஏழாண்டுகள் நிறைவடைந்துள்ளபோதும் அரசியல் கைதிகளில் அதிகளவானவர்கள் விடுதலை செய்யப்படவில்லை. அவர்களை அரசியல் கைதிகளாக ஏற்கவும் இலங்கை அரசு முன்வரவில்லை. 2009 க்குப்பின்பு இலங்கை ஆக்கிரமிப்புப் படை ஈழமண்ணிலே அகலக்கால் பதித்து நிற்கின்றது.

இன்று ஈழத்தில் உள்ள தமிழ் மக்களுக்கான தலைமைகளை தனது பொறிக்குள் சிக்கவைப்பது, புலம்பெயர் அமைப்புக்களைப் பிளவுபடுத்துவது, தமிழக ஈழத்து மீனவர்களுக்கிடையில் சகோதரப் போரை உருவாக்குவது, அதன் மூலம் தமிழகத்தில் ஈழத்தமிழர்களுக்கு ஆதரவான போராட்டக் களத்தைப் பலவீனப்படுத்துவது போன்ற கூட்டுச் சதிகளுக்கு வாய்ப்பளிக்கும் வகையில் தமிழீழத் தலைவர்கள் நடந்துகொள்வது வேதனையளிக்கிறது.

இந்தநிலையில் இனக்கொலை, போர்க்குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் விசாரிக்கப் பன்னாட்டு நீதிப் பொறிமுறை, அரசியல் தீர்வுக்குப் பொது வாக்கெடுப்பு போன்ற அடிப்படைக் கோரிக்கைகளுக்காகத் தொடர்ந்து போராடுவதைத் தவிர தமிழர்களுக்கு வேறு வழியில்லை.

வட்டுக்கோட்டைத் தீர்மானத்தின் 40ஆம் ஆண்டை முன்னிறுத்தி நாடுகடந்த தமிழீழ அரசு, அனைத்துலக இளையோர் அமைப்பு, அனைத்துலக ஈழத் தமிழர் மக்கள் அவை ஆகிய மூன்று புலம்பெயர் அமைப்புக்கள் ஓரணியில் திரண்டிருப்பதும், ஈழத்தில் கட்சி வேறுபாடுகளைக் கடந்து வடமாகாண முதலமைச்சர் க.வி. விக்னேஸ்வரனை இணைத் தலைவராகக் கொண்டு தமிழ் மக்கள் பேரவை தோற்றம் பெற்றிருப்பதும், ஈழத்தில் காணாமல் போனோரைத் தேடும் உறவினர்கள் உள்ளிட்ட சிவில் அமைப்புக்களால் முன்னெடுக்கப்படும் ஜனநாயகரீதியான போராட்டங்களும் எமக்கு நம்பிக்கை அளிக்கின்றன.

ஈழத்தில் தமிழ் மக்களால் முன்னெடுக்கப்படும் போராட்டங்களுக்கு ஆதரவாக தமிழகத்தில் விடுதலைச் சிறுத்தைகள் கட்சியும் ஜனநாயகரீதியான போராட்டங்களை முன்னெடுக்கும் என்றும் ஈழத்தமிழர்களுக்கு விடுதலை கிடைக்கும்வரை இத்தளத்தில் தொடர்ந்து களமாடுவோம் என்றும் தெரிவித்துக்கொள்கிறோம் – எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (த)




# ஹற்றன் மூங்கில் தோப்புக்கு இனந்தெரியாதோர் தீ வைப்பு



கொழும்பு,பெப்.5

ஹற்றன், பொகவந்தலாவ பிரதான வீதியின் டிக்கோயா வனராஜா கோயிலுக்கு அருகில் வீதியின் ஓரத்தில் அமைந்துள்ள மூங்கில் தோப்புக்கு நேற்று அதிகாலை இனந்தெரியாத நபர்களால் தீ வைக்கப்பட்டுள்ளதாக ஹற்றன் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இதன் காரணமாக மூங்கில் தோப்பு தீயினால் எரிந்து பிரதான வீதியில் விழுந்ததன் காரணமாக அந்த வீதியினூடான போக்குவரத்து சுமார் ஒரு மணி நேரம் தடைப்பட்டிருந்ததாக ஹற்றன் பொலிஸ் நிலையத்தின் போக்குவரத்து பொலிஸ் பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

எனினும் ஹற்றன் பொலிஸாரும் பொது மக்களும் இணைந்து இந்தத் தீயைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்துள்ளனர். அதன் பின்னர் போக்குவரத்து வழமைக்கு திரும்பியுள்ளது.

இந்தத் தீ விபத்தினால் அந்தப் பகுதியில் அமைந்துள்ள தொலைபேசிக் கம்பங்களுக்கும் சேதம் ஏற்பட்டுள்ளன. மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)

# துப்பாக்கிச் சூட்டில் வர்த்தகர் படுகாயம்

கொழும்பு, பெப்.5

நாத்தாண்டி, மாரவில பிரதேசத்தில் நேற்று வியாழக்கிழமை அதிகாலை 3 மணியளவில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் இளம் வர்த்தகரொருவர் பலத்த காயங்களுக்குள்ளாகி மாரவில வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளதுடன், சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேகநபரை, ரிவோல்வருடன் கைதுசெய்துள்ளதாக மாரவில பொலிஸார் தெரிவித்தனர்.

மாரவில, நாத்தாண்டி வீதியில் வசிக்கும் சுசந்த குருகுலசூரிய (வயது – 39) என்ற வர்த்தகரே மார்புப் பகுதியில் துப்பாக்கிச்சூட்டுக்கு இலக்காகி வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

மாரவில பிரதேசத்தில் அமைந்துள்ள வரவேற்பு மண்டபமொன்றில் இடம்பெற்ற இசை நிகழ்ச்சி முடிவடைந்து அங்கிருந்து வெளியேறிய இரு குழுக்களுக்கிடையில் இடம்பெற்ற வாய்த்தர்க்கத்தின் போதே இத் துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் இடம்பெற்றுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

வர்த்தகருக்கும், சந்தேகநபருக்கும் இடையில் இருந்த பழைய குரோதம் காரணமாக சந்தேகநபர், தன்னிடமிருந்த ரிவோல்வரால் வர்த்தகர் மீது துப்பாக்கிச் சூடு மேற்கொண்டுவிட்டு அங்கிருந்து தப்பிச் சென்றுள்ளார்.

எனினும், சம்பவம் இடம்பெற்ற குறுகிய நேரத்தினுள் சந்தேகநபர் கைதுசெய்யப்பட்டுள்ளதோடு, அவரிடமிருந்த ரிவோல்வரும் கைப்பற்றப்பட்டுள்ளதாக மாரவில பொலிஸார் தெரிவித்தனர்.

மாரவில பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி பிரதான பொலிஸ் பரிசோதகர் எஸ்.டி.ஆர்.பிரியந்த தலைமையில் இது தொடர்பான மேலதிக விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன. (த)

# யோசிதவைப் பார்க்க வரையறை

கொழும்பு, பெப்.5

வெலிக்கடை விளக்கமறியல் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவின் புதல்வர் யோசித ராஜபக்சவைப் பார்வையிடச் செல்வோரின் எண்ணிக்கையை மட்டுப்படுத்த சிறைச்சாலை அதிகாரிகள் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

இது எவ்வாறாயினும், நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு இந்த வரையறை விதிக்கப்படமாட்டாது எனச் சிறைச்சாலைகள் திணைக்களத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

கார்ல்டன் விளையாட்டு நெட்வோர்க் பிரைவேட் லிமிட்டெட்டில், நிதிமோசடியில் ஈடுபட்டார்கள் என்ற குற்றச்சாட்டில் யோசித உட்பட ஐந்து பேர் கைதுசெய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (த)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறுபான்மையின் ஆதரவின்றி எவரும் ஆட்சியமைக்க முடியாது

## *அமைச்சர் லக்ஸ்மன் யாப்பா தெரிவிப்பு*



கொழும்பு, பெப் 5

சிறுபான்மையினமக்களது ஆதரவின்றி ஜனாதிபதியாகவோ, அரசு அமைக்கவோ, நாடாளுமன்றத்தில் ஆதிக்கம் செலுத்தவேயா எவராலும் முடியாது. எனவே, ஜனாதிபதிமைத்திரிபால சிறிசேன கட்சியை வழி நடத்தினால் மாத்திரமே சிறு பான்மை மக்களது ஆதரவை ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியால் பெற்றுக் கொள்ள முடியும் என்று நிதி இராஜாங்க அமைச்சர் லஸ்மன் யாப்பாஅபேவர்தனதெரிவித்தார்.

அத்துடன், கட்சியைப் பிளவுபடுத்த முயற்சிப்பவர்கள் எண்ணுபவர்கள் கட்சித் துரோகிகள் என்றும் அவர் சாடினார்.

கொழும்பில் நேற்றுமுன் தினம்நடைபெற்றஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியினவாராந்த ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவித்தபோதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அங்கு அவர்மேலும்கூறியதாவது:-

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி பிளவடைவதை கட்சியின் கீழ்மட்ட உறுப்பினர்கள் விரும்பவில்லை. அவர் கள் கட்சி பிளவுபடாது ஒன்றிணைந்து செயற்படுவதையே விரும்புகின்றனர். எமக்குக் கோரிக்கையும் முன்வைக்கின்றனர்.

கடந்தகால சில துரதிர்ஷ்டவசமான செயற்பாடுகளால் சிறுபான்மைமக்கள்சுதந்திரக்கட்சியை விட்டுத்தூரமாகியுள்ளனர். அவர்களுக்கு எமது கட்சி மீது நம்பிக்கை ஏற்பட்டு இணைந்து செயற்பட வைப்பதற்கு தற்போதைய தலைவர் மைத்திரிபால சிறிசேனவால் மாத் திரமே முடியும்.

**❝ நாங்கள் அனைத்துப் பகுதிகளிலும் எமது அதிகாரத்தை செலுத்தவேண்டுமாயின், சிறுபான்மை மக்களது ஆதரவு எமக்கு அத்தியாவசியமாகின்றது. அதனால் கட்சியைப் பிளவுபடுத்த இடமளிக்க வேண்டாம் என அடிமட்ட தொண்டர்கள் எம்மிடம் கோரிக்கை முன் வைக்கின்றனர். கட்சியின் தலைமைக்குக் கட்டுப் படவேண்டும். ❞**

சிறுபான்மை மக்களது ஆதரவின்றி ஜனாதிபதியாகவோ, அரசு அமைக்கவோ, நாடாளுமன்றத்தில் ஆதிக்கம் செலுத்தவோ எவராலும் முடியாது. சு.க. தலைவர் ஜனா திபதி மைத் திரிபால சிறிசேனவுக்கு சிறுபான்மை மக்களது அங்கீகாரம் உள்ளது.

ஆகவே, எதிர்வரும் தேர்தலை தொகுதிவாரி முறையிலேயே நடத்தவுள்ளோம். நாங்கள் அனைத்துப் பகுதிகளிலும்எமது அதிகாரத்தைச் செலுத்தவேண்டுமாயின் சிறுபான்மை மக்களது ஆதரவு எமக்கு அத்தியாவசியமாகின்றது. அதனால் கட்சியைப் பிளவுபடுத்த இடமளிக்க வேண்டாம் என அடிமட்டத் தொண்டர்கள் எம்மிடம் கோரிக்கை முன் வைக்கின்றனர். கட்சியின் தலைமைக்குக் கட்டுப் படவேண்டும்.

பிரச்சினைகள் இருக்குமாயின்கட்சியின்மத்தியசெயற்குழு மற்றும் நிறைவேற்றுக் குழு என்பவற்றுடன் கலந்தாலோசிக்க வேண்டும். மாறாக, அதன் முடிவுகளுக்கு எதிராக செயற்பட்டு கட்சியைப் பிளவுபடுத்த முனைபவர்கள் கட்சித் துரோகிகள் எனத் தெரிவித்தார். (த)

# ராஜபக்ச கும்பல் உள்ளதால் சு.கவுடன் இணையவில்லை

## *கூறுகின்றார் பொன்சேகா*

கொழும்பு, பெப், 5

ராஜபக்ச கும்பல் இருக்கும் காரணத்தினாலேயே ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையிலான ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியுடன் இணையவில்லை என ஜனநாயகக் கட்சித் தலைவரான பீல்ட் மாஷல் சரத் பொன் சேகா தெரிவித்தார்.



பீல்ட் மாஷல் சரத் பொன்சேகா தலைமையிலான ஜனநாயகக் கட்சி நேற்று முன் தினம் அலரி மாளிகையில் ஐக்கிய தேசிய முன்னணியுடன் இணைந்து கொண்டது.

இதுதொடர்பிலான புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்ட பின்னர் ஊடகங்களுக்குக் கருத்து வெளியிட்ட போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு தொடர்ந்தும் கருத்து வெளியிட்ட அவர்,

ஒரு தனிக் கட்சியாக, எந்தவொரு பதவியையும் எதிர்பார்க்காது, நாட்டுக்கு நல்லதைச் செய்யவேண்டும் என்ற நோக்கத்தில் மட்டும் கடந்த மூன்றரை வருடங்களுக்கும் மேலாக நாம் தொடர்ச்சியாகப் பணியாற்றி வருகிறோம்.

எமது இந்த அரசியல் பயணத்தைக் குறுக்கு வழியிலன்றி நேர் வழியில் கொண்டுசெல்வதற்காகவே நாம் ஐக்கிய தேசிய முன்னணியுடன் தற்போது இணைந்துள்ளோம்.

எனக்குத் தெரிந்தவரை பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவைப் போன்ற சிறந்த சாணக்கியமான ஒரு தலைவர் நாட்டில் இல்லை என்றே கூறவேண்டும்.

இப்படியான ஒருவருடன் இணைந்து நாம் அடுத்தகட்டத்தை நோக்கிச் செல்வதானது மிகவும் பெருமைக்குரிய ஒன்றாகும் என்பதையும் இங்கு கூறிக்கொள்ள நான் கடமைப் பட்டுள்ளேன்.

நாம் 2010ஆம் ஆண்டிலேயே, நாட்டிலிருந்த மோசமான அரசை விரட்டியடிக்கவேண்டும் என ஒன்றிணைந்தவர்கள். இந்த இணக்கப்பாடானது 2015 ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலிலும் தொடர்ந்து நாட்டிலும் பெரியதொரு மாற்றத்தை ஏற்படுத்தியது.

இந்த வெற்றியை மேலும் முன்னோக்கிக் கொண்டுசெல்லும் வகையிலேயே எமது அடுத்த கட்டப் பயணம் அமையும்.

இரண்டு பக்கங்களிலும் கால் வைத்துப் பயணிக்காது ஐக்கிய தேசிய முன்னணி எனும் ஒரு பக்கத்தில் கால் வைத்து பயணிக்கவே நாம் தீர்மானித்துள்ளோம். இதிலேயே எமது எதிர்காலத்தின் வெற்றியும் தங்கியுள்ளது.

அதேநேரம், நாட்டின் ஜனாதிபதிக்கும் இவ்வேளையில் நான் நன்றிகளைக் கூறிக்கொள்கிறேன். அவர் குறித்தும், அவரது செயற்பாடுகள் குறித்தும் எமக்குப் பூரண நம்பிக்கை உள்ளது. எனினும், அவர் தலைமையிலான கட்சியில் இன்னும் ராஜபக்ச கும்பல் இருந்துகொண்டுதான் உள்ளது.

அவர்கள் தற்போது வெற்றிலைச் சின்னத்தைச் சீர்குலைக்கவே முயற்சித்து வருகின்றனர். இந்தக் காரணத்தினாலேயே நாம் அக்கட்சியுடன் இணைந்து கொள்ளாது ஐக்கிய தேசிய முன்னணியுடன் இணைந்து கொண்டுள்ளோம்.

இந்தக் கூட்டணி நிச்சயமாக நாட்டுக்குப் பெரும் வெற்றியாக அமையும்-என்றார். (த)

# யாழ். பல்கலையில் கறுப்புக் கொடி





யாழ்ப்பாணம், பெப். 5

இலங்கையின் சுதந்திரதினமான நேற்று யாழ்.பல்கலைகக்கழகத்தில் கறுப்புக் கொடி ஏற்றப்பட்டிருந்ததாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பின்னர் அது அகற்றப்பட்டுப் பொலிஸ் பாதுகாப்புப் போடப்பட்டிருந்தது.

பல்கலைக்கழகத்தின் கைலாசபதி கலையரங்கின் கூரையிலும் வளாகத்திலும் கறுப்புக் கொடி கட்டப்பட்டிருந்ததாகப் பல்கலைக்கழகத் தகவல்கள் தெரிவித்தன.

அதன்பின்னர் அதுபற்றிப்பொலிஸாருக்குத் தகவல் வழங்கப்பட்டிருக்கலாம் என்றும், அதனால் பல்கலைக்கழக வளாகத்தில் வாசல்களில் உட்புறமாகப் பொலிஸார் நிறுத்தப்பட்டிருந்தனர் எனவும் கூறப்பட்டது. கட்டப்பட்டிருந்த கறுப்புக் கொடிகள் பின்னர் அகற்றப்பட்டன. (த-4,10)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கற்பகம் விற்பனை நிலையங்கள் விடுமுறை நாள்களிலும் திறப்பு

யாழ்ப்பாணம்,பெப்.5

பனை அபிவிருத்திச் சபையின் கற்பகம் விற்பனை நிலையங்கள் அனைத்தும், விடுமுறை நாள்களிலும் திறக்கப்படும் என்று சபையின் தலைவர் மா.கணபதிப்பிள்ளை தெரிவித்தார்.

நுகர்வோர் மற்றும் சுற்றுலாப் பயணிகளின் வசதி கருதி நாட்டில் உள்ள சகல கற்பம் நிலையங்களும் போயா தவிர்ந்த சகல விடுமுறை நாள்களிலும் திறக்கப்படும்.

அத்துடன் நாட்டில் உள்ள சகல கற்பகம் நிலையங்களும் இந்த ஆண்டில் நவீன வசதிகளைக் கொண்ட விற்பனை நிலையங்களாக மாற்றியமைக்கவும் சபை நடவடிக்கைகளை மேற் கொண்டுள்ளது.

மக்களின் வசதி கருதி மேலும் கிளை நிலையங்களைத் திறந்து வைக்கவும் நடவடிக்கை மேற் கொள்ளப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார். (ஜ-17)

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450
செய்தி : news@uthayan.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## தமிழ் மக்களுக்கு ஜனாதிபதி என்ன செய்யப் போகிறார்...?

காலனித்துவ ஆட்சியிலிருந்து எமது நாடு சுதந்திரம் பெற்று அறுபத்தெட்டு ஆண்டுகள் கடந்து போயின. ஆயினும் அவர்கள் விட்டுச் சென்ற பிரச்சினைகள் எமக்குள்ளே தீர்த்துக் கொண்டோமா? இந்த வினாவை எமது மனச் சாட்சியைத் தொட்டுக் கேட்க வேண்டும்.

இனங்களுக்கு இடையே ஒற்றுமை, சகோத ரத்துவம், நல்லிணக்கம் என்பவை சரியாகக் கடைப்பிடிக்கப்பட்டிருந்தால், வேண்டாத பிரச்சினைகள் இல்லாமல் போயிருக்கும்.

சுதந்திரம் என்ற சொல்லின் சரியான அர்த்தத் தைப் புரிந்து கொள்ள வேண்டும். அது மிகவும் முக்கியமானது. ஆனால் சிலர் சுதந்திரம் என்பதற்கு பல்வேறு கருத்துக்களை முன் வைக்கிறார்கள்.

மொழி, மத, கலாசாரப் பிரச்சினைகளை ஆட்சியாளர்கள் சரியாகப் புரிந்து கொண்டு செயற்பட்டிருக்க வேண்டும். ஆனால் அந்த நிலை, எமது நாட்டில் உகந்த முறையில் மேலெழவில்லை.

சுதந்திரம் சரியாகச் செயற்படுத்தப்பட்டு ஜனநாயகம் காப்பாற்றப்பட வேண்டும். அது நடைபெறவில்லை.

அரசியல், சமூக, கலாசார, பொருளாதார சீர்திருத்தங்களுக்கு நாம் முக்கியத்துவம் வழங்கி உள்ளோம்.

2009 ஆம் ஆண்டுக்குப் பின்னரான காலப்பகுதியை ஒழுங்காகப் பயன்படுத்தத் தவறியதாலேயே, ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமை ஆணைக்குழு, கடந்த செப்ரெம்பர் மாதத்தில் புதிய பிரேரணையைச் சமர்ப்பிக்க நேர்ந்தது.

மக்களாகிய உங்களைப் பாதுகாப்பேன்; நாட்டைப் பாதுகாப்பேன்; நாட்டின் சுதந்திரத் தைப் பாதுகாப்பேன்; மக்களின் கௌரவத்தைப் பாதுகாக்கும் வகையில் செயற்படுவேன்.

கடந்த ஓர் ஆண்டில், ஜனநாயகத்தை முழுமையாகப் பாதுகாப்பதற்கு தேவையான சகல நடவடிக்கைகளையும் நாம் (அரசு) மேற்கொண்டோம். அரசமைப்புக்கு கொண்டு வந்துள்ள 19 ஆவது திருத்தத்தால் நாடாளுமன்றத்தை மேலும் பலப்படுத்தி உள்ளோம்.

ஊடகத்துறைக்கு, என்றும் இல்லாதவாறு சுதந்திரத்தை வழங்கி உள்ளோம். அவர்கள் அதனைச் சரியாகப் பயன்படுத்த வேண்டும்; அதனைப் பாதுகாத்துக் கொள்ளவும் வேண்டும். அரசமைப்புக்கான பதின்மூன்றாவது திருத்தத்தின் ஊடாக நாடாளுமன்றத்தை மேலும் பலப்படுத்தி உள்ளோம்.

குறுகிய அரசியல் நோக்கங்களை நாடிச் செயற்படாமல், ஒன்றிணைந்து-ஒன்றுபட்டு-நல்லிணக்கத்தோடு நாம் செயற்பட வேண்டும்-என்று ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தமது சுதந்திரதின விசேட உரையில் பல விடயங்களை முன்வைத்து விவரித்துள்ளார். ஆயினும், நாட்டின் மிக முக்கிய உள்ளுடலான (Core) விவகாரம் குறித்த தமது நிலைப் பாட்டை ஜனாதிபதி திட்டவட்டமான முறை யில் தமது முக்கிய உரையில் வெளிப்படுத்தவில்லை.

தமது வாக்குகளை அவருக்கு அபாரமாக அள்ளிக்கொட்டிய தமிழ் மக்களுக்கு தமது ஆட்சிக் காலத்தில்-இந்தப் புதிய ஆண்டில்-ஜனாதிபதி என்ன செய்யப் போகிறார்; அவர்களின் பிரதான கேள்விக்கான தமது விடை என்ன என்பதைத் தொட்டுக் காட்ட அவர் மறந்து விட்டார் ஏனோ, எதற்காகவோ?



# மூடி மறைக்கப்படும் யோசிதவின் கைது

எம்.ஐ.முபாறக்

*மண் வெட்டி கையில் எடுப்பார் சில பேர், மற்றவருக்குக் குழி பறிப்பார், அது தன் பக்கம் பார்த்திருக்கும் என்பதைத் தானறிய மறந்திருப்பார். பந்தெடுத்து விட்டெறிந்தால் சுவர் மேல் பட்டதுபோல் திரும்பி வரும், அந்தத் தத்துவத்தைத் தானறிந்தால் பிறருக்குத் தீங்கு செய்யும் எண்ணம் வருமோ?*

இலங்கை அரசியலில் தற்போது நடப்பதைப் பார்க்கும்போது இந்தப் பாடல் வரிகள்தான் நினைவுக்கு வருகின்றன.

காலச் சக்கரம் எவ்வளவு வேகமாகச் சுழலுகின்றது.தன் வினை தன்னைச் சுடும் என்ற பழமொழி எவ்வளவு தூரம் உண்மையாகிப் போகின்றது. ஒரு காலத்தில் பிறரை அழ வைத்தவருக்கு இப்போது அழும் நிலை ஏற்பட்டுள்ளது. இதெல்லாம் கனவா? நனவா?

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவின் மகன் யோசிதவின் கைதுதான் இன்று பரபரப்பாகப் பேசப்படும் விடயமாக மாறியுள்ளது.

குற்றம் செய்தவர் தண்டனை அனுபவித்தே ஆகவேண்டும் என்ற சாதாரண நியதி மூடி மறைக்கப்பட்டு யோசிதவின் கைது பெரும் அரசியல் பழிவாங்கலாக – அரசின் சர்வாதிகாரப் போக்காக – அரசியல் கைதாகச் சித்திரிக்கப்பட்டு அரசியல் இலாபம் தேடப்படுகின்றது.

யோசிதவின் கைதால் அவரது குடும்பம்கண்ணீரில்மூழ்கியுள்ளதாகச் செய்திகள் தெரிவிகின்றன. ஒருபாவமும்செய்யாத–ஒரு குற்றமும் புரியாத ஒரு குடும்பம் அநியாயமாகப் பழிவாங்கப்படுவது போல் ஒப்பாரிவைக்கப்படுகின்றது.

எந்தவொரு துன்பமும் தனக்கு வந்தால்தான் அதன் வலியும் பாரதூரமும் புரியும் என்ற உண்மையை மகிந்த விளங்கிக் கொள்வதற்கான ஒரு சந்தர்ப்பமாகவே யோசிதவின் கைதைப் பார்க்க வேண்டியுள்ளது.

மகிந்தவின் கடந்த கால அரசியல் வரலாற்றைச் சற்றுப் புரட்டிப் பார்த்தால் யோசிதவின் கைது ஒரு பாரதூரமான விடயம் அல்ல என் பது புரியும்.

அவரது ஆட்சியில் அரசியல் பழி வாங்கல்கள் எவ்வாறு மேற்கொள்ளப்பட்டன? எத்தனை குடும்பங்கள் கண்ணீர் சிந்தின? எத்தனை கொலைகள் இடம்பெற்றன? எத்தனை கடத்தல்கள் இடம் பெற்றன? என்பதை நாம் இந்தச் சந்தர்ப்பத்தில் ஆராய்ந்து பார்க்க வேண்டியுள்ளது.

யோசிதவின் கைதை அரசியல் பழிவாங்கலாகச் சித்திரிக்கும் போது சரத்பொன்சேகாவின் கைது – அவர் பழிவாங்கப்பட்ட விதம் நினைவுக்குவருகின்றன. சிறுகுழந்தைகள் கூட விளங்கிக் கொள்ளும் அளவுக்கு, அவரது கைது பச்சை அரசியல் பழிவாங்கலாகவே இருந்ததை நாம் அறிவோம்.

2010ஆம் ஆண்டு இடம்பெற்ற ஜனாதிபதித் தேர்தலில் தன்னை எதிர்த்துப் போட்டியிட்டார் என்ற ஒரே காரணத்துக்காக தேர்தல் முடிந்து இரண்டு வாரங்களுக்குள் பொன்சேகா– மகிந்தவால் கைதுசெய்யப்பாட்டார். அடுத்து வந்த நாடாளுமன்றத் தேர்தலில் தடுப்பில் இருந்து போட்டியிட்டு வெற்றியீட்டியபோதிலும், அந்த நாடாளுமன்ற ஆசனத்தை இழக்கும் நிலைக்கு அவர் தள்ளப் பட்டார்.

சில காலம் அவர் இராணுவப் பாதுகாப்பில் வைக்கப்பட்டு – பல்வேறுவகையானதுன்பங்கள் கொடுக்கப்பட்டு அவர் சிறைச் சாலைக்கு அனுப்பப்பட்டார்.

அவர் கைதுசெய்யப்பட்டு ஆறு வருடங்கள் நிறைவடைவதற்கு இன்னும் ஒரு வாரம் இருக்கின்ற நிலையில்தான் யோசித ராஜபக்ச கைது செய்யப்பட்டுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

அவர் கைது செய்யப்பட்ட விதத்தையும் யோசித கைது செய்யப்பட்ட விதத்தையும் ஒப்பிட்டுப் பார்த்தால் எது அரசியல் பழி வாங்கல் என்பது புரியும்.

நீண்ட விசாரணையின் பின் அதாவது, சுமார் ஒரு வருடத்தின் பின் யோசித கைது செய்யப் பட்டார். ஆனால், பொன்சேகா ஜனாதிபதித் தேர்தல் முடிந்து இரண்டு வாரங்களுக்குள் கைது செய்யப்பட்டார். எந்தவித விசாரணைகளும் இன்றி திடீர் என்று – நன்கு திட்டமிட்ட அடிப்படையிலேயே இந்தக் கைது இடம்பெற்றது.

கொழும்பு-07, றோயல் கல்லூரிக்கு முன்பாக அமைந்திருந்த அவரது தேர்தல் அலுவலகத்துக்குள் புகுந்த இராணுவத்தினர் பொன்சேகாவை பலவந்தமாக இழுத்துச் சென்றனர். ஆனால், யோஷிதவின் கைது அப்படி மோசமானதாக அமையவில்லை. யோசிதவின் கைதைத் தொடர்ந்து அவரது குடும்பம் துன்பக் கடலில் மூழ்கி இருப்பதாக மகிந்த தரப்பு தெரிவிக்கின்றது. பொன்சேகாவின் மனைவி அனோமா, அவரின் பிள்ளைகள் மற்றும் உறவினர்கள் எவ்வாறு துன்பத்தில் மூழ்கிக் கிடந்திருப்பர் என்பதை இந்தச் சந்தர்ப்பத்தில் மகிந்த எண்ணிப் பார்க்க வேண்டும்.

அதுமட்டுமா? அவரது ஆட்சியில் போர் என்ற பெயரில் கொல்லப்பட்ட தமிழ் உறவினர்களின் அழுகை இன்னமும் நிறுத்தப்படவில்லை. கடத்தப்பட்ட ஊடகவியலாளர் எக்னெலிகொடவின் உறவினர்கள் தினம் தினம் அழுது புலம்புகின்றனர். பொது பலசேனாவின் வன்முறையால் பேருவளையில் – அளுத்கமவில் பாதிக்கப்பட்ட முஸ்லிம்கள் இன்னமும் கவலையில்தான் மூழ்கி இருக்கின்றனர். எது எப்படியோ, அதர்மம் ஜெயிக்காது; தப்புச் செய்தவன் தண்டனை அனுபவித்தே தீருவான். பாதிக் கப்பட்டவனுக்குநீதிகிடைத்தே தீரும் என்ற நம்பிக்கை இப்போது வலு வடையத் தொடங்கியுள்ளது.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சேரலாதன்

# மகிந்த தரப்பின் அழுத்தங்களை முறியடிக்குமா நல்லாட்சி?



நாட்டின் தென்பகுதியில் இடம்பெறுகின்ற கைது நடவடிக்கைகளால் அரசியல் அரங்கு சூடுபிடிக்கத் தொடங்கியுள்ளது. பொதுபல சேனா அமைப்பின் பொதுச் செயலாளர் கலகொட அத்தே ஞானசாரதேரர், முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவின் இரண்டாவது புதல்வரான யோசித ஆகியோர் கைது செய்யப்பட்டு நீதிமன்ற ஆணையின் பிரகாரம் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

ஞானசாரதேரர் இனவாதத்தைத் தமது கையில் எடுத்துக்கொண்டு சிறுபான்மை இன மக்களுக்கு எதிரான செயற்பாடுகளில் தீவிரமாக ஈடுபட்டு வந்தவர். முக்கியமான சில அரசியல்வாதிகளின் ஆதரவு அவருக்குக் கிடைத்து வந்ததால் தயக்கம் எதுவுமின்றி அவர் தமது செயற்பாடுகளை முன்னெடுத்து வந்தார். பௌத்த பிக்குகள் மற்றும் பெரும்பான்மையின மக்களின் ஆதரவும் அவருக்கு இருந்ததால், அசைக்க முடியாததொரு சக்தியாகவே அவர் கணிக்கப்பட்டார். அவருக்கு எதிராக நடவடிக்கைஎடுப்பதற்கு ஆட்சியாளர்கள் தயக்கம் காட்டியதும் உண்டு. ஆனால் தற்போதுதான் அவரைக் கைது செய்து சிறையில் அடைக்க முடிந்துள்ளது.

ஜனநாயக நாடு ஒன்றில் சட்டத்துக்கு முன்பாக அனைவருமே சமமானவர்கள். பதவி, அந்தஸ்து கொண்டவர்களால் கூடசட்டத்தை மீறிச் செயற்பட முடியாது. ஆனால் இலங்கைத் தீவைப் பொறுத்த வரையில் சட்டத்தை முழுமையாகக் கடைப்பிடிக்க முடியாததொரு நிலையே காணப்படுகின்றது.

இந்த நிலையில் முன்னாள் ஜனாதிபதியின் புதல்வர் கைது செய்யப்பட்டு நீதிமன்ற உத்தரவின் பிரகாரம் சிறையில் அடைக்கப்பட்டுள்ளமை மகிந்த குடும்பத்தினரிடையே ஆத்திரத்தையும், அதிர்ச்சியையும் ஏற்படுத்தியுள்ளது. மகிந்த ஒன்பது ஆண்டுகள் இந்த நாட்டின் சர்வாதிகாரி போன்றே நடந்து கொண்டார். தமக்கு வழங்கப்பட்டிருந்த நிறைவேற்று அதிகாரங்களைப் பயன்படுத்தி நீதித்துறையையும் தமது காலடியில் மண்டியிடவைத்தார். தம்முடன் இணங்கிப் போகமுடியாதவர்களைப் பழிவாங்குவதற்கும் அவர் தயங்கவில்லை. முன்னாள் பிரதம நீதியரசர் திருமதி ஷிராணி பண்டாரநாயக்கவின் நேர்மை தொடர்பாக இந்த முழுநாடும் அறியும். ஆனால் அவர் தமக்குச் சாதகமான விதத்தில் தீர்ப்பொன்றை வழங்கவில்லை என்பதால் மகிந்த அவரைப் பதவி நீக்கம் செய்ததுடன் பழிவாங்கும் நடவடிக்கையிலும் ஈடுபட்டார். ஒரு பிரதம நீதியரசருக்கே இந்தக் கதி என்றால் சாதாரண மக்களின் நிலை பற்றிக் கூறவும் வேண்டுமா? "முற்பகல் செய்யின் பிற்பகல் விளையும்" என்பதற்கு ஏற்ப தற்போது மகிந்த குடும்பம் மீதான சட்ட நடிவடிக்கைகள் ஆரம்பித்து விட்டன. இது தொடரும் என்றே எதிர்பார்க்கப்படுகின்றது.

ஓர் இளவரசன் போன்று வாழ்ந்த யோசித சாதாரண சிறையில் தூக்கமின்றி அவஸ்தைப்பட்டதாகத் தெரியவரும்போது அவரது தந்தையான மகிந்த பதறியிருப்பார் என்பதில் சந்தேகம் கொள்ளத் தேவையில்லை. மகிந்த ஆட்சியில் அவரது மகனை ஒத்த வயதினரான ஏராளமான தமிழ் இளைஞர்களுக்கு நேர்ந்த அவல நிலைக்கு மகிந்ததான் பொறுப்புக்கூற வேண்டும். அவர் தற்போது தமது மகனை நினைத்து வேதனைப்படுவதை விடுத்து தமது ஆட்சியில் இடம்பெற்ற கொடுமைகளுக்குப் பரிகாரம் தேடுவதற்கு முன்வர வேண்டும்.

இதேவேளை – மகிந்த தரப்பினர் தம்மை அரசு பழிவாங்குவதாகக் கூறியிருப்பது நகைப்புக்குரியது. ஏனென்றால் குற்றம் எதனையும் புரியாத அப்பாவிகள் போன்று அவர்கள் புலம்புவதை எவருமே ஏற்றுக் கொள்ள மாட்டார்கள். மகிந்த ஆட்சிக் காலத்தில் இடம்பெற்ற ஊழல் மோசடிகள் இந்த நாட்டின் பொருளாதாரத்தையே ஆட்டம் காணச்செய்து விட்டன. தட்டிக் கேட்பதற்கு எவருக்குமே தைரியம் இல்லாததால் ஆட்சியில் அமர்ந்திருந்தவர்கள் தமது இஷ்டம்போல நடந்து கொண்டனர்.

இவற்றையெல்லாம் மூடி மறைப்பதற்கு நாட்டில் இடம்பெற்ற போர் பேருதவியாக அமைந்திருந்தது. மகிந்த வும் தம்மையொரு அசைக்க முடியாத சக்தியாகவே நினைத்துக் கொண்டிருந்தார். இதன் காரணமாகத் தமது பதவிக்காலம் முடிவடைவதற்கு இரண்டு வருடங்களுக்கு முன்பதாக ஜனாதிபதித் தேர்தலை எதிர் கொண்டார். ஆனால் எவருமே எதிர்பாராத வகையில் மைத்திரிபால என்ற அவரது நெருங்கிய சகா ஜனாதிபதித் தேர்தலில் குதித்து வெற்றியும் பெற்றுக் கொண்டமை மகிந்தவுக்கு விழுந்த முதல் அடி என்றுதான் கூறவேண்டும்.

இன்று அவர் தாம் விதைத்த வினைகளை அறுவடை செய்து கொண்டிருக்கிறார். வினை விதைத்தவன் அதனை அறுவடை செய்தே ஆக வேண்டும். அந்த வேளையில் அழுது புலம்புவதால் பயன் எதுவும் கிடைக்காது.

மகிந்தவும் அவரைச் சார்ந்தவர்களும் மனச்சாட்சியுடன் தாம் புரிந்த குற்றங்களை ஒப்புக்கொள்ள வேண்டும். அதை விடுத்து அரசு மீது பழி போடுவதால் எந்தப் பயனும் கிடைக்கப்போவதில்லை. உண்மைகள் ஒருபோதுமே மறைந்து விடுவதில்லை. என்றோ ஒருநாள் வெளி வந்தே தீரும்.

இறுதியாகக் கிடைத்த தகவல்களின் பிரகாரம் மகிந்தவுக்குச் சார்பானவர்கள் அரசுக்கு எதிராகப் பாத யாத்திரை செய்வதற்கான ஏற்பாடுகளில் இறங்கியுள்ளதாகத்தெரியவந்துள்ளது. இனவாதநோக்குடன் இந்தப் பாத யாத்திரை இடம்பெறும் எனவும் தெரிகின்றது. இது இந்த நாட்டை மீண்டுமொரு தடவை பிரச்சினைக்குள் ஆழ்த்தி விடக்கூடிய பாதகமான செயலாகும். நீதிமன்ற நடவடிக்கையை சட்டபூர்வமாக அணுகிநியாயம்பெறுவதற்குப் பதிலாக குற்றங்களிலிருந்து குறுக்கு வழியில் தப்பித்துக் கொள்ளும் ஒரு முயற்சியாகவே இதனைக் கொள்ள முடிகின்றது.

மகிந்த தரப்பினரின் எவ்வித அழுத்தங்களுக்கும் அடி பணியாமல் நல்லாட்சி தொடருமா? என்பதே இன்று மக்கள் முன்னுள்ள பெரும் கேள்வியாகும்.

## காலங்காத்தாலை....!

காலங்காத்தாலை சந்திப்பக்கம் போயிருந்தன். பேப்பர் விக்கிற கடைக்கு முன்னாலை ஏகப்பட்ட சனம். என்ன பிரச்சினையெண்டு கிட்டப்போய்ப் பார்த்தால், எல்லாரும் மகிந்தவின்ர மகனைக் கைதுசெய்த விடயம் பற்றித்தான் கதைச்சுக் கொண்டு நிண்டினம்.

இப்பதான் மகிந்தவின்ர குடும்பத்துக்குள்ள அட்டமத்தில வியாழனும், ஏழரையில சனியனும் புகுந்து எகிறி விளையாட ஆரம்பிச்சிருக்குது போலை கிடக்குது..., என்று கையில பேப்பரை வைச்சிருந்தபடி..., ஒரு பொடியன் நக்கல் நையாண்டியாகச் சொல்லிக் கொண்டிருந்தான்.

அந்த நேரம் உந்த வன்னிச்சனம் விட்ட பெருமூச்சுத்தான், மகிந்த குடும்பத்தின்ரை மானத்தை வாங்க வெளிக்கிட்டிருக்கு... என்று இன்னொருவரும் அந்தக் கூட்டத்துக்குள்ளை நின்று சொல்லிக் கொண்டிருந்தார்.

எல்லாற்றை வாயிலையும் மகிந்தவின்ர புராணம்தான் படலமாக வெளிவந்து கொண்டிருந்தது.

தலைக்குள்ளை ஆணவம் முத்தி ஆட்டம் போடவெள்ளிக்கிட , அறிவு விலகி நிண்டு வேடிக்கை பார்க்குமெண்டு சொல்லுவினம், பிறகு ஆட்டமெல்லாம் ஓஞ்சுபோக, அறிவு வேலை செய்ய, சுடலை ஞானம் பிறக்குமெண்டும் சொல்லுவினம்.

போரை வெண்ட புளுகத்தில மகிந்தராசா போட்ட ஆட்டம், சொல்லிமாள ஏலாது. அந்த அளவுக்கு அவற்ரை ரீம் செய்த அநியாயங்கள் கொஞ்ச நஞ்ச மல்ல. அநியாயங்கள் செய்யேக்கை அவையளின்ரை அறிவு விலகிநிண்டு, வேடிக்கை பார்த்திருக்குது. இப்ப பல்லுப்பிடுங்கின பாம்பாகிப் போன நிலவரம் வந்தாப்பிறகுதான், அறிவும், அழுகையும் வேலை செய்ய ஆரம்பிச்சிருக்குது. இனி அழுது என்னத்தைக் காணப்போகினம்? இனியாவது மனந்திருந்தி, மனிசராய் வாழ நினைச்சினமெண்டால், இந்த நாட்டுக்கும் நல்லது! நாட்டில இருக்கிற சனங்களுக்கும் நல்லது!

ஆனால், மனம் திருந்துவினமே எண்டதுதான், இப்ப ஆய்வுக்குரிய விடயம். ஏனெண்டால், மகிந்த மனம் திருந்தினாலும், அவரைச் சுற்றியுள்ள கூக் காட்டுகிற ஒரு கூட்டம் அவரை விடாது எண்டதுதான் இப்போதைய ஆழமான உண்மை!

*[illegible]*

## வேண்டுகோள்கள் நிறைவேறுவது கேள்விக்குறிதான்!

25.01.2016 ஆம் திகதிய உதயன் பத்திரிகை வாசகர் திருமுகம் பகுதியில் கே.எஸ். சிவஞானராஜாவின் வெல்லப்படவேண்டி வேண்டுகோள்கள் படித்தேன். மிகநல்ல விடயம். ஆனால் அதனை நிறைவேற்ற வேண்டிய பொறுப்பில் இருப்பவர்கள் அத்தனைபேரும் நிச்சயம் இதனை நிறைவேற்ற மாட்டார்கள் என்பதே உண்மை. அப்படித்தான் சகல வேலைகளும் எமது நாட்டில் நடந்து வருகின்றது. ஏனெனில் போர் இடருக்கு முன்னரான காலப்பகுதியில் மக்கள், பொது நிறுவனங் கள், தனியார் நிறுவனங்கள் குறைவாக இருந்தபோதும் பிறவுண் வீதியில் இலங்கைப் போக்குவரத்துச் சபையின் 808 ஆம் இலக்க பேருந்து சேவையில் இருந்தது. தற்போது மக்கள், தனியார், பொது நிறுவனங்கள் அதிகரித்துள்ள நிலை யிலும் அந்த 808 ஆம் இலக்க பேருந்தின் சேவை இதுவரை ஆரம்பிக்கப்படவேயில்லை. இந்த வீதியில் வெளிநாட்டுத் தூதரகங்களும் உண்டு. இதையே கவனிக்காதவர்கள் இந்த வேண்டுகோள்களுக்கு மட்டும் நடவடிக்கை எடுப்பார்களா என்பது கேள்விக்குறிதான்.

*நா.இ.ஸ்ரீகந்தராசா, நீராவியடி, யாழ்ப்பாணம்*

## அரசு கவனத்தில் கொள்ளுமா?

இந்தமுறை பெரும்போக விவசாயத்தில் ஈடுபட்ட விவசாயிகள் பல்வேறு காரணங்களாலும் நட்டத்தை எதிர்கொள்கின்றனர்.

ஆரம்பத்தில் பெரும் மழை காரணமாக நெற்பயிர்கள் அழிவடைந்தன. பின்னர் நோயின் தாக்கமும் பயிர்களுக்குச் சேதத்தை ஏற்படுத்தியது. இதனால் மிகக் குறைவான விளைச்சலே கிடைத்தது. இந்த நிலையில் உற்பத்தி செய்த நெல்லை உரிய விலையில் விற்கமுடியாத நிலையும் தோன்றியுள்ளது. களஞ்சிய வசதி இல்லையெனக் காரணம் கூறி அரசின் சார்பில் நெல் கொள்வனவு செய்யப்படாததால் தனியார் வியாபாரிகள் அடிமாட்டு விலைக்குக் கொள்வனவு செய்து வருகின்றனர். இதனால் போட்ட முதலைக்கூட எடுக்க முடியாது விவசாயிகள் திணறி வருகின்றனர். அரசு இவர்களது பரிதாப நிலையைக் கவனத்தில் கொள்ளுமா?

*த.நவரத்தினம், கிளிநொச்சி*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Facebook :
Twitter : UT

# உளவாளிகளைச் சிலுவையில் அறைந்து கொன்றது ஐ.எஸ்.

## 23 நாடுகளின் மாநாட்டுக்கு அச்சுறுத்தல் விடுக்கும் வகையில்

திரிபோலி, பெப்.5

ஐ.எஸ்க்கு எதிரான 23 நாடுகள் கூடிய மாநாட்டுக்கு அச்சுறுத்தல் ஏற்படுத்தும் வகையில், தங்களுக்கு எதிராக உளவு வேலை பார்த்த உளவாளிகளைச் சிலுவையில் அறைந்து கொலை செய்யும் ஒளிப்படங்களை ஐ.எஸ்.தீவிரவாதிகள் வெளியிட்டுள்ளனர். ஐ.எஸ்க்கு எதிரான உளவு வேலை பார்த்த உளவாளிகள் மூவரை ஐ.எஸ். அமைப்பினர் கொலை செய்யும் ஒளிப் படங்கள் வெளியாகியுள்ளன.







இந்தப் படுகொலைகள் லிபியா நாட்டில் நடந்திருக்கலாம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த ஒளிப்படங்களில் முழங்காலிட்டபடி உள்ள உளவாளி ஒருவரின் அருகில் மூன்றுசக்கர நாற்காலியில் ஐ.எஸ் போராளி ஒருவன் அமர்ந்துள்ளார். மேலும் அந்த ஒளிப்படத்தில் சிர்ட்டே நகரில் உளவாளிகளுக்கு சாவுத் தண்டனை என்று குறிப்பிடப்பட்டுள்ளது. மேலும் சில ஒளிப்படங்களும் வெளியாகியுள்ளன.

இந்தப் ஒளிப்படம் கடந்த செவ்வாய்க் கிழமை வெளியானது. அமெரிக்கச் செயலகத்தின் தலைமையில் மேற்குலக நாட்டுத் தலைவர்கள், ஐ.எஸ். அமைப்பை அழிக்க ரோமில் மாநாடு ஏற்பாடு செய்யப்பட்டிருந்த தினத்தன்று இந்த ஒளிப்படம் வெளியிடப்பட்டது. ஐ.எஸ். அமைப்பின் பிரசார ஆயுதம் மூலம் இந்த ஒளிப் படங்கள் வெளியிடப்பட்டுள்ளன.

அமெரிக்க மற்றும் பிரெஞ்சு அரசுகள் லிபியாவில், ஐ.எஸ்க்கு எதிராக செயற்படுவதில் அதிக அழுத்தத்தை ஏற்படுத்தியுள்ளன. லிபியாவின் எண்ணெய் வளங்களை சுரண்ட எத்தனிப்பதாகவும், அதற்காகப் போர் புரிந்து லிபியாவைக் கைப்பற்றும் முயற்சியில் ஐ.எஸ். ஈடுபட்டுள்ளதாகவும் அமெரிக்க வெளியுறவுச் செயலாளர் ஜோன் கெரி தெரிவித்தார்.

> ❝ ஐ.எஸ். அமைப்பினரின் பொருளாதாரத்தை முடக்கியதால் போராளிகளுக்குச் சம்பளம் வழங்குவதில் சிக்கல்நிலை ஏற்பட்டுள்ளது. அவர்கள் வேறு வளங்களை நாடும் முயற்சியை நாம் முறியடிக்க வேண்டும் என மாநாட்டில் கெரி தெரிவித்தார். ❞

மேலும்,லிபியாவளம் மிகுந்த நாடாகும். எண்ணெய்வளத்தின் மூலம் பில்லியன் டொலர்கள் ஈட்டுவதே அவர்கள்குறிக் கோள் எனவும்அவர் மேலும் தெரிவித்தார்.

கடந்த செவ்வாய்க் கிழமை, ரோமில் இடம்பெற்ற மாநாட்டில், ஐ.எஸ்க்கு எதிராகப் போர் புரியும் 23 நாட்டைச் சார்ந்தவர்கள் கலந்து கொண்டனர்.

மாநாட்டில் உரையாற்றிய கெரி, ஈராக்கின் 40 சதவீதப் பகுதியை ஐ.எஸ். அமைப்பினர் கைப்பற்றி இருந்தனர்.

தற்போது அவற்றில் 20 சதவீதப் பகுதி மீட்கப்பட்டுள்ளது. இதுவரை 10 ஆயிரம் வான்வழித் தாக்குதல்கள் இடம்பெற்றுள்ளன. ஐ.எஸ். அமைப்பினரின் பொருளாதாரத்தை முடக்கியதால் போராளிகளுக்குச் சம்பளம் வழங்குவதில் சிக்கல் நிலை ஏற்பட்டுள்ளது. அவர்கள் வேறு வளங்களை நாடும் முயற்சியை நாம் முறியடிக்க வேண்டும் என மாநாட்டில் கெரி தெரிவித்தார்.

இதனிடையே இந்த மாதத்தில், ஐ.எஸ்ஸுக்கு எதிராக பாதுகாப்பு அமைச்சர்களின் மாநாடு ஜேர்மனியில் இடம்பெறும் எனவும் தெரிவிக்கப்பட்டது. முன்னாள் சர்வாதிகாரி முகமது கடாபியின் சொந்த நகரமான சிர்ட்டே, தற்போது ஐ.எஸ். பிடியில் உள்ளது.ஒரு வேளை சிரியாவின் ரக்காவை இழந்தாலும் மாற்றுத் தலைநகராக சிர்ட்டேவை மாற்றும் முயற்சியில் அவர்கள் ஈடுபட்டு வருகின்றனர் என்பது குறிப்பிடத் தக்கது. (து-ரி4)

# மசூதிப...
# ஒபாம...

வொசிங்டன், பெப்.5
அமெரிக்க அதிப...
முதன்முறையாக ...
டுத்தலமான மசூதிக்...
சென்றுள்ளார். அ...
கள் தாங்கள் கடு...
முறைகளைச் சந்தி...
கூறும் நிலையில் ஒ...
மசூதிப் பயணம் ...
வாய்ந்ததாக கருது...
பால்டிமோர் பகுதியி...
குச் சென்ற அ...
முஸ்லிம் சமுதா...
உரையாற்றினார். ...
யல் காரணங்களு...
களுக்கு எதிரான ...
விக்கப்பட்டு வரு...
னிக்க முடியாதது ...
ஒபாமா தமது உரை...
தீவிரவாதத்திற்கு ...
வதற்குச் சிறந்த ...
இஸ்லாமியர்களை...
என்பதைக் காட்டு...
அது குறித்தும் ...
மறுப்புத் தெரிவிப்...
ரிக்கா முழுவதும்...
தாயத்தினர் இருக்...
எனக்குத் தெரியு...
தரக்கூடிய நேரம்...
அச்சம் கொள்வ...
இதுதான். எல்லா ...
தீவிரவாதம் குறித்...
கிறார்கள். அதற்கும் ...
முஸ்லிம்களால...
மேலும் ஒரு கவ...
களது ஒட்டுமொத்த...
வன்முறைத் த...
அடிக்கடி துஷ்ப்ப...
ஒருவர் மீதான ந...
தாக்குதல் தொ...
ரிக்காவில் வாழும் ...
மற்றச் சமுதாயத்தி...
கையில் சிக்க...
எம்முடைய மத சு...
மரியாதை செலு...
தீவிரவாதத்தில் இ...
நாட்டைப் பாதுகா...
தீவிரவாதப் பிரச்ச...
கூடாது என அவர்...
வெளிநாட்டுச் சுற்...
போது ஒபாமா பல...
குச் சென்றிருந்தா...
காலத்தில் அமெரிக்...
அவர் சென்றது இ...
என்பது குறிப்பிடத்...

# சிகா வைரஸுக்கான தடுப்பூசி கண்டுபிடிப்பு

## சோதனைக்கு உட்படுத்த முடிவு

ஹைதராபாத், பெப்.5

சிகா வைரஸ் உலகில் வேகமாகப் பரவி வரும் நிலையில், இதுவரை அதற்கான எந்த மருந்தும் கண்டுபிடிக்கப்படாதபோது, சிகா வைரஸை முறியடிக்கக்கூடிய மருந்து கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாக ஹைதராபாத் மருத்துவக் குழுவினர் தெரிவித்துள்ளனர்.

குறித்த மருந்து சோதனைக்குட்படுத்தப்படவுள்ளது. சோதனைக்கான அனுமதியை உலக சுகாதார நிறுவனம் வழங்கியுள்ளது.

மேலும் இரண்டு வகைகளில் மருந்துகள் தயாராகியுள்ளன. அவற்றில் ஒன்று வைரஸை மாற்றமடையச் செய்யக்கூடியது. மற்றையது வைரஸ் செயற்பாட்டை முடக்கக்கூடியது என்று தெரிவிக்கப்பட்டது.

வைரஸ் இன மாற்றத்தைச் செய்யக் கூடிய மருந்து மரபணு ரீதியில் உருவாக்கப்பட்டுள்ளது. மற்றைய மருந்து வைரஸின் வளர்ச்சி, இனப்பெருக்கத்தைக் கட்டுப்படுத்தக்கூடியதும் தொற்று ஏற்படுவதை தடுக்க வல்லதுமாகும் என மருத்துவர்கள் தெரிவித்தனர்.

நாம் இந்த மருந்துகளை விலங்குகளில் பிரயோகித்ததில் சிறந்த மாற்றம் ஏற்பட்டது என நிறுவனத் தலைவர் கிருஸ்ணா எலா தெரிவித்தார்.

மேலும், 5 மாதங்கள் முதற்கட்ட பரிசோதனைகளின் பின்பு முறையான அங்கீகாரத்தைப் பெற முடியும். தடுப்பூசி பரிசோதனைக்கான அனுமதி வழங்கப்பட்டுள்ளது. உலக ரீதியாக தடுப்பூசிக்கான முதல் சோதனைக்குரிய மருந்தை நாம் கண்டு பிடித்துள்ளோம் எனவும் அவர் தெரிவித்தார்.

மிகவும் விரைவான இந்தக் கண்டுபிடிப்பு மகிழ்ச்சியைத்தருகிறது. இந்த மருந்து தொடர்பான மேலதிக பரிசோதனைகள் மேற்கொள்ளப்படும் என இந்திய மருத்துவ ஆராய்ச்சிப் பணியகத்தினர் தெரிவித்தனர். (து-ரி4)

# ராணுவத்தில் பணியாற்றிய சிறு...
# தலிபான்களால் சுட்டுப் படுகொ...

குன்டூஸ், பெப். 5

ஆப்கான் இராணுவத்தில் பணிபுரிந்த 12 வயதுச் சிறுவன் தலிபான்களால் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளான் என நேற்று முன்தினம் ஆப்கான் அதிகாரிகள் தெரிவித்தனர்.

ஆப்கான் இராணுவத்தில் பணியாற்றிய சிறுவனைத் தலிபான்கள் சுட்டுக்கொன்றுள்ளனர். வசில் அகமத் எனும் சிறுவனே இவ்வாறு கொல்லப்பட்டான். இவரது மாமா தலிபான் இயக்கத்தில் இருந்துள்ளார். பின்னர் தனது ஆதரவாளர்களுடன் அரச படையில் இணைந்து தலிபான்களுக்கு எதிராகத் தாக்குதலில் ஈடுபட்டுள்ளார். இந்தத் தாக்குதலில் வசில் அகமத்தின் தந்தை உள் ... உயிரிழந்தனர். அவரது மாமாவும் காயமடைந்தார்.

இதையடுத்து அவரது படைக்கு அகமத் தலிபான் எனும் 10 வயதுச் சிறுவன் தலைமை தாங்கி தலிபான்களுக்கு எதிராகப் போர் இடம் பெற்றது. இந்தப்போரில் அந்தச் சிறுவன் தலிபான்களுக்கு எதிராகச் சிறப்பாகப் போர் புரிந்துள்ளார். இதை யடுத்து அவரைப் போர்க் கதாநாயகன் என்று ராணுவத்தினர் பாராட்டினர். இந்தச் சம்பவம் இரண்டு வருடங்களுக்கு முன்னர் இடம் பெற்றுள்ளது. பின்னர் அகமத் தனது பள்ளிப் படிப்பைத் தொடர்ந்துள்ளார். இந்த நிலையில், காய்கறி வாங்குவதற்காகத் தனது



வீட்டில் இருந்து வெளியே வந்த அகமத்தின் தலையில் இரண்டு தோட்டாக்களைப் பிரயோகித்து அவர்கள் கொலை செய்துள்ளனர். அகமத்தைத் தலையில் சுட்டுக் கொன்றுள்ளதாகத்

தீவிரவ...
துள்ளன...
இது கு...
சுதந்திர...
கள் ...
செய்தி...
பைடர் ...
போரில்...
ஈடுபடு...
ஆனா...
தீவிரவ...
அவர்க...
வருகின்...
மேலும்...
குத் த...
வதற்கு...
மூலம் ...
...தை ...
...ளை...
லில் நின்...
பத்து வ...
அகமத்...
சுட்டுக்...
அவர் க...
துள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

...யில்
...மா

...ப்.5
...பிரான பின்னர்
... முஸ்லிம் வழிபாட்
...க்கு அதிபர் ஒபாமா
...மெரிக்க முஸ்லிம்
...மையான அடக்கு
...தித்து வருவதாகக்
... ஒபாமாவின் இந்த
... முக்கியத்துவம்
...ப்படுகிறது.
...பில் உள்ள மசூதிக்
...வர் அங்குள்ள
...யத்தினரிடையே
... அப்போது அரசி
...நக்காக முஸ்லிம்
...கருத்துக்கள் தெரி
...வது மிகவும் மன்
...என்று கூறினார்.
...பில் பேசியதாவது:-
...எதிராகப் போராடு
...வழி, அமெரிக்கா
...ா ஒடுக்கவில்லை
...வதுதான். மேலும்
... அவதூறு களுக்கு
...பது தான். அமெ
...ம் முஸ்லிம் சமு
...கிறார்கள் என்பது
...ம். இது கவலை
... மட்டுமல்லாமல்
...நற்கான நேரமும்
...அமெரிக்கர்களும்
...து கவலை கொள்
...மேலாக அமெரிக்க
...ா உங்களுக்கு
...ல உள்ளது. உங்
... சமுதாயமும் சில
...ாக்குதலுக்காக
...டுகிறது.
...பிக்கையின் மீது
...டுப்பது, அமெ
...சீக்கியர் உள்ளிட்ட
...னர் மீதான நம்பிக்
...ல ஏற்படுத்தும்.
...ந்திரத்திற்கு நாம்
...த்த வேண்டும்.
...நந்து எம்முடைய
...க்கும் பொருட்டு,
...ரங்களில் ஈடுபடக்
...கூறினார்.
...ப் பயணங்களின்
...வேறு மசூதிகளுக்
...லும். தனது பதவிக்
...விலுள்ள மசூதிக்கு
...வே முதல் முறை
...தக்கது. (த-ரி4)

...ுவன்
...ாலை

...திகள் தெரிவித்
...ர்.
...ித்து ஆப்கன்
... மனித உரிமை
...ணையத்தின்
...ளர் ரஃபுல்லா
...கூறியதாவது,
... சிறுவர்களை
...துவது தவறு.
... ராணுவமும்
...களும் தொடர்ந்து
...ளப் பயன்படுத்தி
...னர்.
...கமத்தை படைக்
...லமை தாங்கு
...அனுமதித்ததன்
...காண அரசு சட்
...ியுள்ளது. அதே
...பில் வீட்டு வாச
...கொண்டிருந்த
...து சிறுவனான
... தீவிரவாதிகள்
...ான்றதுக்கும்
...டனம் தெரிவித்




இந்தியாவில் 2 ஆயிரத்துக்கும் மேற்பட்ட பெண்கள் மிகப்பெரிய போர்வையொன்றைத் தயாரித்து கின்னஸ் உலகசாதனைப் பதிவில் இடம்பிடித்துள்ளனர். 6 மாத உழைப்பில், 11 ஆயிரத்து 148 சதுர அடிப்பரப்பில் அதாவது பாதி கால் பந்து மைதானமளவுக்குப் போர்வையைத் தயாரித்துள்ளனர். 14 இனத் தவர்கள் இந்த முயற்சியில் ஒற்றுமையுடன் ஈடுபட்டனர். முந்தைய சாதனையாக தென் ஆபிரிக்காவில் 3 ஆயிரத்து 377 அடி போர்வையே சாதனையாக இருந்தது. தற்போதைய சாதனை அதனைவிடப் பல மடங்குகள் அதிகமாகும். (ரி4)

# 200 நாய்களை வளர்க்கும் பெண்

அசன், பெப்.5
தென்கொரியாவில் பெண் ஒருவர் 200 நாய்களை வளர்த்து வருகிறார். தென் கொரிய கலாசார உணவுகளில் நாய்க் கறியும் ஒன்றாகும். சமீப காலமாக நாய்களைச் செல்லப் பிராணிகளாக வளர்க்க ஆரம்பித்துள்ளனர். கடந்த 26 வருடங்களாக யுங் மியங் சூக் எனும் 61 வயதான பெண் நாய்களைக் கொல்வோரிடம் இருந்து அவற்றை மீட்கும் பணியில் ஈடுபட்டுள்ளார். சமைப்பதற்காகவோ, விற்கப்படுவதற்காகவோ எடுத்துச் செல்லப்படும் நாய்களை மீட்டு தமது பாதுகாப்பில் அவற்றை வளர்த்து வருகிறார்.
நாய்களின் சத்தத்தாலும், இதர சுகாதார பிரச்சினைகளாலும், இதுவரை அவர் 7 வீடுகளுக்கு குடிபெயர்ந்துள்ளார். துப்புரவுத் தொழில் செய்வதன் மூலமும், மீள் சுழற்சி முயற்சிகளில் ஈடுபடுவதன் மூலமும் பல நாய்களுக்கு உணவளித்து வருகிறார். அவர் வளர்க்கும் நாய்கள் அனைத்தும் ஆரோக்கியமாக இருப்பதாக சம்பவ இடத்துக்குச் சென்ற ஊடகவியலாளர் தெரிவித்தார். எனது நாய்கள் பசியுடன் இருப்பதில்லை, அத்துடன் அனைத்து நாய்களும் சுதந்திரமாக வசிக்கின்றன என யுங் தெரிவித்துள்ளார். மேலும் எனது ஆடைத்தோற்றம் பற்றி சிலர் அவதூறாகப் பேசுவர். ஆனால் நான் அவற்றைக் கருத்தில் கொள்வதில்லை, எனது நாய்களின் மீது எனக்கு அதிக கவனம் உண்டு எனத் தெரிவித்தார். (ரி4)





# ஆஸியிலும் சிகா

ஆஸ்திரேலியாவில் இருவருக்கு சிகா வைரஸ் தொற்று இருப்பது கண்டு பிடிக்கப்பட்டுள்ளது. கடந்த திங்கட்கிழமை கரீபியனுக்குச் சுற்றுலா சென்று வந்த பயணிகளைச் சோதனையிட்ட போது இந்தத் தொற்று கண்டுபிடிக்கப் பட்டது என சுகாதார அதிகாரிகள் தெரி வித்தனர்.
சிட்னி விமான நிலையத்தில் சோதனை நடத்தப்பட்டதில் இது கண்டுபிடிக்கப்பட்டது. இது வரை சிகா வைரஸுக்கான தடுப்பு மருந்துகள் எவையும் கண்டு பிடிக்கப்படவில்லை.
தென் கிழக்கு ஆசியாவில் இருந்து சிட்னி வரும் விமானங்களில் நுளம்புத் தடுப்பு மருந்துகள் தெளிக்கப்படுகின் றன. விமான நிலையத்தில் சிகா வைரஸ் பரவுவதைத் தடுக்க நடவடிக் கைகள் எடுக்கப்பட்டுள்ளன என சுகா தார அதி காரிகள் தெரிவித்தனர். (ற-ரி4)

# இயந்திரங்கள் மூலம் இயங்கும் முதல் பண்ணை ஜப்பானில்

டோக்கியோ, பெப். 5
விதைப்பதைத் தவிர தண்ணீர் ஊற்றி வளர்த்து அறுவடை செய்வதுவரை அனைத்து வேலைகளையும் ரோபோக்கள் மட்டுமே செய்யும் விவசாயப் பண்ணை ஒன்றை ஜப்பான் நிறுவனம் உருவாக்க முடிவு செய்துள்ளது. பொருளாதார நெருக்கடியைத் தவிர்க்கவும், அதிகரித்துவரும் முதியவர்களின் எண்ணிக்கை யால் ஏற்பட்டுள்ள தொழிலாளர் நெருக்கடியை ஈடுசெய்யவும் இந்தத் திட்டம் ஏற்படுத்தப்பட்டுள்ளது.
இயந்திரங்கள் மூலம் லட்டியூஸ் தாவரம் பராமரிக்கப்படவுள்ளது. இதன் மூலம் ஒரு நாளைக்கு 21 ஆயிரத்திலிருந்து 50 ஆயிரம் லட்டியூஸ்கள்வரை அறுவடை செய்ய முடியும். 5 ஆண்டுகளில் இதன் எண்ணிக்கையை அரை மில்லியனாக்கும் முயற்சி மேற் கொள்ளப்படும் என்று தெரிவிக் கப்பட்டது. தானியங்கி இயந்திரம் மூலமான பயிர்ச் செய்கை லட்டி யூஸ் தாவரத் துக்கு மட்டுமே உகந்ததாகவுள் ளது. வெப்ப நிலை, காபனீரொக்சைட் அளவு, ஒளிச் செறிவு என்பன இயந்திரத்தால் கண்காணிக் கப்படுகிறது.
அடுத்த ஆண்டு நடுப்பகுதியில் இருந்து 4 ஆயிரத்து 400 சதுர அடியில் இந்தப் பண்ணை செயல்பாட்டுக்கு வருகிறது என்றும் தெரிவிக்கபட்டுள் ளது.
ஜப்பானில் இளைஞர்களின் எண்ணிக்கை குறைந்து வரு கிறது. கடுமையான தொழிலாளர் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதை அடுத்து ரோபோ தொழிலாளர் களை பயன்படுத்த ஜப்பான் தீர் மானித்துள்ளது.
அண்மையில் வெளியான ஆய்வு ஒன்றில் 2035 ஆம் ஆண்டுக்குள் ஜப்பானில் செய் யப்படும் படைப்புத்திறன் அற்ற வேலைகளில் பல வேலைகளை ரோபோக்கள் செய்வதற்கான வாய்ப்பு உள்ளது என்று நொமூறா ஆய்வு நிறுவனம் எதிர்வு கூறியுள்ளது. (ற-ரி4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வலி.கிழக்கு பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டம் ஒரு நோக்கு

அச்சுவேலி செய்தியாளர்

வலி.கிழக்கு கோப்பாய் பிரதேச செயலக மாநாட்டு மண்டபம் இதுவரை இல்லாத மக்கள் கூட்டத்தால் நிரம்பிக் காணப்பட்டது. பொருத்தமான வடிவமைப்பில் இருக் கைகள் ஒழுங்கு செய்யப்பட்டு ஒலி வாங்கி இணைப்புக்களும் செய்யப்பட்டிருந்தன. தங்களது தேவைகள் குறைபாடுகளை முன்வைக்கலாம். நிறைவு செய்யப்படும் என்ற எண்ணப்பாங்குடன் பொது அமைப்புக்கள் மற்றும் சமூக நிறுவனங்களின் பிரதிநிதிகள் பெருமளவில் சமுகமளித்திருந்தனர்.

வலி.கிழக்கு பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் பிற்பகல் 2.30 மணிக்கு ஆரம்பமாகும் என்ற அறிவிப்புக்கு அமைய சம்பந்தப்பட்டவர்கள் காத்திருந்தனர். கூட்ட மண்டபத்துக்கு இணைத் தலைவர்கள் நால்வரில் இருவரான மாவைசேனாதிராசாமற்றும்இ.அங்கஜன் ஆகியோர் வந்தமர்ந்ததும் கூட்டம் ஆரம்பமாகியது. வடக்கு மாகாண முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன், இராஜாங்க அமைச்சர் திருமதி விஜயகலா மகேஸ்வரன் ஆகிய இருவரும் கூட்டத்துக்குச் சமுகமளிக்கவில்லை என்பது கூட்டத்தில் கலந்து கொண்டவர்கள் மத்தியில் ஏமாற்றத்தை ஏற்படுத்தியதை அவதானிக்க முடிந்தது.

நாடாளுமன்ற உறுப்பினர்களான ஈ.சரவணபவன், எஸ்.சிறிதரன் மற்றும் வடக்கு மாகாண சபை உறுப்பினர்களான சிவாஜிலிங்கம், பரஞ்சோதி, சுகிர்தன், திருமதி அனந்தி சசிதரன் உட்பட சிலர் கலந்து கொண்டனர். கூட்டம் 2.40 மணிக்கு ஆரம்பமாகியது. மாலை 6.20 மணி வரை 3 மணித்தியாலம் 40 நிமிடங்கள் கூட்டம் நடைபெற்றது.

பிரதேச செயலர் ம.பிரதீபனின் முன்னிலைப்படுத்தலுடன் துறைசார் திணைக்களத் தலைவர்கள் தமது திணைக்களங் கள் மற்றும் கூட்டுத்தாபனங்கள், சபைகளின் பொறுப்பதிகாரிகள் ஆகியோர் தத்தமது திணைக்கள, சபைகளினால் வலி.கிழக்கில் முன்னெடுக்கப்பட்ட வேலைத் திட்டங்கள் மற்றும் 2016 ஆம் ஆண்டு முன் னெடுக்கவுள்ள வேலைத் திட்டங்கள் தொடர்பான விவரங்களை முன்வைத்துத் தமது முன் வைப்புக்களை மேற்கொண்டனர்.

அதிகாரிகளால் முன்வைப்புக்கள் மேற்கொள்ளப்பட்ட போது நாடாளுமன்றஉறுப்பினர் சரவணபவன், சிறிதரன் ஆகியோர் அவர்களிடையே விரிவான பதிலுக்கான சில வினாக்களை கேட்டு மேலதிக விவரங்களை முன்வைக்கச்செய்தனர்.

இதேவேளையில் வாய் மொழியாகவும் காட்சிப்படுத்தல் திரையிலும் தெரிவிக்கப்பட்ட தகவல்களை எழுத்து மூல அறிக்கையாகவும் சமர்ப்பிக்க வேண்டும் என்ற ஆலோசனை நாடாளுமன்ற உறுப்பினர் சிறிதரனால் முன்வைக்கப்பட்டதோடு, அடுத்த கூட்டத்தில் அந்த நடைமுறை பின்பற்றப்பட வேண்டும் என வலியுறுத்திக் கூறப்பட்டது.

அதிகாரிகளின் அறிக்கைகள் முன்வைப்பை அடுத்து அது தொடர்பாக பொதுமக்கள் அமைப்புக்கள் சமூக நிறுவனங்களின் பிரதிநிதிகளின் தேவைகள், எதிர்பார்ப்புக்கள் தொடர்பான கருத்துக்கள் அறிந்து கொள்வதற்கு சந்தர்ப்பம் வழங்கப்பட்டது.

இதன்போது பொதுமக்கள் தமது தேவைகள் குறைபாடுகளை எழுத்து வடிவில் சமர்ப்பிப்பது காத்திரமாக இருக்கும். அடுத்த கூட்டத்தின் போது அது தொடர்பானசெயற்படுத்தல் மற்றும்நிறைவுசெய்தலை ஒப்பு நோக்கி மேற் கொண்டு நடவடிக்கையை முன்னெடுக்கலாம் என இணைத்தலைவர் மாவை சேனாதிராசா கேட்டுக்கொண்டார்.

> **“பொதுமக்கள் தமது தேவைகள் குறைபாடுகளை எழுத்து வடிவில் சமர்ப்பிப்பது காத்திரமாக இருக்கும். அடுத்த கூட்டத்தின்போது அது தொடர்பான செயற்படுத்தல் மற்றும் நிறைவு செய்தலை ஒப்புநோக்கி மேற்கொண்டு நடவடிக்கையை முன்னெடுக்கலாம் என இணைத்தலைவர் மாவை சேனாதிராசா கேட்டுக்கொண்டார்.”**

இணைத்தலைவர் மாவை சேனாதிராசா தலைமை உரை ஆற்றுகையில், சமகால அரசியல் நிலைப்பாடு, அபிவிருத்தியின் அவ சியம், இலங்கை அரசியலில் ஏற்பட்டுள்ள மாற்றங்கள் எதிர்காலத்தில் ஏற்படலாம்என எதிர்பார்ப்பனவற்றை வெளிப்படுத்தினார்.

இணைத் தலைவர் அங்கஜன் பேசிய போது அபிவிருத்தி மற்றும் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் சிறப்பு இயல்பு என்பவை பற்றி பேசியதோடு ஜனாதிபதியின் செயற்பாட்டால் சம்பந்தன் ஐயாவுக்கு எதிர்க்கட்சித் தலைமை கிடைத்தது எனக்கூறியபோது இடைமறித்த நாடாளுமன்ற உறுப்பினர் சிறிதரன், ஜனாதிபதி எதிர்க்கட்சித் தலைவர் பதவியை வழங்கவில்லை. நாடாளுமன்ற நடைமுறை விதிகளின் பிரகாரம் தான் எதிர்க்கட்சித் தலைவர் பதவி கிடைத்தது எனக் கூறினார். அதனை ஏற்றுக் கொள்வதாகக் கூறினார் அங்கஜன். வலி.கிழக்கு பிரதேசத்தின் கல்வி நிலை தொடர்பாக கோட்டக் கல்வி அதிகாரி எஸ்.ஏ.சற்குணராசா கருத்துக்கள் மற்றும் தகவல்களை முன்வைத்தார்.

கல்வி தொடர்பான கருத்துப் பரிமாற்றலின்போது, கோப்பாய்க் கல்விக் கோட்டத்தில் ஆறு பாடசாலைகள் மூடப்பட்டிருப்பதாகவும், அதில் ஐந்து பாடசாலைகள் அச்சுவேலிப் பகுதியில் மூடப்பட்டிருப்பதாகவும் கடந்த வருடம் வளலாய் அமெரிக்க மிசன் பாடசாலை திறக்கப்பட்டபோதிலும், அது பாடசாலைக்கான கட்டமைப்பில் செயற்படவில்லை எனவும் தெரிவிக்கப்பட்டது. அத்துடன் பாட சாலைகள் மூடப்பட்டதால் பயன்படுத்தப்படாமல் இருக்கும் கட்டடங்கள், அந்தக் காணிகளை கல்வித் தேவைக்கு பயன்படுத்த முன்வரவேண்டும் எனவும் வலியுறுத்தப்பட்டது.

இது தொடர்பான கருத்துக்களை ஏற்றுக்கொண்டதோடு அடுத்த கூட்டத்தில் பிரதேச செயலர் விவரமான அறிக்கையை முன்வைப்பதாகக் கூறினார்.




## தனுசு

(உங்களுக்கு 2016 எப்படி? என்ற தொடரில் தனுசு ராசிக்காரர்களுக்கான பலன்கள் பற்றி நேற்றைய உதயனில் பார்த்தோம். தனுசு ராசி குறித்த விவரங்கள் இன்றும் தொடர்கின்றன.)

**ஜூன்**

9இல் குரு சஞ்சரிப்பதும் மாதமுற்பாதியில் சூரியன் 6இல் சஞ்சாரம் செய்யவிருப்பதும் அனுகூலமான அமைப்பாகும். பணவரவுகள் சிறப்பாக இருக்கும். எடுக்கும் முயற்சிகளில் தடைகளுக்குப்பின் வெற்றி கிட்டும். கணவன்- மனைவியிடையே கருத்து வேறுபாடுகள் தோன்றினாலும் ஒற்றுமை குறையாது. உடல் ஆரோக்கியத்தில் அக்கறை எடுத்துக்கொள்வதும், உணவு விடயங்களில் கட்டுப்பாட்டுடன் இருப்பதும் நல்லது. ஆடம்பரச் செலவுகளைக் குறைத்துக்கொண்டால் கடன்களையும் தவிர்த்துவிட முடியும். உத்தியோகஸ்தர்கள் தங்கள் பணிகளில் கவனத்துடன் நடந்து கொள்வது நல்லது. வேலைப்பளு அதிகரிப்பதால் உடல்நிலை சோர்வடையும். முருகனை வழிபடவும்.

**ஜூலை**

சமசப்தம ஸ்தானமான 7இல் சுக்கிரன், புதனும், 9இல் குருவும் சஞ்சாரம் செய்வதால் குடும்பத்தில் மகிழ்ச்சியும் சுபீட்சமும் நிலவும். கடந்த காலத்திலிருந்த பொருளாதார நெருக்கடிகள், அனைத்தும் விலகி முன்னேற்றமான நிலையைக் கொடுக்கும். பணவரவுகள் சரளமாக நடைபெறும். தடைப் பட்ட சுபகாரியங்கள் கைகூடி மகிழ்ச்சியளிக்கும். உற்றார்- உறவினர்களால் ஓரளவுக்கு அனுகூலமான பயன்கள் உண்டாகும். கொடுக்கல்- வாங்கல் இலாபமளிக்கும். தொழில், வியாபாரம் செய்பவர்களுக்கு புதிய வாய்ப்புகள் தேடி வரும். உத்தியோகத்தர்களுக்கு எதிர்பார்க்கும் உயர்வுகள் கிட்டும். ஆஞ்சநேயரை வழிபாடு செய்வது உத்தமம்.

**ஓகஸ்ட்**

ஏழரைச் சனி நடைபெறுவதும் 8-ல் சூரியன் சஞ்சரிப்பதும் சாதகமற்ற அமைப்பாகும். இம்மாதம் ஏற்படவுள்ள குரு மாற்றத்தால் குரு 10-ஆம் வீட்டுக்கு செல்லவிருப்பதால் பண விவகாரங்களில் சற்று கவனத்துடன் நடந்துகொள்வது நல்லது. தொழில், வியாபாரம் செய்பவர்களுக்கு ஏற்ற இறக்கமான நிலைஉண்டாகும். நெருங்கியவர்களை அனுசரித்துச் செலவும். உடல் நிலையில் சிறுசிறு பாதிப்புகள் ஏற்பட்டாலும் அன்றாடப் பணிகளில் சுறுசுறுப்பு டன் செயற்பட முடியும். கொடுக்கல்- வாங்கலில் கவனம் தேவை. சனி, குருவுக்கு பரிகாரம் செய்வது மூலம் நற்பலன்களை அடையமுடியும்.

**செப்ரெம்பர்**

ஏழரைச் சனி நடைபெறுவதும், 12இல் செவ்வாய் சஞ்சரிப்பதும் தேவையற்ற அலைச்சல், பதற்றம் உண்டாக்கும் அமைப்பென்றாலும், 9இல் சூரியன் சஞ்சரிப்பதால் எதையும் சமாளிப்பீர்கள். நெருங்கியவர்களை அனுசரித்து நடப்பதும், உடல் ஆரோக்கியத்தில் கவனம் செலுத்துவதும் நல்லது. பிறர் விடயங்களில் தலையீடு செய்தால் வீண் பிரச்சினைகளைச் சந்திப்பீர்கள். பணவரவுகளிலும் சிறுசிறு நெருக்கடிகள் உண்டாகும். உத்தியோகத்தர்கள் எதிர்பார்க்கும் உயர்வுகள் சற்றே தாமதப்படும். தேவையற்ற பயணங்களைத் தவிர்ப்பது நல்லது. பணம் கொடுக்கல்- வாங்கலில் பெரிய முதலீடுகளைத் தவிர்ப்பது உத்தமம். முருக வழிபாடு, சிவவழிபாடு செய்வது உத்தமம்.

**ஒக்ரோபர்**

ஜென்ம ராசிக்கு 3இல் கேதுவும், 11இல் சுக்கிரனும் மாத பிற்பாதியில் 11இல் சூரியனும் சஞ்சாரம் செய்வதால் லாபங்கள் பெருகும். நெருங்கியவர்களிடையே சிறுசிறு கருத்து வேறுபாடுகள் உண்டாகும் என்றாலும், ஒற்றுமை குறையாது. தொழில், வியாபாரம் செய்பவர்கள் போட்டிகளைச் சமாளிக்கமுடியும். தேவையற்ற பயணங்களைத் தவிர்ப்பது, ஆடம்பரச் செலவுகளைக் குறைப்பது நல்லது. தட்சிணாமூர்த்தியை வழிபாடு செய்வது உத்தமம்.

**நவம்பர்**

ஏழரைச் சனி நடைபெற்றாலும் இலாப ஸ்தானமான 11இல் சூரியன் சஞ்சரிப்பதால் எதையும் சமாளிக்கும் ஆற்றல் உண்டாகும். தொழில், வியாபாரத்திலிருந்த மறைமுக எதிர்ப்புகள் மறையும். புதிய வாய்ப்புகளும் தேடிவரும். வெளியூர் பயணங்களால் சாதகமான பயன்களை அடையமுடியும். கணவன்- மனைவி விட்டுக்கொடுத்து நடப்பது நல்லது. உறவினர்களை அனுசரித்து நடப்பது நல்லது. ஆஞ்சநேயரை வழிபடுவது நற்பயனைத் தரும்.

டிசெம்பர்

விரய ஸ்தானமான 12இல் சூரியன், சனி சஞ்சாரம் செய்வது சாதகமற்ற அமைப்பு என்றாலும் 7ஆம் தேதி முதல் 3இல் செவ்வாய் சஞ்சாரம் செய்யவிருப்பதால் எடுக்கும் முயற்சிகளில் தடைகளுக்குப்பின் வெற்றி கிட்டும். உத்தியோகத்தர்கள் தங்கள் பணிகளில் மட்டும் கவனம்செலுத்துவதும், பிறர் விடயங்களில் தலையீடு செய்யாதிருப்பதும் நல்லது. சுபகாரிய முயற்சிகளில் சில தடைகளுக்குப் பின் அனுகூலம் உண்டாகும். கொடுக்கல்- வாங்கலில் கவனம் தேவை. ஆஞ்சநேயரை வழிபடுவது உத்தமம்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பகை கொண்டு எதிர்ப்பவனும் அழிக்க முடியா காப்பரண்

செ.உமாசுதன்

போர் தின்ற தாய் மண்ணில் கல்வி ஒளி தந்த கூடம் இது...
போரும் கல்வியும் இணைந்த வாழ்வு தமிழன் வரலாற்றுத் தேவை என்பதை உணர்த்திய ஆரம்பமிது...
விடுதலைக்கு கல்வி கவசம், கல்விக்கு விடுதலைப் போராட்டம் காப்பரண் என்றுரைத்த கூற்றின் பிறப்பிடமிது...
தியாகச் செம்மல் வந்துதித்த உயர் பீடமிது...
தமிழ் பொங்கியது...
பல வீரங்கள் கிளர்ந்தெழுந்தது...
படிப்போடு தாய் மண் காக்க களம் புகுந்து வீரமாய் நின்றது...
தியாகங்களின் காவியமாயும் போனது....
இத்தனைக்கும் நிலை குலையாத கல்வித் தாய் உறையும் புனித பூமியிது...
இருந்தும் தரம் பிரித்தல் என்பதில் அதிகாரத்திடம் அடக்கம் கண்டு வருகிறோம்...
வருடம் தோறும் பெரும்பான்மைகள் புகுந்துவரப் பார்த்திருக்கிறோம்....
கல்விப் பொதுத் தராதரத்தில் எங்கள் நிலைத்திருப்பை குறைக்கும் முயற்சிகளுக்கு அடியெடுத்துக் கொடுத்து நிற்கிறோம்....
வருடம் தோறும் ஆயிரமாயிரமாய் வெளிக் கிளம்புகிறோம்...
அரசகொள்கையிடலால் படிப்புரிமை வேண்டிக் காத்திருக்கிறோம்...
எதிலும் விடுதலை இன்றி போராடிக் கொண்டிருக்கிறோம்...
கல்வி தமிழன் சொத்தென்பதில் நலிவின்றி என்றும் நிறைவாய் இருக்கிறோம்....
தினம் தினம் வேடம் கட்டுகிறோம்...நல்லூரான் வீதி நடந்து அவன் பாதம் பற்றுகிறோம்...
இறை நம்பிக்கையிலும் நலிவின்றி இருக்கிறோம்...
கல்வி என்ற ஒளி கல்விப்புலம் என்ற புலனாய் உருவம் கொண்டு இயக்கமுறுவதால் எம் மண்ணில் இன்னமும் தமிழன் என்ற நிமிர்வோடு நெஞ்சுரம் கொண்டிருக்கிறோம்...
இருந்தும் விடுதலை வேண்டிய பயணத்தில் அந்தமின்றி நடைப்பிணங்களாய் அசைந்து அல்லாடிக் கொண்டிருக்கிறோம்...

இந்த உருவ அமைப்பில், நான் சொன்னது போன்று கலைஞன் ஓர் சமூகத்தின் விடுதலையில் கல்விப்புலத்தின் நிலைத்திருப்பும் அங்கிருந்தான ஓர் ஆளுமையின் வெளித் தள்ளுகையும் சரி நிகர் சமானமாய் தாக்கம் பெற வேண்டும் என்பதை சொல்லி வைத்தார் போலும்......
எல்லோரும் வாரும்...நான் சொன்னது சரியோ பாரும்...
சிலது புதிதாய் உமக்கும் புரியும்.......!!

கேடில் விழுச்செல்வம் கல்வி ஒருவர்க்கு
மாடல்ல மற்றையவை.... என வள்ளுவப் பெருந்தகை கல்வியின் காத்திரம் என்பது மனிதர்க்கு என்றும் ஒளி தரும் நேத்திரம் என்பதைச் சொல்லி நிறைந்தான். எப்போதும் அழிவு இல்லாத சிறந்த செல்வம் கல்வியே. நாம் ஆண்டு அனுபவிக்கின்ற வேறெந்தச் செல்வங்களும் அத்தகைய சிறப்புடைய செல்வங்கள் அல்ல. கிடைத்தற்கரிய சீர் என்பதை குறள் பாக்களில் மொழிந்து வார்த்தைகளில் செதுக்கி எம்முன் சிறந்தான். கல்வி எனும் பெருஞ் செல்வம் தருகின்ற அறிவின் ஊட்டம் என்பது அழிவு வராமல் தடுக்கும், காக்கும் கருவி. பகை கொண்டு எதிர்ப்பவரும் அழிக்க முடியாத உள்ளரண், காப்பரண்.

இத்தகைய சிறப்புக்களை தன் அணிகலனாக.மூலதனமாகக் கொண்ட ஓர் இனம் தமிழினம்.எப்போதும் துடிப்போடு செயற்படுகின்ற சமூகம்.ஒவ்வோர் பெற்றோரும் தம் பிள்ளை இந்தச் சமூகத்தின் சாலையில்,அதனிடை காலத்துக்குக் காலம் வெளிக் கிளம்புகின்ற புதிய மாற்றங்களை, கோலங்களை உய்த்தறிந்து நல்லவற்றை உள்வாங்கிக் கொள்ள வேண்டும் என விரும்புபவர்கள். அறிவு ரீதியாக மற்றவர்களோடு போட்டியிட்டு அவர்களுக்கு நிகராக வாழ்வில் சிறக்க வேண்டும் என்ற உயர்ந்த எண்ணம் கொண்டவர்கள்.இந்த விடயங்களை உதாசீனம் செய்யவும்.எதிர்ப்பால் பின்னகர்ந்து செல்லவும் இடம் தராதவர்கள்.எப்போதும் நேர் சிந்தனையோடு பயணிப்பவர்கள்.

அந்த வகையிலே வடமாகாணத்தைச் சேர்ந்த ஒவ்வோர் பெற்றோரும் தங்கள் பிள்ளைகளை திட்டமிடலோடு தயார்ப்படுத்துகின்றார்கள். இலங்கையின் கல்விக் கொள்கையிடலை சமாளிப்பதற்கும் தரப்படுத்தல் என்கின்ற தடைதாண்டல் பரீட்சைகளைத் தாண்டி வருவதற்கும் முயற்சி என்கின்ற மிகப் பெரிய ஊக்கியை, கல்வி என்கின்ற மூலதனத்தின் சீரான பாய்ச்சலுக்காக தந்துவிடுகின்றனர்.எந்த ஏழ்மை நிலை, வாழ்க்கைப் பாதையை சீர்குலைத்தாலும் தன் வியர்வையை ஊதியமாக்கும் அப்பா.அன்பை அருகிருந்து அள்ளிப் பொழியும் அம்மா. அன்பான அண்ணன்,அக்காள்,தம்பி,தங்கை என கல்வியின் ஒவ்வோர் படிநிலைகளிலும் ஏற்படுகின்ற துன்பங்களையும் பரீட்சைப் படிநிலைகளில் ஏற்படுகின்ற தோல்விகளையும் தட்டிக்கொடுக்கின்ற, ஒருவருக்கொருவர் நட்பாகி ஆரத்தழுவுவதில், ஆற்றுப்படுத்துவதில் தன்னிறைவை தருகின்ற குடும்பத்தின் அங்கத்துவங்களை வேறு எங்கு காண முடியும்? எங்குமில்லை.எம்மினத்திடையே அந்த தன்மைகளையும், தாற்பரியங்களையும் இயல்பாகவே கண்டுகொள்ளமுடியும். இந்த அர்ப்பணிப்பு எனும் தியாகங்களும் முயற்சி என்கின்ற ஆயுதங்களும் தரம் ஐந்து, க.பொ.த சாதாரண தரம்,க.பொ.த உயர்தரம் என்ற படிநிலைகளின் வழியே தாக்கமுறுகின்றன. எதிர்வினைகளுக்கு உட்பட்டு அரசின் பல்கலை அனுமதிக்கான தரப்படுத்தல் என்ற குழியில் விழுந்து மீண்டெழுகின்ற வெளிக்கிளம்புகை, வெற்றியின் ஆரம்பம். மூன்றாம் நிலைக் கல்வி என்கின்ற சாலையில், பல்கலை என்கின்ற புதிய சோலையில், பல் துறைகளில் நீண்ட பயணம்.மூன்று வருடம்,நான்கு வருடம் என நீளுகின்ற பாடத்திட்டங்களின் படையெடுப்பில் திக்குமுக்காடி அசைமென்று,அரையாண்டுப் பரீட்சை அதனிடையேயான இடைநிலைப் பரீட்சை, ஐம்பது பக்கங்களில் ஆய்வின் வெளிப்பாடு, அதற்கான விளக்கவுரை (வைவா) என பாடத்திட்டம், நூலகம் என்றவாறு புத்தகங்களோடான நீச்சல்.இதற்கிடையே வரவேற்பு உபசாரம், இறுதியில் போய் வாருங்கள் என்ற நட்புக்களின் உபசார உபதேசம்.இத்தனையும் தாண்டி வர அழகுற தீட்டப்படுகின்ற சிற்பங்கள் தான் இறுதி வடிவம் கொண்டு பட்டதாரி என்ற புனித நாமங்களோடு வெளித் தரப்படுகின்றன. ஓர் சமூகத்தை வழிநடத்துகின்ற. வழிப்படுத்துகின்ற கல்வியின் புலமைகளாக, நிறைந்த ஆளுமைகளாக உலவ விடப்படுகின்றனர்.இதன் பின்னாக மேலும் செழுமை பெற மேற்படிப்பு என்ற தரவேற்றத்தையும் செய்து கொள்கின்றனர்.

> எப்போதும் அழிவு இல்லாத சிறந்த செல்வம் கல்வியே. நாம் ஆண்டு அனுபவிக்கின்ற வேறெந்தச் செல்வங்களும் அத்தகைய சிறப்புடைய செல்வங்கள் அல்ல. கிடைத்தற்கரிய சீர் என்பதை குறள் பாக்களில் மொழிந்து வார்த்தைகளில் செதுக்கி எம்முன் சிறந்தான். கல்வி எனும் பெருஞ் செல்வம் தருகின்ற அறிவின் ஊட்டம் என்பது அழிவு வராமல் தடுக்கும், காக்கும் கருவி.

இந்தச் சுழற்சியில் சிக்குண்டு வெளிக்கிளம்புகின்ற ஒவ்வோர் பட்டதாரியும் மிகப் பெரிய சவாலை படிப்புரிமைக்காக எதிர் கொள்கின்றான்.அரசின் நியமனக் கொள்கையில் இருந்து வருகின்ற சீரற்ற திட்டங்களும்,திட்டமிட்ட புறக்கணிப்புக்களும் வெற்றி என்ற படிநிலைகளில் சறுக்கலைத் தந்துவிடுகிறது.காத்திருப்பு என்ற முற்றுப்புள்ளியை எதிர்காலத்தின் கேள்விக்குறியாக அவர்கள் முன் நிறுத்திவிடுகின்றன.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

உண்மையில் இந்தக் காத்திருப்பு என்பது ஒவ்வோர் பெற்றோரின் தியாகங்களிலும் மாணவர்களின் அர்ப்பணிப்புக்களிலும் தாக்கத்தை ஏற்படுத்துகின்றன.துன்பங்களையும், கண்ணீர் என்கின்ற அர்ப்பணிப்பின் ஆத்மார்த்தம் தன்னை கரைபுரண்டோட செய்துவிடுகின்றன.இது ஒரு சாபக்கேடு.

உண்மையில் இலங்கையின் வடக்காக கலை, கலாசாரம்,பண்பாடு,தனித்துவமான விழுமியங்கள், பொருண்மிய மேம்பாடுகள் என சிறப்புற்றிருந்தது எம் சமூகம். ஓர் பூர்வீகக் குடிகளாக எமது சுயத்தை நிலைநிறுத்தப் போராடி வந்தோம். 2009களின் மிகக் கொடிய மனிதப் பேரவலம் நிகழ்ந்ததோடு துன்பங்களால் துவண்டு போனோம். இழப்புக்களில் இருந்து மீண்டெழப் போராடி வருகிறோம். ஜனநாயக பிரதிநிதித்துவங்களை நம்பியபடி அல்லாடிக் கொண்டிருக்கிறோம். இருந்தும் எம்மினத்தின் விடுதலைக்கான உன்னத தியாகங்களையும் அவற்றின் அரச கட்டமைப்பூடாக சர்வதேசங்களின் முன் நிமிர்ந்து நின்ற வீரத்தின் செறிவையும் எண்ணிப் பூரித்து மன நிறைவடைகின்றோம்.ஆரம்பங்களில் தரப்படுத்தலில் இருந்து கிளர்ந்த பல்கலையின் முத்தான பார்த்தீபனை நினைதலில் சுமந்து வலம்வருகிறோம்.


இந்த வகையிலே போர் தின்ற தாய் மண்ணில் கல்வி ஒளி தந்த கூடமாக விளங்கும், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் 31 ஆவது பொதுப் பட்டமளிப்பு விழா கடந்த மாதம் 19 ஆம் மற்றும் 20 ஆம் திகதிகளில் கோலாகலமாக இடம்பெற்றிருந்தன. நீண்ட தியாகம் – அர்ப்பணிப்பு என்பவற்றின் இறுதிக் கணங்களில் கிடைக்கின்ற அந்த சந்தோசங்களின் உணர்ச்சிப் பெருக்கு அன்றைய தினம் பல்கலைக்கழக சூழலில் பெருக்கெடுத்திருந்தது. அப்பா.. அம்மா, அண்ணன்... அக்கா, தம்பி.. தங்கை..பாட்டன்.பாட்டி... என சுற்றங்கள் சூழ மகிழ்ந்திருந்து புகைப்படங்களில் அதை பதிவிட்டு, அப்பப்பா எத்தனை கோலாகலம்.தாய் தந்தையர் கிடைத்தற்கரிய பேற்றை அனுபவித்தனர்.

இந்த நிகழ்வுகளின் பொது வெளியிடையே பல்கலைக்கழக நுழைவாயிலில் அமையப்பெற்றிருந்த கருத்தூன்றிய வடிவமைப்பின் தாற்பரியம் எல்லோரையும் சிந்தனைக்கு உட்படுத்தியது.வடிவமைப்பின் கருத்துருவாக்கமும் அதற்கான சிந்தனைச் சிறகடிப்பும் பல விடயங்களை நேர்த்தியாக நெருடலின்றி எல்லோர் மனங்களோடும் பிணைத்தன. மெருகூட்டலின்றி சொல்ல வந்ததை அழகியலோடு தந்தன.பல்கலைகளின் பிறப்பிடம் இது என்பதைத் தமிழன் என்ற நிமிர்தலோடு சொல்லியிருந்தன.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் இராமநாதன் நுண்கலைப்பீட சித்திரமும் – வடிவமைப்பு மாணவர்களின் கலைநயம் என்பது இந்த இடத்திலே கருத்தூன்றி மிளிர்ந்தது பட்டச்சுருள் ஒன்று மண்ணில் இருந்து புதிய பிறப்பெடுக்கின்றது.

அந்தச் சுருளின் மறு அந்தத்தில் இருந்து ஆயிரக்கணக்கான பட்டதாரிக் குழந்தைகள் புதிதாய் பிறப்பெடுக்கின்றன. பட்டம் சூட்டலின்போது அவர்கள் அணியும் தொப்பிகளாய், உண்மையில் அவை அறிவு என்ற மிடுக்கான வீரத்தைக் ஆயுதமாகக் கொண்ட வெறும் தொப்பிகளல்ல; இனத்தின் காப்பரணான குப்பிகள் அவை.

# வர்ணம் தீட்டுவோம்...



## வரலாற்றில் இன்றைய தினம்

1597 - ஜப்பானிய சமூகத்துக்கு அச்சுறுத்தல் எனக் கூற முற்பட்ட ஜப்பானிய கிறிஸ்தவ குழுவினர் புதிய ஜப்பானிய அரசினால் கொலை செய்யப்பட்டனர்.
1782 - பிரித்தானிய படைகளைத் தோற்கடித்து ஸ்பானிஷ் மினறோகாவைக் கைப்பற்றியது.
1905 - நான்கு வைத்திய நிபுணர்களுடன் மெக்ஸிக்கோ பொது மருத்துவமனை மெக்ஸிக்கோவில் தொடங்கப்பட்டது.
1909 - 'பேக்லைற்" எனும் பெயரில் முதன்முதலாக செயற்கை பிளாஸ்ரிக், பெல்ஜிய நாட்டு இரசாயனவியலாளர் லியோ பேக்லோன்ட்டினால் உருவாக் கப்பட்டதாக அறிவிப்பு.
1900 - பனாமாக் கால்வாய் ஒப்பந்தத்தில் ஐக்கிய அமெரிக்காவும் ஐக்கிய ராச்சியமும் கைச்சாத்து.
1998 - ராஜீவ் கொலை வழக்கில் உண்மைகள் மறைக்கப்பட்டுள்ளதாக நெடு மாறன் தெரிவிப்பு.
1998 - சதாம் ஹுசைனின் 8 மாளிகைகளில் சோதனைகள் மேற் கொள்ளப் பட்டன.
1998 - சுதந்திர தின உரையை ஆங்கிலத்தில் மேற்கொண்டமைக்காக ஜனாதிபதி சந்திரிகா குமாரணதுங்க மன்னிப்புக்கோரவேண்டும் என பௌத்த சங் கங்கள் கோரிக்கை.
1995 - யாழ்.மாவட்டத்தில் கடந்த ஆண்டு 5ஆயிரத்து 457பேருக்கு மலேரியா நோய் என அறிக்கையில் தெரிவிப்பு.
1992 - அரசின் அடக்குமுறையைக் கண்டித்து யாழ்ப்பாணத்தின் மாபெரும் எழுச்சிப் பேரணி இடம்பெற்றது. மக்கள் உத்வேகத்துடன் பங்கெடுப்பு.
1992 - படையினரால் 12, 000பேர் வரை கொலைசெய்யப்பட்டதாக ஐ.நா. மனித உரிமை ஆணைக்குழு அறிக்கையில் தெரிவிப்பு.

# சொன்ன பேச்சுக் கேள்

பள்ளிக்கூட விடுமுறை விட்டாகி விட்டது. அத்தோடு மழைக்காலமும் சேர்ந்து கொண்டது.

புதிதாகக் கட்டப்பட்டிருந்த வீடமைப்புப் பகுதியின் அருகில் ஒரு குட்டை இருந்தது. மழைக் காலமானதால் குட்டையில் தண்ணீர் நிரம்பி இருந்தது. அதன் நடை பாதையும் சேறும் சகதியுமாய் வேறு இருந்தது.

குட்டையின் அருகில் போய் விளையாடாதீர்கள். வழுக்கி விழுந்து விடுவீர்கள். குளிக்கவும் போகாதீர்கள் என்று மணி வண்ணனின் அம்மாவும் அப்பாவும் அவனிடம்கண்டித்துச்சொல்லிவிட்டுத்தான் வேலைக்குச் சென்றிருந்தார்கள்.



அவர்கள் தொழிற்சாலையொன்றில் வேலை செய்கிறார்கள்.

மணி பத்துக்கு மேலிருக்கும். வெயில் அடிக்கத் தொடங்கி விட்டது. மணிவண்ணனின் நண்பர்கள் இருவர் அவனை அந்தக் குட்டையில்குளித்து விளையாட அழைத்தார்கள்.

பெற்றோர்கள் போகக்கூடாது என்று சொல்லிவிட்டுச் சென்றதால் மணிவண்ணன் போகவில்லை. அவனது நண்பர்களது பெற்றோர்களும் அவர்களையும் குட்டைப்பக்கம் போகக் கூடாது என்று கண்டித்துச் சொல்லிவிட்டுத்தான் போயிருந்தார்கள். ஆனாலும் அவர்கள் சொன்ன பேச்சைக் கேட்காமல் குட்டையில் குளிக்கும் ஆசையில் கிளம்பி விட்டனர்.

நண்பகல் நேரம் மணிவண்ணன் தன் தம்பி தங்கைகளுடன் சிரித்து கதைபேசியபடி விளையாடிக்கொண்டிருந்தான்.

குய்யோ முய்யோவென பெரும் சத்தம்கேட்டுத் திடுக்கிட்டு வெளியே வந்து பார்க்கிறான் மணிவண்ணன். அக்கம் பக்கத்து வீட்டில் உள்ளவர்களும் வெளியேவந்து சத்தம் வந்த திசையை நோக்கி வேகமாக ஓடுகிறார்கள்.

குட்டையில் யாரோ விழுந்து இறந்து விட்டதாகச் சொல்லிக் கொண்டே ஓடுகிறார்கள்.

மணிவண்ணனுக்குத் திக்கென்றது. சற்றமுன் விளையாடச் சென்ற தனது நண்பர்கள்தான் குட்டையில் சிக்கிக் கொண்டார்கள் என்றுணர்ந்தான். செய்தி கிடைத்து ஓடிவந்த. அவர்களது பெற்றோர்கள் கதறி அழுதார்கள்.

மணிவண்ணனுக்கும் அழுகைவந்தது. அம்மா அவனை ஆதரவாக அணைத்துக்கொண்டாள்.

அன்றிரவு தன் நண்பர்களுக்கு ஏற்பட்ட துர்மரணத்தை எண்ணி தூக்கம் வராமல் படுத்திருந்தான். அவன் விழித்திருப்பதைக் கண்ட அம்மா அவன் அருகில் வந்து உட்கார்ந்து கொள்கிறாா்.

"நான் ஒரு கதை சொல்கிறேன் கேள்..." என்றபடி கூறத்தொடங்கினாா். ஓர் அரசன் வெகுநாள்களாக தன்னிடம் அடிமை வேலை செய்த ஒருவனுக்கு விடுதலை அளித்து. கப்பல் நிறைய சரக்குகளும் கொடுத்தான்.

நீ இந்தச் சரக்குகளை விற்றுப் பணக்காரனாகி. சௌக்கிய மாக இரு... என்றும் ஆசீர்வதித்தான்.

அரசன்கொடுத்த வெகுமதிகளோடு. அடிமை கப்பலில் பயணம் செய்கிறான். கப்பல் புயலில் அகப்பட. கப்பல் உடைந்து. கடல் அலைகள் அவனை ஒரு தீவில் கொண்டு போய்த் தள்ளின.

பயமும். பசியும். களைப்புமாய் தன் நிலையை எண்ணிக்கவலைப்பட்டுக்கொண்டிருக்கையில்... அந்தத்தீவிலுள்ளவர்கள் கையில் பூ மாலையோடு அவனை நோக்கி வந்து வணங்கி னார்கள்.

"அரசே வருக... வருக.. மன்னரே வருக..." எனப் போற்றி பூமாலைகள் அணிவித்தார்கள்.

அடிமைக்கு ஒன்றும் புரியவில்லை. பக்கத்தில் நின்று கொண்டிருந்த ஒரு பெரியவரிடம் முன்பின் தெரியாத என்னை அரசனாக்கி இருக்கிறார்களே.. என்ன விடயம்? எனக்கேட்கிறான்.

அதற்குப் பெரியவர் "இதுதான் இந்தத் தீவின் வழக்கம். ஆனால் இந்த அரச பதவி இன்னும் ஒரு வருட காலந்தான். அதற்குப் பிறகு அரச பதவியிலிருந்து இறக்கி அதோ அந்தக் காட்டில்விட்டு விடுவார்கள்" - என்றார்.

"காடுஎன்றால் கொடியமிருகங்கள் இருக்குமே..." அடிமை பயத்துடன் கேட்க.. ஆமாம்"என்கிறார் பெரியவர்.

"எனக்கு முன்னால் அரசனாக்கப்பட்டவர்களையும் இப்படித்தான் செய்தார்களா...?" "ஆமாம்"

"ஐயோ... அப்படியானால் எனக்கும் இதே கதிதானா...?" "ஆமாம். அப்படித்தான் நடக்கும். நீ முன் ஜாக்கிரதையாக இல்லாவிட்டால்..." "நான் எப்படி முன் ஜாக்கிரதையாக இருப்பது...?"

"நான் சொல்வதைக் கேட்பாயா...?" "சொல்லுங்கள்..."

"நீ இந்த நாட்டு அரசனாக, ஒரு வருட காலம் இருக்கப் போகிறாய். இந்த ஒரு வருட காலம். நீ சொல்வதை எல்லோரும் கேட்பார்கள். அதனால் அந்தக் காட்டை வசிப்பிடமாக வளப்படுத்து. நிறைய தொழிலாளர்களை அனுப்பிக் காட்டை, அழித்து உணவுத் தானியங்களைப் பயிர் செய்யச் சொல். நிறைய வீடுகளைக் கட்டச்சொல். உனக்கும் ஒரு பெரிய அரண்மனையாக கட்டிக்கொள். மக்களை அங்கே குடியேறச்செய். ஒரு வருடம் கழித்து நீ அங்குப் போனவுடன் அங்கும் சௌக்கியமாக வாழலாம்"

"இதை முந்தைய மற்றவர்களுக்கும் சொன்னீர்களா?" அடிமை கேட்க.

"சொன்னோம்.. யாரும் கேட்கவில்லை. கேளிக்கைகளிலும் களியாட்டங்களிலும் ஈடுபட்டு நேரத்தைச் செலவழித்தார்கள். பின்பு ஒரு வருடம் கடந்த பின் காட்டில் விடப்பட்டு. மிருகங்களால் கொல்லப்பட்டார்கள்"

"நான் அப்படியிருக்க மாட்டேன். நீங்கள் சொன்னவற்றை மனதில் வைத்து அதன்படி நடக்கிறேன்" என்றான் அடிமை.

ஒரு வருடத்துக்குள் ஆள்களைக் கொண்டு காட்டை அழித்து சீரமைத்து வளப்படுத்தினான்.

பின்பு ஒரு வருடம் கழித்து தன்னால் சீரமைக்கப்பட்ட காட்டு நிலத்துக்குச் சென்று சௌக்கியமாக வாழ்ந்தான்.

தாய் சொன்ன கதையைக் கேட்ட மணி வண்ணனின் கண்களில் கண்ணீர் வழிந்தோடியது. தன் தாயின் சொல் கேட்டதால் தானே இன்று நான் பிழைத்தேன் என தன் தாயை நன்றியோடு கட்டிப் பிடித்துக் கொண்டான்.



## மல்லிகை

மாலையில் மல்லிகை மலரும்!
மகளிர் மனதைக் கவரும்!
பூசையில் வைக்க உதவும்!
பூவையர் சூடிடச் சிறக்கும்!

வெண்மை நிறத்துக்கு அதுசாட்சி!
வண்டினம் எல்லாம் அதன்கட்சி!
அருமை மல்லிகை என் கட்சி!
அடடா எல்லோரும் அதே கட்சி!

மல்லிகைப் பூவைப் போல
இருக்க வேணும் மனமே!
வெள்ளி நிலவைப் போல
இருக்கும் மல்லிகைப் பூவே!

## பொன் மொழிகள்

- உலகின் குறைகளைப் பற்றி பேசாதே. குறைகளை நோக்கி வருத்தப்படு, எங்கும் நீ குறைகளைக் காண்பாய். ஆனால், நீ உலகுக்கு உதவி செய்ய விருப்பினால் உலகைத் தூற்றாதே, குறை சொல்லாதே. குறை சொல்லி உலகை இன்னும் பல வீனப்படுத்தாதே. உலகின் குறைகள், குற்றங்கள் எல்லாம் அதன் பலவீனத்தால் விளைபவை அல்லவா?
- செயல் நன்று. சிந்தித்து செயலாற்றுவதே நன்று. உனது மனதை உயர்ந்த இலட்சியங்களாலும், சிந்தனைகளாலும் நிரப்பு. அவற்றை ஒவ்வொரு நாளின் பகலிலும் இரவிலும் உன் முன் நிறுத்து; அதிலிருந்து நற் செயல்கள் விளையும்.
- வாழ்வும்,சாவும், நன்மையும் தீமையும், அறிவும் அறியாமையும் ஆகியவற்றின் கலவைதான் மாயா, அல்லது பிரபஞ்சத்தின் இயல்பு. இவ்மாயத்துள் நீஎல்லையற்று மகிழ்ச்சிக்காக அலையலாம். ஆனால் நீ தீமையையும் காண்பாய். தீமையின்றி நன்மை இருக்குமென்பது சிறுபிள்ளைத் தனம்.
- இளைஞர்களே, உங்களுக்கு என்னிடம் நம்பிக்கை இருக்குமானால், என்னை நம்புவதற்குரிய தைரியம் இருக்குமானால், ஒளிமயமான எதிர்காலம் உங்களுக்குக் காத்திருக்கிறது என்பேன்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# விக்கினம் தீர்க்கும் விநாயகப் பெருமான்

ரா ஜு



தனக்குமேல் ஒரு தலைவன் இல்லாத தன்மையாதலால், அதாவது நாயகர் இல்லை என்ற காரணத்தினால் விநாயகர் என்றும், கணங்களுக்கெல்லாம் பதியாக விளங்குபவராதலால் கணபதி என்றும் அழைக்கப்படுபவர் விநாயகர். இவருக்குக் கணேசன், ஆனைமுகன், பிள்ளையார், கரி முகன், கஜமுகன், கஜானனன், மோதகக் கையன், பானை வயிற்றோன் என்று மேலும் பல பெயர்கள் உள்ளன. இத்தகைய மிகவும் பெருமைமிக்கவரான பிள்ளையாரைக் குறித்து அனுஷ்டிக்கப்படும் விரதங்களுள் மிகவும் சக்திவாய்ந்தது இருபத்தொரு நாள் நோற்கப்படுகின்ற பெருங்கதை நோன்பாகும். நாம் எந்தக் காரியத்தைத் தொடங்கினாலும் விநாயகப் பெருமானை வணங்கித் தான் தொடங்க வேண்டும். அப்போதுதான் அந்தக்காரியம் குறைவின்றி நிறைவேறும். கணபதியை நினையாமல் எடுத்த காரியம் எதுவும் சித்தி பெறாது. எமக்குச் சித்திகளை அருளுபவர், ஆதலால் தான் அவருக்குச் சித்தி விநாயகர் என்று பெயர்.

உலகைக்காக்கின்ற பரம்பொருளான சிவபெருமான் திரிபுர தகனத்தின்போது கணபதியைக் கருத்தில் கொள்ளாத காரணத்தால் தான், அவர் புறப்பட்ட தேரின் அச்சு முறிந்தது என்றும் – கலியுகவரதனாம் கந்தப்பெருமான் வள்ளியை ஆட்கொள்ளப்புறப்பட்டபோது விநாயகரை வணங்காது சென்றமையால்தான் காரியம் கைகூடவில்லை என்றும், – பின்பு அவரே யானையாக வந்து திருமணத்தை நடத்தி வைத்ததாகவும் வரலாறு கூறுகிறது.

ஓங்காரமூர்த்தியான விநாயகரை வழிபட்டால் எமது அகங்காரம் நீங்கும் என்பது ஆன்றோர் நம்பிக்கை. தும்பிக்கையானைத் தன்னம்பிக்கையோடு வழிபட்டால் சகல சம்பத்துக்களும் கைவரப் பெறலாம்.

வாக்குண்டாம் நல்ல மனமுண்டாம்
மாமலராள்
நோக்குண்டாம் மேனிநுடங்காது –
"பூக்கொண்டு
துப்பார் திருமேனித் தும்பிக்கையான்
பாதம்
தப்பாமற் சார்வார் தமக்கு." இது ஔவை வாக்கு.

நாங்கள் எழுதத் தொடங்கும் போது பிள்ளையார் சுழி போட்டே எழுதத் தொடங்குகிறோம். பண்டைய நூல்கள், பாடல்கள் எதை எடுத்தாலும் கணபதி காப்புச் செய்யுளுடனேயே ஆரம்பித்திருப்பதை நாம் காணக்கூடியதாக இருக்கின்றது. தும்பிக்கையான் மீது உண்மையான நம்பிக்கையை வைத்துத் தவறாது வழிபட்டால் நிச்சயம் இந்த உலகில் சிறப்புற வாழலாம். ஒரு முறை ஔவையார் அவசர அவசரமாக விநாயகப் பெருமானுக்குப் பூசை செய்தார். அது கண்ட விநாய கர், ஔவையே! என்ன அவசரம்? என வினவினார். ஔவையாரோ 'நான் கைலாசம் போகவேண்டும், அதுதான் இன்று அவசர அவசரமாகப் பூசை செய்கிறேன்' என்றார். அப்போது விநாயகர், 'நானே உன்னைக் கைலாசம் சேர்க்கிறேன். அவசரம் விடுக' என்று அருளிச் செய்தார். பின்பு பூசை நிறைவெய்தியதும் தனது துதிக்கையாலேயே அவரைத் தூக்கிக் கைலாசத்திலே சேர்த்தார் என்பது வரலாறு.

இதிகாசங்களில் சிறந்ததாகக் கருதப்படும் மகாபாரதக் கதையை எழுதியவரும் விநாயகரே. இவரை வழிபடுவது மிகவும் சுலபம். பசுச்சாணியின் உருண்டையிலே அறுகம் புல்லை வைத் தாலே போதும் வந்துவிடுவார் பிள்ளையார். மண்ணினாலே செய்யினும் மஞ்சளிலே செய்யினும் அஞ்செழுத்து மந்திரத்தை நெஞ்சில் நாட்டும் பிள்ளையார் என்ற பாடல் இதனை வலியுறுத்துகின்றது. ஆமையானது தனது ஐந்து உறுப்புகளையும் தன்னகத்தே அடக்குவது போல பிரணவமும் நாதம், விந்து, அகரம், உக ரம், மகரம் ஆகிய ஐந்தையும் தன்னடக்கியுள்ளது என்பதை விளக்கி நிற்கின்றது விநாயகர் திருவுருவம்.

சைவ சமய மக்கள் ஒவ்வொருவரும் பிள்ளையார் நோன்பிருக்க வேண்டும். ஏனேனில் தொப்பையப்பனைக் கைதொழுதால், வினை வேரோடு களையப்பட்டு நாம் புனிதராகி விடுவோம். எத்தனையோ கஷ்டங்களுக்கும் இன்னல்களுக்கும் மத்தியில் வாழும் எமக்கு, விநாயகர் விரதம் ஒரு நல்ல விடிவைத்தர வேண்டுமென்று அவனருளாலே அவன்தாள் பணிந்து அவனருள் பெற்றுய்வோம். விநாகப்பெருமான் எமக்கு வருகின்ற வல்வினைகள் யாவற்றையும் எளிதிற் போக்கி விடுவார். தம்மை வழிபடும் அடியார்கள் படுகின்ற இடுக்கண்களையும் இன்னல்களையும் துன்பங்களையும் துயரங்களையும் போக்குவதற்காகவே ஐந்து கரங்களுடன் (துதிக்கையுடனும்) வீற்றிருக்கின்றார் விநாயகர். தமிழருடைய பண்பாடு அதிகம் கொடுத்துக் குறையக் கேட்பது. அது என்றும் நிலவிவருகின்ற ஒன்று.

> “ எத்தனையோ கஷ்டங்களுக்கும் இன்னல்களுக்கும் மத்தியில் வாழும் எமக்கு விநாயகர் விரதம் ஒரு நல்ல விடிவைத்தர வேண்டுமென்று அவனருளாலே அவன் தாள் பணிந்து அவனருள் பெற்றுய்வோம். ”

பாலுந் தெளிதேனும் பாகும் பருப்புமிவை
நாலுங்கலந்துனக்கு நான் தருவேன் –
கோலஞ் செய் துங்கக்கரிமுகத்துத் தூமணியே – நீ யெனக்குச் சங்கத்தமிழ்
மூன்றுந்தா..

என்று கேட்கிறார் ஔவை மூதாட்டி. பால், தேன், பாகு, பருப்பு என்று நாலு பொருள்கள் நான்தருவேன். நீ எனக்குச் சங்கத்தமிழாகிய இயல், இசை, நாடகம் என்ற மூன்றையும் தா.. என்று கேட்பதே இதன் பொருள். எனவே நாமும் இறைவனிடம் நல்லவற்றையே கேட்டுப் பெற வேண்டும்.

பிடியதனுருவுமை கொளமிகு கரியது
வடி கொடு தனதடி வழிபடுமவரிடர்
கடிகணபதிவர அருளினன் மிகு கொடை
வடிவினர் பயில்வலி வலமுறையிறையே..

நற்றமிழ்வல்ல ஞான சம்பந்தப் பெருமான் தமது பாடலிலே சிவபெருமான் ஆண் யானையாகவும், உமாதேவியார் பெண் யானையாகவும் வடிவங்கொண்டு தோற்றியவர் தான் விநாயகர் என்று கூறுகின்றார். ஆகவே கணபதியைக் கைதொழுதால் சகல சௌபாக்கியங்களும் கிடைக்கும்.

# முற்றுப்புள்ளி வைப்பாரா ஆணையாளர் ஹூசேன்?


உத்தியோகபூர்வ பயணம் மேற்கொண்டு நாளைய தினம் 6ஆம் திகதி இலங்கைக்கு முதல் தடவையாகப் பயணம் செய்கிறார் ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் செயித் அல் ஹூசேன்.

கடந்த செப்ரெம்பர் மாதம் இலங்கை தொடர்பாக ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானம் குறித்து இலங்கையில் முரண்பாடான கருத்துகள் தெரிவிக்கப்படுவதால், செயித் அல் ஹூசேனின் இலங்கைப் பயணம் அந்த முரண்பாடுகளுக்கு முற்றுப்புள்ளி வைக்க உதவும் என்று நம்புகிறோம்.

கடந்த செப்ரெம்பர் மாதம் நடைபெற்ற ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் 32ஆவது கூட்டத்தொடரில் அமெரிக்கா, இலங்கை ஆகிய் நாடுகளின் அனுசரணையுடன் ஏகமனதாக நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தில் போர்க் குற்றம் குறித்து விசாரணை நடத்துவதற்கு பொது நலவாய மற்றும் வெளிநாட்டு நீதிபதிகள், சட்டவாளர்களின் பங்களிப்புக் குறித்துப் பரிந்துரை செய்யப்பட்டிருந்தது. இதற்கான கால அட்டவணையும் நிர்ணயிக்கப்பட்டது.

தீர்மானத்தின் 6ஆவது பந்தியில் வெளிநாட்டு நீதிபதிகளின் பங்களிப்புக் குறித்தும் 18ஆவது பந்தியில் இந்த ஆண்டு செப்ரெம்பர் மாதம் நடைபெறவிருக்கும் 32 ஆவது கூட்டத்தொடரில் போர்க் குற்ற விசாரணை தொடர்பான பூர்வாங்க அறிக்கை சமர்ப்பிக்கப்பட வேண்டும் என்றும் குறிப்பிடப்பட்டிருந்தது. அடுத்த ஆண்டு செப்ரெம்பரில் நடைபெறும் 34ஆவது கூட்டத்தொடரில் முழுமையான இறுதி அறிக்கை சமர்ப்பிக்கப்பட வேண்டும் என்றும் பரிந்துரை செய்யப்பட்டிருந்தது. ஆனால், ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன லண்டன் பி.பி.சி. செய்திச் சேவைக்கு அளித்த செவ்வியில் வெளிநாட்டு நீதிபதிகளின் பங்களிப்பின்றி முற்றிலும் உள்நாட்டுப் பொறிமுறையின் அடிப்படையிலேயே போர்க் குற்ற விசாரணை நடத்தப்படும் என்றும், விசாரணையை அவசரப்பட்டு அரசு நடத்தமாட்டாது என்றும் தெரிவித்திருந்தார். ஐ.நா. தீர்மானம் குறித்துக் கருத்துத் தெரிவிக்கையில் ஜனாதிபதி மற்றுமொரு விடயத்தையும் குறிப்பிட்டிருந்தார். ஐ.நா. தீர்மானம் முழுவதையும் இலங்கை அப்படியே நடைமுறைப்படுத்தமாட்டாது என்றார். இலங்கைக்கு எவை நல்லதோ அவற்றைத்தான் நடைமுறைப்படுத்துவோம் என்றும் தெரிவித்திருந்தார்.

பி.பி.சிக்கு ஜனாதிபதி அளித்த செவ்விக்குப் பின்னர் சமீப நாள்களாக ஊடகங்களில் இந்த விவகாரம் முக்கிய இடத்தைப் பிடித்துக்கொண்டிருந்தது. பி.பி.சிக்கு அளித்த செவ்வி, தனது தனிப்பட்ட கருத்து என்று ஜனாதிபதி தட்டிக்கழிக்க முடியாது. செயித் அல்ஹூசேன் நாளைய தினம் இலங்கை வருவதால் ஜனாதிபதி தான் தெரிவித்த கருத் துக் குறித்து ஏதா வது விளக்கமளிக்க முற்படலாம். எனினும், நாட்டின் உயர்ந்த பதவியில் இருக்கும் ஒருவர் இப்படியான கருத்தைத் தெரிவித்திருப்பது வியப்பாக உள்ளது. முன்னாள் அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் தெரிவித்துள்ளது போன்று, இலங்கை தொடர்பான ஐ.நா. தீர்மானத்தின் உள்ளடக்கத்தை ஜனாதிபதி படித்துப் பார்க்கவில்லையோ என்ற சந்தேகத்தை ஏற்படுத்துகிறது.




உலகின் அதிஉயர் சபை ஐக்கிய நாடுகள் சபை. அதன் ஓர் அங்கம்தான் ஜெனிவாவில் இயங்கும் ஐ.நா. மனித உரிமைகள் பேரவை. அதன் தீர்மானங்களை நடைமுறைப்படுத்தும் கடப்பாடு இலங்கைக்கு உண்டு. இதனை மீற இலங்கை முற்பட்டால் கடந்த ஒருவருட காலமாக சர்வதேச நாடுகளுடன் இலங்கை வளர்த்துக் கொண்ட நல்லுறவை இழக்க நேரிடலாம். ஐ.நா. தீர்மானத்தை இலங்கை முழுமையாக நடைமுறைப்படுத்த வேண்டும். செயித் அல்ஹூசேனின் இலங்கைப் பயணம் போர்க்குற்ற விசாரணைப் பொறி முறை குறித்த முரண்பாடுகளுக்கு முற்றுப்புள்ளி வைக்கவேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Facebook : UTHAYAN.PRINT
Twitter : UTHAYANPRINT



# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

தருபவர்: வித்யா



**மேடம்:** உடல் நலனில் கவனம் செலுத்துவது நல்லது. அன்றாடப் பணிகளை விரைந்து முடிப்பீர்கள். தொழில், வியாபாரத்தில், வருமானம் திருப்தியளிக்கும். உறவினர் வருகையால் செலவு அதிகரிக்கும்.

**இடபம்:** விலகிச் சென்ற நண்பரும் நெருங்கி வருவார். தொழில், வியாபார வளர்ச்சியால், வருமானம் அதிகரிக்கும். உறவினர்களால் நன்மை உண்டாகும். உடல் நலனில் அக்கறை தேவை.

**மிதுனம்:** நண்பரின் நற்செயலை ஊக்கப் படுத்துவீர்கள். தொழிலில், பணவரவு அதிகரிக்கும். பெண்கள் ஆடை, ஆபரணம் வாங்குவர். புத்திரரின் நற்செயல் மனதை மகிழ்விக்கும்.

**கடகம்:** எதிரியை அடையாளம் கண்டு ஒதுங்குவீர்கள். தொழில், வியாபார வளர்ச்சிப்பணி நிறைவேற தாமதமாகலாம். முக்கிய செலவுக்கு சேமிப்புப் பணம் பயன்படும். இஷ்ட தெய்வ வழிபாட்டில் ஈடுபடுவீர்கள்.

**சிங்கம்:** வசீகரமான பேச்சால் நன்மை காண்பீர்கள். தொழில், வியாபாரத்தில், இலாபம் படிப்படியாக உயரும். பணியாளர்கள் எதிர்பார்த்த கடனுதவி கிடைக்கும். வாகனப் பயணத்தில் உரிய பாதுகாப்புத் தேவை.

**கன்னி:** சிரமத்தை வெல்லும் திறன் உண்டாகும். தொழில், வியாபாரத்தில், வருமானம் உயரும். சேமிப்பு அதிகரிக்கும். நண்பருக்கு இயன்ற அளவில் உதவுவீர்கள்.

**துலாம்:** பிறரிடம் நிதானித்துப் பேசுவது நல்லது. தொழில், வியாபாரத்தில், தடை குறுக்கிடலாம். சுமாரான அளவில் பணவரவு இருக்கும். அறிமுகம் இல்லாதவர்களிடம் நெருக்கம் வேண்டாம்.

**விருச்சிகம்:** முன்னர் செய்த உதவிக்கு, நற்பயன் தேடி வரும். தொழில், வியாபாரத்தில், புதிய உத்தி மூலம் வருமானம் காண்பீர்கள். உறவினர்களிடம் இருந்த கருத்து வேறுபாடு மறையும்.

**தனுசு:** மனதில் குழப்பம் உருவாகி மறையும். தொழில், வியாபாரத்தில், விடாமுயற்சி தேவைப்படும். இலாபம் சுமார். பணியாளர்கள் பணிச்சுமைக்கு ஆளாவர். மாணவர்கள் படிப்பில் மட்டும் கவனம் செலுத்தவும்.

**மகரம்:** மனதில் தெய்வீக சிந்தனை நிறைந்திருக்கும். தொழில், வியாபாரத்தில், இலாபம் கூடும். வாழ்க்கைத் தரம் உயரும். நிலுவைப் பணம் கிடைக்கும். குடும்பத்தில் மங்கல நிகழ்வு ஏற்படும்.

**கும்பம்:** உங்களின் நற்செயலைப் பலரும் பாராட்டுவர். தொழில், வியாபாரத்தில், திருப்திகரமான வளர்ச்சி உருவாகும். எதிர்பார்த்த பணவரவு கிடைக்கும். குடும்பத்தில் சுபநிகழ்ச்சி நடத்தத் திட்டமிடுவீர்கள்.

**மீனம்:** குடும்பத்தினர் பாசத்துடன் நடந்து கொள்வர். தொழில், வியாபார வளர்ச்சியால், வருமானம் உயரும். பெண்கள் பிள்ளைகளின் நலனுக்காகப் பாடுபடுவர். வாகனப் பயணத்தில் கவனம் தேவை.




## காதலர் தின வெளியீடு

“பீப் பாடல்” சர்ச்சையிலிருந்து ஓரளவுக்கு அமைதிக்குத் திரும்பியிருக்கும் அனிருத், முதற்கட்டமாக அறிவிப்பு ஒன்றை வெளியிட்டிருக்கிறார். வரும் காதலர் தினமான பெப்ரவரி 14 ஆம் திகதி “அவளுக்கென்ன...” என்ற சிங்கிள் டிராக் அல்பம் ஒன்றை வெளியிடுகிறார். இப்பாடலுக்கு வரிகளை உருவாக்கித் தந்திருப்பவர் இயக்குநர் விக்னேஷ் சிவன். “நானும் ரௌடிதான்” படத்துக்குப் பிறகு அனிருத்தும், விக்னேஷ் சிவனும் மீண்டும் இணைந்து ஒரு பாடலை உருவாக்கியிருப்பதால், இப்பாடலுக்கு ரசிகர்கள் மத்தியில் பெரிய எதிர்பார்ப்பு ஏற்பட்டுள்ளது. கடந்த ஆண்டு இதேபோல் “எனக்கென யாரும் இல்லையே...” என்ற அல்பத்தை அனிருத் வெளியிட்டிருந்தார். அப்பாடலுக்கு ரசிகர்கள் மத்தியில் பெரிய வரவேற்புக் கிடைத்தமை குறிப்பிடத்தக்கது.

## சுடோக்கு
### எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | 2 | | | 9 | | 5 | | 7 |
| 8 | | 9 | | | | | | |
| | 7 | | 4 | | | | 2 | 9 |
| | | 4 | | | | | | 6 |
| 3 | | | | | 4 | | | 5 |
| | | | | 5 | 9 | 4 | 1 | |
| 2 | | | | | 7 | | | |
| | | 7 | | | 1 | | 3 | 2 |
| 5 | | 1 | 3 | 2 | | | 7 | |

நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 7 | 5 | 6 | 9 | 8 | 2 | 1 | 4 | 3 |
| 4 | 1 | 2 | 3 | 6 | 7 | 8 | 9 | 5 |
| 8 | 3 | 9 | 5 | 4 | 1 | 2 | 6 | 7 |
| 6 | 4 | 7 | 2 | 9 | 8 | 5 | 3 | 1 |
| 3 | 9 | 1 | 7 | 5 | 4 | 6 | 8 | 2 |
| 5 | 2 | 8 | 1 | 3 | 6 | 9 | 7 | 4 |
| 2 | 8 | 5 | 6 | 7 | 3 | 4 | 1 | 9 |
| 9 | 6 | 3 | 4 | 1 | 5 | 7 | 2 | 8 |
| 1 | 7 | 4 | 8 | 2 | 9 | 3 | 5 | 6 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல்தான் இதன் அடிப்படை. 1–9 வரையான எண்களை ஒழுங்கு படுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரை களையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உப சதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்).


இந்த ஒவ்வொரு நிரையிலும், நிரலிலும் 1–9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படுகையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1–9 இலக்கங்கள் இரட்டைப்படாமல் வரவேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும். தர்க்கரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனி எண் என்பதாகும். 1986 இல் ஜப்பானிய நிறுவனமான நிகோலி இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாகப் பரவலாக்கியது. 2005 இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

## கோழிக்கறியும் குதிரைக்கறியும்

ஒருவன் அசைவ உணவு விடுதிக்குச் சென்று கோழிப் பிரியாணி கேட்டான். அந்தப் பிரியாணியைச் சாப்பிட்டுப் பார்த்தான். அந்தப் பிரியாணியிலிருந்த கோழிக்கறியுடன் வேறு கறி கலந்திருப்பது போல் தெரிந்தது. உடனே உணவு பரிமாறுபவரை அழைத்து, “இது கோழிக்கறி மாதிரித் தெரியவில்லையே... இதனுடன் குதிரைக்கறியும் கலந்திருப்பது போல் தெரிகிறதே..” என்றான். உணவு பரிமாறுபவர் முதலில் அதட்டினார். உறுக்கிக் கேட்டதும், “ஆமாம் சேர்! வாசனைக்காகக் கோழிக்கறியுடன் கொஞ்சம் குதிரைக் கறியும் சேர்ப்போம்” என்றான். “எவ்வளவு கலப்பீர்கள்?” என்று உணவு பரிமாறுபவரது சட்டையைப் பிடித்தான் அவன். “சம அளவு சேர்!” என்றான் அவன். “சம அளவுன்னா... எவ் வளவுடா...” என்றான் அவன். “சட்டையை விடுங்க சேர்! இது கூடத் தெரியாதா உங்களுக்கு? சம அளவுன்னா ஒரு கோழிக்கு ஒரு குதிரை தான் சம அளவு. அந்த அளவில் தான் கலப்போம்” என்றான் உணவு பரிமாறுபவன். அவ்வளவுதான் சாப்பிட வந்த அவன் மயக்கம் போட்டு விழுந்தான்.

படித்ததில் பிடித்தது








கவிதை சொன்னா
காதலிக்கிறியான்னு கேக்குறதும்...!!
தத்துவம் சொன்னா தண்ணி
அடிச்சிருக்கியான்னு கேக்குறதும்...!!
சின்னப்புள்ளத் தனமால்ல
இருக்கு ஆமா...!!

பேஸ் புக்கில் பிடித்தவை...



love சொல்லி
பதில் வரலைன்னா கூட
தாங்கிக்கலாம்...
exam ல கூப்பிட....
கூப்பிட...
நண்பன் திரும்பாம
இருக்கிற வலியைத்
தாங்கவே முடியாது...

வள்ளி ம(கன்)ணிகண்டன் @smg_s Jan 26
ஏறி வந்த ஏணிய நீ உதைக்கும் போது ஏணியோட
வலி உனக்கு தெரியாது,
நீ ஏணியானதும் உன் மேல ஏறி மேல போய்ட்டு
எட்டி ஒதைப்பாங்க, அப்போ தெரியும் அந்த வலி.

ரித்திகா செல்வகுமார் @rithika_s 23 De
காலங்கள் சிலரை மறக்கச் செய்து விடும்...
ஆனால் சிலரின் அன்பு
காலத்தையே மறக்கச் செய்து விடும்...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# டஸ்ட் ரோலர்



டஸ்ட் ரோலர் அறிமுகமாகியுள்ளது. ஆடைகளில் தூசி பட்டிருந்தால் அவற்றை இதன் மூலம் அகற்றுவது இலகுவானது. கைபிடியைப்பிடித்து மேல் கீழாக உருட்டுவதன் மூலம் தூசியை அகற்றிக் கொள்ளலாம். இதன் விலை 800 ரூபா முதல் 1,000 ரூபா வரையாகும்.

## நாளை

தை-23
சனிக்கிழமை 06.02.2016
திதி: திரயோதசி மு.இ.11.33
நட்சத்திரம்: பூராடம் மு.இ.06.51
ராகுகாலம்: 09.35-11.05 வரை
சுபநேரம்: 03.35-05.05 வரை



# நேற்றைய கடலுணவு விலை நிலைவரம்

| | யாழ்ப்பாணம் | மன்னார் | கிளிநொச்சி | கொடிகாமம் | பருத்தித்துறை | சாவகச்சேரி | மாதகல் |
|---|---|---|---|---|---|---|---|
| இறால் | 600 | 600 | 600 | 700 | 600 | 650 | 600 |
| நண்டு | 250 | 400 | 300 | 400 | 300 | 300 | – |
| கணவாய் | 550 | 500 | 500 | 600 | 600 | 700 | – |
| பாரை | 500 | 500 | 500 | 600 | 700 | 600 | 400 |
| சுறா | 550 | 600 | 600 | 750 | 600 | 650 | 550 |
| சீலா | 300 | 400 | 400 | 450 | 450 | 400 | 400 |
| விளை | 650 | 400 | 400 | 500 | 500 | 400 | 400 |
| முரல் | 250 | 400 | 350 | 400 | 300 | 400 | – |
| கும்பிளா | 400 | 300 | 300 | 400 | 400 | 400 | 300 |
| கிழாக்கன் | 500 | 800 | – | – | 450 | – | – |
| ஓரா | 400 | 400 | – | 300 | 300 | – | – |
| திரளி | 250 | 300 | 200 | 200 | 200 | 300 | 300 |
| நகரை | 200 | 300 | – | 300 | 300 | 300 | 350 |
| சூடை | 70 | 200 | 100 | 200 | 200 | 150 | 80 |
| ஒட்டி | 200 | 300 | 150 | 300 | 200 | 300 | – |
| திருக்கை | 150 | 350 | 200 | 350 | 300 | 200 | 150 |
| மதனம் | 150 | 250 | 180 | 370 | 250 | – | 300 |
| கொய் | 100 | 200 | 60 | 100 | 100 | 100 | – |
| பாலை | 400 | 300 | 250 | 350 | 400 | 300 | – |
| வாழை | 100 | 150 | 200 | 300 | 300 | 400 | 200 |



# நேற்றைய மரக்கறி விலை நிலைவரம்

| | மருதனாமடம் | சாவகச்சேரி | சுன்னாகம் | நெல்லியடி | திருநெல்வேலி | கிளிநொச்சி | கொடிகாமம் | வவுனியா |
|---|---|---|---|---|---|---|---|---|
| முள்ளங்கி | 30 | 60 | 40 | 60 | 30 | 60 | 40 | 40 |
| கத்தரி | 120 | 120 | 130 | 120 | 80 | 120 | 110 | 60 |
| கரட் | 200 | 180 | 200 | 180 | 200 | 200 | 170 | 300 |
| மரவள்ளி | 40 | 50 | 40 | 40 | 40 | 40 | 40 | 40 |
| பயிற்றை | 100 | 90 | 100 | 100 | 80 | 120 | 80 | 120 |
| பாகல் | 120 | 100 | 100 | 100 | 100 | 160 | 80 | 100 |
| கருணைக்கிழங்கு | 70 | 60 | 80 | 60 | 70 | 120 | 60 | 70 |
| பெ.வெங்காயம் | 80 | 60 | 70 | 70 | 70 | 80 | 50 | 80 |
| சி.வெங்காயம் | 100 | 120 | 100 | 120 | 100 | 120 | 80 | 80 |
| பூசணி | 50 | 50 | 50 | 60 | 60 | 80 | 45 | 30 |
| தக்காளி | 60 | 70 | 60 | 60 | 80 | 100 | 50 | 50 |
| வாழைக்காய் | 70 | 60 | 60 | 60 | 60 | 80 | 50 | 40 |
| கீரை | 20 | 20 | 40 | 10 | 20–30 | 40 | 20 | 30 |
| பொன்னாங்காணி | 30 | – | 30 | 40 | 20–30 | 20 | 20 | 30 |
| பச்சை மிளகாய் | 300 | 250 | 250 | 250 | 200 | 300 | 330 | 300 |
| புடோல் | 80 | 90 | 80 | 70 | 60 | 120 | 50 | 60 |
| கோவா | 80 | 100 | 80 | 100 | 80 | 120 | 80 | 70 |
| வெண்டி | 100 | 120 | 100 | 80 | 100 | 100 | 80 | 120 |
| போஞ்சி | 120 | 90 | 100 | 100 | 80 | 140 | 70 | 140 |
| லீக்ஸ் | 100 | 150 | 100 | 100 | 120 | 120 | 80 | 120 |
| தேங்காய் | 50 | 40 | 50 | 40-50 | 50–60 | 40 | 30–40 | 30 |
| உருளைக்கிழங்கு | 70 | 60 | 70 | 60 | 60–70 | 80 | 50 | 80 |
| தேசிக்காய் | 100 | 80 | 120 | 60 | 80 | 40 | 40 | 40 |
| வல்லாரை | 20 | 20 | 10 | 20 | 20 | 20 | 10 | 10 |
| கறிமிளகாய் | 200 | – | 200 | 280 | 240 | 200 | 150 | 250 |
| இராசவள்ளி | 120 | 120 | 150 | 120 | 160 | 150 | 100 | 90 |
| முருங்கைக்காய் | – | – | 700 | 1000 | 600 | 800 | – | 500 |

# முருங்கைக்கீரை முட்டைப் பொரியல்



**தேவையான பொருட்கள்:**

முருங்கைக்கீரை – 2 கப்
முட்டை – 3
உப்பு – தேவையான அளவு
வெங்காயம் – 1
பூண்டு – 4 பல்
எண்ணெய் – தேவையான அளவு
கடுகு – சிறிதளவு
உளுத்தம் பருப்பு – அரைத் தேக்கரண்டி
கடலைப் பருப்பு – அரைத் தேக்கரண்டி
காய்ந்த மிளகாய் – 3

**செய்முறை:**

முட்டையைச் சிறிது உப்புச் சேர்த்து நன்கு அடித்து வைத்துக் கொள்ளவும். சட்டியில் எண்ணெய் ஊற்றி, அது காய்ந்ததும் கடுகு, உளுத்தம் பருப்பு, கடலை பருப்பு, காய்ந்த மிளகாய், வெங்காயம் சேர்த்து வதக்கி பின் பூண்டு தட்டிப் போடவும். பின் அலசி வைத்துள்ள முருங்கைக் கீரையை போட்டுவதக்கவும். பின்னர் தேவையான அளவு உப்புப் போட்டு, தண்ணீர் ஊற்றி வேக விடவும். கீரை நன்கு வெந்த நிலையில் தயாராக வைத்துள்ள முட்டையை ஊற்றி, மிதமான சுவாலையில் வேக விடவும்.

# வீட்டுச் சுவரின் நிறங்கள்

- பொதுவாக வீட்டின் அழகே, சுவரின் நிறத்தில்தான் அடங்கியுள்ளது. மிக அழகான வீட்டையும், அதில் உள்ளநிறம் அசிங்கமாகக் காட்டக் கூடும்.
- எனவே வீட்டைக் கட்டும் போதும், வண்ணப் பூச்சு அடிக்கும் அதன் நிறத்தில் அதிக முக்கியத்துவம் அளிப்பது அவசியமாகிறது.
- பொதுவாக வீட்டுக்கு இளம் பச்சை, இளம் நீல நிறங்கள் ஏற்றவையாக உள்ளன. ஆனால் தற்போது பல்வேறு வண்ணங்கள் வந்திருப்பதால் அவரவர் விருப்பப்படி வண் ணங் களை தெரிவு செய்து அடித் துக் கொள் ளலாம்.
- ஒளிரும் மிகவும் அடர்த்தியான நிறமாகவோ, சிவப்பு, மஞ்சள் போன்று கண்ணைப் பறிக்கும் நிறங்களோ வீட்டுக்குத் தேவையில்லை.
- குழந்தைகளின் அறைகளுக்கு மிக அடர்த்தியான நிறங்களை அடிக்க வேண்டாம். பச்சை நிறத்தின் குடும்ப நிறங்களில் ஏதேனும் ஒன்றை அடித்தால் அது அவர்களது கண் பார்வைக்கு நல்லது.
- படுக்கை அறைக்கு இளம் சிவப்பு, பச்சை நிறங்களை அடிப்பது மனதுக்கு உற்சாகத்தை அளிக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Facebook : UTHAYAN.PRINT
Twitter : UTHAYANPRINT

## அனைவரது

ஐ.நா. தீர்மானத்தை நடைமுறைப்படுத்தும்போது, ஒரு சில அரசியல்வாதிகள், எதிர்த்தரப்பினர் அதிகாரத்தைக் கைப்பற்றுவதற்கான குறுகிய எதிர்பார்ப்புடன் அரசு பின்பற்றும் செயல்முறை தொடர்பாக மக்களை திசை திருப்பக்கூடிய பல்வேறு கருத்துக்களை தெரிவிக்கின்றனர் என்றும் ஜனாதிபதி குற்றச்சாட்டினார்.

இலங்கையின் 68 ஆவது சுதந்திர தின வைபவம் கொழும்பு, காலிமுகத்திடலில் நேற்று நடைபெற்றது. இதில் உரையாற்றிய போதே ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மேற்கண்ட விடயங்களைக் கூறினார்.

இதன் போது அவரது உரையின் முழு வடிவம் வருமாறு:-

இது நாம் அனைவரும் ஒன்றிணைந்து சுதந்திர தின நினைவு வைபவத்தை பேரபிமானத்துடனும், கோலாகலமாகவும் கொண்டாடும் ஒரு இனிய சந்தர்ப்பமாகும். 68 ஆண்டுகளுக்கு முன்னர் பிரித்தானிய காலணித்துவவாதிகளிடம் இருந்து நாம் சுதந்திரம் பெற்றதைத் தொடர்ந்து, வருடாந்தம் இடம்பெறும் நாட்டுக்கு சுதந்திரம் கிடைக்கப்பெற்ற தேசிய சுதந்திர தின வைபவத்தின் 68 ஆவது சந்தர்ப்பமே இதுவாகும்.

விசேடமாக 1948ஆம் ஆண்டையும் 2016 இன்றைய தினத்தையும் நாம் எடுத்துக்கொண்டால் சுதந்திரம்பற்றி கதைக்கும்போது பொருளாதார, அரசியல், சமூக, கலாசார ரீதியில் நம் நாட்டைப் போன்றே ஏனைய உலக நாடுகளிலும் பிரமாண்டமான பல மாற்றங்கள் நிகழ்ந்துள்ளன.

**கலாசாரக் குழந்தை தொழில்நுட்பக் குழந்தை**

1948ஆம் ஆண்டில் நாம் பெற்றுக்கொண்ட சுதந்திரம் பற்றிய விளக்கமானது, அதனை வரைவிலக்கணப்படுத்துவோமாயின், 1948 அல்லது 50 ஆம் தசாப்தத்தில் பிறந்த ஒரு பிள்ளையை கலாசார குழந்தையென நான் கருதுகிறேன். 2016 இன்றைய கால எல்லையின் 21ஆம் நூற்றாண்டின் ஆரம்ப கால கட்டமான இன்று பிறக்கும் பிள்ளைகளை தொழில்நுட்ப குழந்தைகள் என நான் கருதுகின்றேன்.

அவ்வாறாயின் 50 ஆம் தசாப்தத்தில் பிறந்த கலாசார பிள்ளையையும் 21ஆம் நூற்றாண்டின் ஆரம்ப காலகட்டத்தில் அல்லது இன்றைய தினம் பிறக்கும் தொழில்நுட்ப பிள்ளையையும் ஒன்றிணைத்து தேசத்தைக் கட்டியெழுப்பும் பணியினையும் நாட்டைக் கட்டியெழுப்பும் பணியினையும் எமது ஒன்றிணைந்த முயற்சியின் மூலம் மேற்கொள்ளல் வேண்டுமென நான் நம்புகிறேன்.

பிரச்சினைகளைத் தீர்த்தோமா? 1505ஆம் ஆண்டு முதல் வெளிநாட்டு ஆக்கிரமிப்பாளர்கள் எமது நாட்டை ஆக்கிரமித்த தினத்தில் இருந்து அல்லது 1505ஆம் ஆண்டு முதல் 1948ஆம் ஆண்டு வரையான 400 ஆண்டுகாலம் எமது நாட்டை ஆக்கிரமித்த, எம்மை ஆண்ட வெளிநாட்டவர்கள் இந்த நாட்டில் தோற்றுவித்த பிரச்சினைகளை எம்மிடம் விட்டுச் சென்றனர்.

இன்று 68 ஆண்டுகள் கடந்துள்ள வேளையில், எமது நாட்டை ஆக்கிரமித்தவர்கள் எம்மிடம் விட்டுச் சென்ற பிரச்சினைகளை நாம் தீர்த்து வைத்துள்ளோமா என்ற வினாவை நாம் அனைவரும் எமது மனச்சாட்சியை தொட்டு கேட்கவேண்டியுள்ளது.

பெரும்பாலும் அதிகாரத்திற்கு வந்த அரசுகள் இனங்களுக்கிடையே ஒற்றுமை, நல்லிணக்கம், சகோதரத்துவம், நட்புறவு ஆகியவற்றை ஏற்படுத்துவதற்கான பணிகள் மேற்கொள்ளப்பட்டிருப்பின் 80 ஆம் தசாப்தத்தின் ஆரம்ப கட்டத்தில் ஆரம்பமாகி 26 ஆண்டுகளாக தொடர்ந்த கொடிய பயங்கரவாதத்தை நம்மால் தவிர்க்க முடிந்திருக்கும்.

ஆகவே ஒரு நாட்டின் அபிவிருத்தியில், பொருளாதார அபிவிருத்தி மற்றும் பௌதீக வள அபிவிருத்தி என்பன முக்கியம் பெறுவதைப் போன்றே அங்கு வாழும் மக்களின் கலாசார பண்புகள், மதப் பண்புகள், மொழிப் பண்புகள் ஆகிய அனைத்தையும் ஆட்சியாளர்கள் புரிந்துகொள்ளுதல் மிக முக்கியம் என நான் நம்புகிறேன்.

**செய்ய வேண்டியவை செய்யப்படவில்லை**

2009 மே மாதம் 19 ஆம், 20 ஆம் திகதிகள் மற்றும் போருக்குப் பின்னர் மேற்கொள்ளப்படவேண்டியிருந்த பணிகளை நாம் மேற்கொள்ளாததனால் ஏற்பட்ட விளைவாக ஐ. நா மனித உரிமைகள் சபையின் ஊடாக அதன் பிரேரணைகளை நடைமுறைப்படுத்துவது தொடர்பான தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

ஆகவே, நாம் தற்போதைய நிலைமையினை கருத்திற் கொள்வோமாயின் 2009 மே 19, 20 ஆம் திகதிகளுக்குப் பின் மேற்கொள்ளப்பட்டிருக்க வேண்டிய பணிகளான இன ஒற்றுமை, நல்லிணக்கத்திற்கான சிங்கள, தமிழ், முஸ்லிம், பறங்கியர், மலே ஆகியோரது ஒற்றுமைக்காக எம்மால் மேற்கொள்ள முடியாது போன பணிகளை மேற்கொள்வதற்காக இந்த நாட்டு மக்கள் 2015 ஜனவரி 8 ஆம் திகதி இடம்பெற்ற தேர்தலில் அவற்றைத் தீர்ப்பதற்காக, எனக்கும் எனது அரசிற்கும் வாக்களித்தனர்.

அதற்கமைவாக 2015 ஜனவரி 8 ஆம் திகதிய ஜனாதிபதித் தேர்தல் விஞ்ஞாபனத்தில் காணப்பட்ட விடயங்களை நடைமுறைப்படுத்துவதற்காகவும் 1948 காலணித்துவ ஆட்சியில் இருந்து சுதந்திரம் கிடைத்த பின் அவர்கள் எம்மிடம் விட்டுச்சென்ற பிரச்சினைகளுக்கு 68 ஆண்டுகளின் பின்னர் தீர்வு வழங்குவதற்கும் வேண்டியுள்ளதென நாம் கருத்திற்கொள்ள வேண்டுமென தெளிவாகக் குறிப்பிட விரும்புகிறேன்.

அவ்வாறே 2009 மே மாதம் 19, 20 திகதிகளுக்குப் பின்னர் மேற்கொள்ளப்பட்டிருக்க வேண்டிய பணிகளை இந்த நாட்டு மக்கள் 2015 ஜனவரி 9 ஆம் திகதிக்குப் பின் எமது அரசிடம் ஒப்படைத்ததன் பின்னர், இந்தப் பிரச்சினைகளை நாம் தீர்த்து வைத்தல் இன்றியமையாததாக உள்ளதென நாம் அனைவரும் ஏற்றுக்கொள்ள வேண்டுமென நான் நம்புகிறேன்.

**ஐ.நா. தீர்மானம் குறித்து தவறான விளக்கம்**

எமக்குப் பின்னர் சுதந்திரம் பெற்ற பல உலக நாடுகள் தனது நாட்டில் இனங்களுக்கிடையே ஒற்றுமை, நல்லிணக்கம், மத ஒற்றுமை, மொழி ஒற்றுமை ஆகிய அனைத்திலும் நல்லிணக்கத்தை வலுவடையச் செய்து, அரசியல் மற்றும் சமூக மறுசீரமைப்புக்களை மேற்கொண்டமையினால் அவர்கள் இன்று வலுவான முறையில் அபிவிருத்தியை நோக்கி முன்னேறிச் சென்றுள்ளனர்.

ஆகவே எமக்குக் கிடைத்துள்ள இந்த வாய்ப்பினை நாம் பயன்படுத்த வேண்டிய ஒரு தருணம் இதுவாகும். ஐ. நா மனித உரிமைகள் சபையின் ஊடாக சமர்ப்பிக்கப்பட்டுள்ள தீர்மானங்கள் தொடர்பில் பிழையாக விளக்கம் கொடுக்கப்படுகின்றது.

எமது அரசின் கௌரவத்தைப் பாதுகாக்கும்வகையிலும் மக்களின் கௌரவத்தை பாதுகாக்கும் வகையிலும் பாதுகாப்புப் படையினரின் கௌவரத்தைப் பாதுகாக்கும் வகையிலும் மற்றும் உலகின் ஏற்றுக்கொள்ளப்பட்ட படையினராக எமது முப்படையினரை மாற்றும் வகையிலுமே நாம் ஐ. நா மனித உரிமைகள் சபையின் தீர்மானங்களை எதிர்கொள்வோம் என தெளிவாக கூறுகிறேன்.

ஐ.நா. ஸ்தாபனம் உள்ளிட்ட அனைத்துச் சர்வதேச அமைப்புக்கள், அனைத்து நாடுகள் எமது நாட்டைக் கௌரவத்துடன் ஏற்றுக்கொள்வதற்காக இந்தத் தீர்மானங்களுக்கு முகம்கொடுத்து பொறுமையுடனும் பக்குவமாகவும் புத்தி சாதுர்யமாகவும் நாம் செயற்படுவோம் என்பதை தெளிவாகக் குறிப்பிடுகின்றேன்.

**அதிகாரத்தைக் கைப்பற்ற ஒரு சிலர் முயற்சி**

ஒரு சில அரசியல் எதிர்த்தரப்பினர்கள் அதிகாரத்தை கைப்பற்றுவதற்கான குறுகிய எதிர்பார்ப்புடன் ஐ.நா. மனித உரிமைகள் சபையின் தீர்மானங்களை நடைமுறைப்படுத்தும்போது, அரசு பின்பற்றும் செயல்முறை தொடர்பாக மக்களை திசை திருப்பக்கூடிய பல்வேறு கருத்துக்களை தெரிவிக்கின்றனர்.

குறித்த தீர்மானங்களை நடைமுறைப்படுத்துவதன் மூலம் இந்த நாட்டில் சுதந்திரம், ஜனநாயகம் நல்லிணக்கம் ஆகியன உறுதிப்படுத்தப்படும் என்பதனை தெளிவாக நான் கூறுகிறேன்.

விசேடமாக பாதுகாப்புப் படையினர்களின் மனங்களை குழப்புகின்ற விதமாக வெவ்வேறு விதமான பிழையான கருத்துக்கள், சிந்தனைகளை அரசியல் எதிர் தரப்பினர், தீவிரவாத கருத்துக்களைக் கொண்டோர் பரப்பி வருவதை காணக்கூடியதாய் உள்ளது.

நாட்டின் இறைமை, ஆட்புல ஒருமைப்பாடு ஆகியவற்றை பாதுகாத்து, நாட்டில் தேசிய நல்லிணக்கத்தை வலுவடையச் செய்வது, அரசின் கௌரவம், பாதுகாப்புப் படையினரின் கௌரவம், ஒட்டுமொத்த மக்களின் கௌரவம் ஆகியவற்றைப் பாதுகாப்பதன் மூலமே இந்தப் பிரச்சினைகளை தீர்ப்பதற்கு, நாம் அரசு என்ற ரீதியில் ஒன்றிணைந்து முகம் கொடுப்பதாக இன்று 68வது சுதந்திர தினத்தின் போது உங்களது அன்பான தலைமை மக்கள் சேவகன் என்ற ரீதியிலும் முப்படைகளின் தளபதி என்ற ரீதியிலும் ஜனாதிபதி என்ற ரீதியிலும் நான் ஒட்டுமொத்த மக்களுக்கும் உறுதிமொழி அளிக்கின்றேன்.

ஆகவே, இன்று போன்ற ஒரு தினத்தில் நாம் அபிமானமுடையவர்கள் என்பதனை நினைவில் நிறுத்துதல் வேண்டும். அபிமானமுடைய ஒரு தேசமாக உலகப் படத்தில் குறித்து வைப்பதற்காக நாம் செயற்படல் வேண்டும். ஒட்டுமொத்த மக்களும் இதற்காக அர்ப்பணிப்புடன் செயற்படுவார்களென நான் நம்புகிறேன்.

**19 ஆவது அரசமைப்பு**

அரச சேவையை அரசியல்மயப்படுத்தலிலிருந்து விடுவிக்கும் பொருட்டு 19 ஆவது அரசமைப்பு திருத்தத்தின் மூலம் ஏற்படுத்தப்பட்ட சுயாதீன ஆணைக்குழுக்கள் எதிர்காலத்தில் நடைமுறைப்படுத்தப்படும்.

**ஊடக சுதந்திரத்தை பாதுகாக்கும் பொறுப்பு ஊடகங்களிடமே**

இந்த அனைத்துவிதமான சுதந்திரங்களையும் வழங்கும் போது, விசேடமாக ஊடக சுதந்திரம் தொடர்பாக நாம் பின்பற்றும் கொள்கையின் பயனாக இந்த நாட்டு ஊடகங்களுக்குப் பூரண சுதந்திரம் வழங்கப்பட்டுள்ளது. இந்தச் சுதந்திரம் இன்று உச்சக் கட்டத்தை அடைந்துள்ளது.

ஊடகத்துறையில் உள்ள அறிஞர்கள் – புத்திஜீவிகள் போன்றோர் நன்நெறியுடனும் பண்பாகவும் செயலாற்றி தனது ஊடக செயற்பாடுகளை முன்னெடுக்க வேண்டுமென்பதற்காகவே நாம் இந்த ஊடக சுதந்திரத்தை வழங்கியுள்ளோம் என்பதை நான் தெளிவாக கூறிக்கொள்ள விரும்புகின்றேன்.

நாம் வழங்கிய இந்தச் சுதந்திரமானது குறித்த நோக்கத்திற்காக பயன்படுத்தப்படாது விடின் வழங்கப்பட்டுள்ள இந்தச் சுதந்திரமானது எமக்குப் பின்னர் வரவுள்ளவர்களினால் என்றோ ஒரு நாள் இல்லாது செய்யப்படலாம். ஆகவே, இந்தச் சுதந்திரத்தைப் பாதுகாக்கும் பொறுப்பு அனைத்து ஊடக நிறுவனங்கள் மற்றும் ஊடகவியலாளர்களிடம் உள்ளதென நான் குறிப்பிடுகின்றேன்.

உலகின் உன்னத ஒரு தேசமாக எமது நாட்டை மாற்றுவதற்கு, மலரப்போகும் தசாப்தங்களுக்காக எமது நாளைய தினத்தை தயார் செய்வதற்கு நாம் அனைவரும் ஒன்றுபட்டு நட்புறவுடன் செயற்படுவோம் என கௌரவத்துடன் அழைப்பு விடுக்கின்றேன் – என்றார்.

(து-வ-5)

## அரசமைப்புக்கு

முடியும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆட்சி மாற்றத்தின் பின்னர், புதிய அரசமைப்பு உருவாக்கத்துக்குரிய நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. கடந்த காலங்களில் உருவாக்கப்பட்ட அரசமைப்பு மாற்றங்களின்போது மக்களின் கருத்துக்கள் உள்வாங்கப்படவில்லை. இதனால், தற்போது அரசமைப்பு அமைக்கப்படும்போது மக்களின் கருத்துக்களை உள்வாங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இதற்காக நியமிக்கப்பட்ட குழு இதுவரை கொழும்பிலும், கண்டியிலும் தனது அமர்வுகளை நடத்தியுள்ளது. இன்றும், நாளையும் வவுனியாவில் நடத்தப்படவுள்ளது. வவுனியா மாவட்டச் செயலக கேட்போர் கூடத்தில் இடம்பெறும் இந்த அமர்வில், எவரும் கலந்துகொண்டு கருத்துக்களைத் தெரிவிக்க முடியும்.

மக்கள் தங்களது பிரச்சினைகளை – எதிர்கொள்ளும் இடர்களையும் கூட முன்வைக்க முடியும். அதே போன்று புதிய அரசமைப்புக்குரிய ஆலோசனைகளையும் தெரிவிக்க முடியும்.

இதேவேளை, இதுவரை நடந்த பகிரங்க அமர்வுகளில் தமிழ் மக்களின் பங்களிப்புக் குறைவாக இருந்ததாக, மக்கள் கருத்தறியும் குழுவின் உறுப்பினரும், வடக்கு மாகாண எதிர்கட்சித் தலைவருமான சி.தவராசா தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (து-5)

## யோசித

பெற்ற தகவல்களின் அடிப் படையில் நாமல் ராஜபக்சவிடம் விசாரணை நடத்தப்படவுள்ளதாக அவர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

இது தொடர்பில் கொழும்பு ஆங்கில ஊடகம் வெளியிட்டுள்ள செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

சீ.எஸ்.என் தொலைக்காட்சி நிறுவனத்தில் மேற்கொண்ட தேடுதலின் போது, யோசித ராஜபக்ச, நிறுவனத்தின் தலைவராகச் செயற்பட்டு பரிமாறிக்கொண்ட 5 ஆயிரத்திற்கும் மேற்பட்ட மின்னஞ்சல்களும், சில குறுந்தகவல்களும் தலைவர் என்பதற்கான முகவரியுடன் கூடிய இறப்பர் முத்திரை, யோசிதவின் கையெழுத்துடன் கூடிய இறப்பர் முத்திரை, நிறுவனத்தின் தலைவர் என்ற வகையில் அனுப்பிய கடிதம் போன்ற ஆவணங்கள் கிடைக்கப்பெற்றுள்ளன.

யோசித ராஜபக்ச உள்ளிட்ட பணிப்பாளர் சபை மீது, போலி ஆவணம் தயார் செய்தமை, நம்பிக்கையை மீறிய குற்றம், நிறுவன சட்டத்தை மீறியமை, சுங்க சட்டத்தை மீறியமை, அரச சொத்துக்களை முறைகேடாகப் பயன்படுத்தியமை உட்பட பல குற்றச்சாட்டுக்களின் அடிப்படையில் குற்றப்பத்திரிகையைத் தாக்கல் செய்ய பொலிஸ் நிதி மோசடி விசாரணைப் பிரிவு நடடிக்கை எடுத்து வருகிறது.

அரசுக்குச் சொந்தமான கட்டடம் ஒன்றை தொலைக்காட்சி நிறுவனத்தின் நடவடிக்கைகளுக்குப் பயன்படுத்தியமை, கட்டடத்தைப் பெற்றுக்கொண்டமை தொடர்பில் யோசித உட்பட சந்தேக நபர்களிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளில் அவர்கள் தெளிவான பதில்களை வழங்கவில்லை என கூறப்படுகிறது.

இளைஞர்களுக்கான எதிர்காலம் அமைப்பினால், சீ.எஸ்.என் தொலைக்காட்சி நிறுவனத்திற்காக பிரித்தானியாவில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட வாகனம் ஒன்றுக்கான உதிரிப்பாகங்களுக்காக ஒரு லட்சத்து 36 ஆயிரத்து 482 பவுண்களுக்கான கட்டணச் சீட்டும் தேடுதலின் போது கிடைத்துள்ளது.

இது குறித்தும் விசாரணை நடத்தப்பட்டு வருவதுடன் விசாரணைகளுக்காக நாமல் ராஜபக்ச விரைவில் நிதி மோசடி விசாரணைப் பிரிவுக்கு அழைக்கப்படலாம் எனவும் தெரியவருகிறது என அதில் குறிப்பிடப்பட்டுள்ளது. (வ)

## இறுதியில்

சிங்கள மொழியில் தேசிய கீதம் பாடப்பட்டு ஆரம்பமான சுதந்திர தின வைபவம், தமிழ் மொழியில் தேசிய கீதம் பாடப்பட்டு நிறைவு செய்யப்பட்டது.

1948 ஆம் ஆண்டு பிரித்தானியர்களிடமிருந்து இலங்கை சுதந்திரமடைந்ததையடுத்து நடைபெற்ற சுதந்திர தின நிகழ்வுகளில் ஒருமுறை மட்டும் தமிழ்மொழியில் தேசிய கீதம் பாடப்பட்டது.

இந்நிலையில், இந்த முறை சுதந்திர தின வைபவத்தில் தமிழ்மொழியிலும் தேசிய கீதம் இசைக்கப்படவுள்ளது என்று சில தினங்களுக்கு முன்னர் வெளியான தகவலையடுத்து தமிழர் தரப்புக்கும் மகிந்த அணியினருக்கும் இடையே கருத்து மோதல் இடம்பெற்றது. தமிழில் தேசிய கீதம் பாடக்கூடாது என்று மகிந்த அணியினர் போர்க்கொடி தூக்கியிருந்தனர்.

இந்தக் கடும் எதிர்ப்புகளுக்கு மத்தியிலும் நேற்றைய தினம் இடம்பெற்ற 68ஆவது சுதந்திர தின வைபவத்தில் தமிழ் மொழியில் தேசிய கீதம் இசைக்கப்பட்டது.

வைபவம் ஆரம்பிக்கப்பட்டபோது சிங்கள மொழியில் மட்டுமே தேசிய கீதம் இசைக்கப்பட்டது. அரசின் இந்தச் செயற்பாடு தொடர்பில் தமிழர் தரப்பினரிடையே ஆரம்பத்தில் அதிருப்தி ஏற்பட்டிருந்தது. இருப்பினும், எவரும் எதிர்பாராத தருணத்தில் தமிழ் மொழியில் தேசிய கீதம் இசைக்கப்பட்டு வைபவம் முடிவுக்குக் கொண்டுவரப்பட்டது.

சுதந்திர தின நிகழ்வுகளில் ஒரு முறை மட்டும் தமிழில் பாடப்பட்ட தேசிய கீதம், நேற்று நடைபெற்ற 68 ஆது சுதந்திர தின நிகழ்வில் மீண்டும் தமிழில் பாடப்பட்டமை வரலாற்றில் இடம்பிடித்துள்ளது.

(து-வ-5)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்கள்

## திருமதி மேரிமாகிறேற் (மேரியம்மா) தேவதாசன்



யாழ்ப்பாணம் குருநகரைப் பிறப்பிடமாகவும், கொழும்பை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி மேரிமாகிறேற் தேவதாசன் 04.02.2016 வியாழக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற தேவதாசனின் பாசமிகு மனைவியும், காலஞ்சென்றவர்களான மேஸ்திரியார் மனுவேல்தம்பி - றெஜீனா தம்பதியரின் அருமை மகளும், காலஞ்சென்றவர்களான சந்தியாப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகளும், அமிலசீலியின் அன்புத் தாயாரும், விமலநாதனின் (Central Bank) அன்பு மாமியாரும், தோமஸ் (Railway Guard) காலஞ்சென்றவர்களான விக்ரர் (ஆசிரியர்), பிலோமிளா (ராணி) மற்றும் கிறிஸ்ரியன் (இளைப்பாறிய ஆசிரியர்) ஆகியோரின் அன்புச் சகோதரியும்,எமல்டா, காலஞ்சென்றவர்களான பவளம், பிரான்சிஸ் மற்றும் றெஜினா ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் நல்லடக்க ஆராதனைக்காக நாளை (06.02.2016) சனிக்கிழமை பிற்பகல் 3 மணியளவில் முகத்துவாரம் புனித அன்றூஸ் தேவாலயத்துக்கு எடுத்துச்செல்லப்பட்டு திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு பின்னர் பூதவுடல் மாதம்பிட்டிய சேமக்காலைக்கு நல்லடக்கத்துக்காக எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
M.கிறிஸ்ரியன்
(தம்பி)
077 617 6510

29/1, Elie House Road,
Dockland
colombo - 15

T.P: 011 252 3429

## முருகேசு அப்புத்துரை
(ஓய்வுபெற்ற உத்தியோகத்தர் PWD)



மலேசியா கோலாலம்பூரைப் பிறப்பிடமாகவும் பொன்னாலை வீதி மானிப்பாயை வசிப்பிடமாகவும் கொண்ட முருகேசு அப்புத்துரை 04.02.2016 வியாழக்கிழமை இறைபதம் அடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான முருகேசு - பொன்னு தம்பதியரின் அன்பு மகனும், செல்லத்தின் அன்புக் கணவரும், சிறீதரன் (மகப்பேற்று மருத்துவ நிபுணர்- யாழ். போதனா வைத்தியசாலை),கெங்காதரன் (முகாமையாளர் - தேசிய சேமிப்பு வங்கி- சாவகச்சேரி),புஸ்பவதி ஆகியோரின் அன்புத் தந்தையும், தயானந்தி (மருத்துவ பட்டப்பின் படிப்பு - கொழும்பு பல்கலைக்கழகம்), சந்திரவதனா (உதவி முகாமையாளர் - தேசிய சேமிப்பு வங்கி- மானிப்பாய்),ஆகியோரின் அன்பு மாமனாரும், பிரியங்கன் (St. Peter's College, Colombo) ,சாரங்கன் ( Royal college - Colombo), ஆரபி ( Ladies College- Colombo), வைஷ்ணவி (வேம்படி உயர்தர மகளிர் கல்லூரி),தரன்ஜா (வேம்படி உயர்தர மகளிர் கல்லூரி), ரக்ஷனா (யாழ்.இந்து ஆரம்ப பாடசாலை) ஆகியோரின் அன்புப் பேரனும், காலஞ்சென்றவர்களான மாதவர், இரத்தினேஸ்வரி,பொன்னுத்துரை மற்றும் மாரிமுத்து ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பொன்னாலை வீதி, மானிப்பாயில் உள்ள அவரது இல்லத்தில் இன்று (05.02.2016)வெள்ளிக்கிழமை முற்பகல் 11 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக மானிப்பாய் பிப்பிலி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார்,உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும். (68480) (11,16,18)

தகவல்: மகன்மார்

பொன்னாலை வீதி, Dr.அ.சிறீதரன் -071 683 1554
மானிப்பாய். அ.கெங்காதரன் - 077 911 6301

## சுதந்திர தின

நடைபெற்றது.

இந்த வைபவத்தில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, எதிர்க்கட்சித் தலைவரும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவருமான இரா.சம்பந்தன், முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க, சபாநாயகர் கருஜயசூரிய, பிரதம நீதியரசர் கே.ஸ்ரீபவன், பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா, அமைச்சர்கள், இராஜாங்க அமைச்சர்கள், பிரதி அமைச்சர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஆகியோரும், இராணுவத் தளபதி, கடற்படைத் தளபதி, விமானப்படைத் தளபதி, பொலிஸ் மா அதிபர் மற்றும் ஏனைய அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள், வெளிநாட்டுத் தூதுவர்கள், சிவில் அமைப்புக்கள் மற்றும் மனித உரிமை ஆர்வலர்கள், பொது மக்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

**பிரமுகர்கள் வருகை**

நேற்றுக் காலை 8 மணியளவில் ஆரம்பமாகிய சுதந்திர தின வைபவத்துக்கு 8.30 மணியளவில் பிரமுகர்கள் வருகை தந்தனர். இதையடுத்து, பிரதம நீதியரசர் கே. ஸ்ரீபவன், சபாநாயகர் கரு ஜயசூரிய, பீல்ட் மார்ஷல் சரத் பொன் சேகா, பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ஆகியோர் வருகை தந்தனர். இவர்கள் உள்நாட்டு அலுவல்கள் அமைச்சர் வஜிர அபேவர்த்தனவால் வரவேற்கப்பட்டனர்.

**ஜனாதிபதி வருகை**

காலை 8.45 மணியளவில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தனது பாரியார் ஜெயந்தி சிறிசேன சகிதம் நிகழ்வுக்கு வருகை தந்தார். பிரதமர் ரணில் விக்கிரமசிங்க மற்றும் உள்நாட்டு அலுவல்கள் அமைச்சர் வஜிர அபேவர்த்தன ஆகியோர் அவர்களை வரவேற்றனர்.

இதையடுத்து, முப்படைகளின் தளபதி, இராணுவத் தளபதி, கடற்படைத் தளபதி, விமானப்படைத் தளபதி, பொலிஸ் மா அதிபர் ஆகியோர் தேசிய கொடிக் கம்பம் இருந்த பிரதான மேடைக்கு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவை அழைத்துச் சென்றனர். பின்னர் ஜனாதிபதி தேசியக் கொடியை ஏற்றி வைத்ததையடுத்து சிங்கள மொழியில் **தேசிய கீதம் இசைக்கப்பட்டது.**

**2 நிமிட மௌன அஞ்சலி**

பின்னர் சுதந்திரத்துக்காகப் போராடிய போராட்ட வீரர்களுக்கு மரியாதை செலுத்தும் வகையில் 2 நிமிடம் மௌன அஞ்சலி செலுத்தப்பட்டது.

**21 வேட்டுகள் தீர்த்து**
**ஜனாதிபதிக்கு மரியாதை**

இதையடுத்து 21 வேட்டுகள் முழங்க ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு மரியாதை செலுத்தப்பட்டது. மரியாதையை ஏற்றுக்கொண்ட ஜனாதிபதி பின்னர் நாட்டு மக்களுக்கு உரையாற்றினார்.

**முப்படைகளின் அணிவகுப்பு**

ஜனாதிபதியின் உரையைத் தொடர்ந்து முப்படைகளின் அணிவகுப்பு, விமானப் படை மற்றும் கடற்படையினரின் சாகசங்கள், பரசூட் வீரர்களின் சாகசங்கள் மற்றும் கனரக ஆயுதங்கள் கொண்ட போர்த் தளபாடங்கள், வாகனத் தொடரணி என்று சுமார் ஒன்றரை மணிநேரம் காலிமுகத்திடல் வண்ணமயமாகக் காட்சியளித்தது.

**எதிர்க்கட்சி பங்கேற்பு**

அரசின் சுதந்திரதின நிகழ்வில் நாட்டின் பிரதான எதிர்க்கட்சியான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பங்கேற்றது. கூட்டமைப்பின் சார்பில் அதன் தலைவரும் எதிர்க்கட்சித் தலைவருமான இரா.சம்பந்தன், நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன ஆகியோர் கலந்துகொண்டனர். 2015 ஆம் ஆண்டு ஆட்சி மாற்றம் இடம்பெற்றதன் பின்னர் இடம்பெற்ற தேசிய அரசின் முதலாவது சுதந்திர தின வைபவத்திலும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பங்கேற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது.

**மகிந்த அணி புறக்கணிப்பு**

இதேவேளை, அரசின் சுதந்திர தின வைபவத்தை முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவும் அவர் ஆதரவு தரப்பினரும் புறக்கணித்தனர். தமக்கு சுதந்திரம் இல்லாத காரணத்தால் தேசிய சுதந்திர தின நிகழ்வைப் புறக்கணிப்பதாக மகிந்த ராஜபக்ச குறிப்பிட்டிருந்தார். இதற்கமைய அவரும், அவர் ஆதரவு தரப்பினரும் வைபவத்தைப் புறக்கணித்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

(கு-வ-5)

## கண்ணீர் அஞ்சலி

எமது வைத்தியசாலை பெண் நோயியல் நிபுணர் **அ. சிறீதரன்** அவர்களின் அன்புத் தந்தையார்

**முருகேசு அப்புத்துரை**



அவர்கள் 04.02.2016 வியாழக்கிழமை சிவபதமடைந்தார் அன்னாரின் மறைவினால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்வதுடன் அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**மகப்பேற்றியல் பிரிவு, விடுதி 20,**
**போதனா வைத்தியசாலை, யாழ்ப்பாணம்.**

## நான்காம் ஆண்டு நினைவலைகள்

அமரர்
**இராசேந்திரம் கார்த்திக்**



மண்ணில்
20.12.1982
விண்ணில்
05.02.2012
திதி :திரயோதசி

ஆண்டுகள் நான்கு ஓடி
மறைந்து விட்டபோதும்
உன் நினைவுகள் எம்மை
விட்டகலவில்லை
நாற்பதாண்டு கழிந்தாலும்
மனது மறக்காது
உன் சிரித்த முகம் எம் வாழ்வு
தொடரும் வரை
நாம் என்றும் உன்
நினைவுடன் தான்....

தொட்டிலடி,
சங்கானை. குடும்பத்தினர் (08693)(12.17.18)

## 606 கைதிகள்

செய்யப்பட்டனர்.

சிறு குற்றம் புரிந்து நீதிமன்றினால் அபராதம் விதிக்கப்பட்டவர்களில், சிறு அபராதம் விதிக்கப்பட்டவர்களே விடு விக்கப்பட்டனர் என்று சிறைச்சாலைத் தரப்பின்ர் தெரிவித்தனர்.

வவுனியா விளக்கமறியல் சிறைச்சாலையிலிருந்து 14 கைதிகளில் 3 பேர் பெண்களர்வர். வருடாந்தம் முக்கிய நாள்களில் சாதாரண குற்றம் புரிந்து நீதிமன்றங்களில் தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்கள் விடுவிக்கப்பட்டு வருகின்றனர். அதற்கமைவாக நேற்றும் வடக்கில் 16 பேர் விடுவிக்கப்பட்டுள்ளனர் என்று சிறைச் சாலைத் தரப்பினர் மேலும் தெரிவித்தனர். (கு-ஐ-4-106)

## இரண்டாம் ஆண்டு நினைவலைகள்

அமரர்
**வேலுப்பிள்ளை வீரபத்திரபிள்ளை**
(இளைப்பாறிய உதவி அரசாங்க அதிபர் - SLAS



திதி: துவாதசி (05.02.2016)
தோற்றம்
13.05.1947
மறைவு
28.01.2014

ஆண்டுகள் இரண்டு கடந்தாலும்
எம் துயரம் ஆறவில்லை
நீங்கள் எம் முடன் வாழ்ந்தகாலம்
நேற்று வரை போல் உணர்கின்றோம்
சிறப்பாக நாம்வாழ வழிகாட்டிச்
சென்ற தெய்வம் நீங்கள் அப்பா!

"இந்திர பவனம்"
புற்றளை, புலோலி.
என்றும் உங்கள் நினைவுடன் தவிக்கும்
குடும்பத்தினர்.

## நன்றி நவிலல்



தோற்றம்
05
08
1942

மறைவு
05
01
2016

**திருமதி. அமிர்தராணி குணரட்ணம்**
(ஓய்வுபெற்ற விஞ்ஞான ஆசிரியை)

கர்த்தருக்குள் நித்திரையடைந்த எனது அன்பு மனைவியின் மரணத்தின்போது எம்முடன் தோளோடு தோள்நின்று இறுதிவரை ஒத்தாசை புரிந்த இலங்கைப் பெந்தெகொஸ்தே சபையின் ஊழியர்கள், விசுவாசிகள், உற்றார், உறவினர்கள், நண்பர்கள் மற்றும் நேரில் வந்தும், தொலைபேசி, குறுஞ்செய்தி, மின்னஞ்சல், மூலமாக எமக்கு ஆறுதல் கூறியோருக்கும் மலர்வளையங்கள் வைத்ததுடன் எமக்காக பல்வித அர்ப்பணிப்புக்கள், தியாகங்களைச் செய்தவர்களுக்கும் எமது இதயம் நிறைந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

A.சாம் குணரட்ணம் மற்றும் பிள்ளைகள்
A82, மத்தும்கேவத்த, வீடமைப்புத்திட்டம், நுகேகொட.
தொ.பேசி: 0112829968

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மரண அறிவித்தல்கள்

### பிரம்மஸ்ரீ குமாரசாமிக்குருக்கள் ஸ்ரீஸ்கந்தபுஸ்பநாதசர்மா (ராசாகுட்டி ஐயா)



உரும்பிராய் கிழக்கு, கற்பகப்பிள்ளையார் கோயிலடியைப் பிறப்பிடமாகவும் அராலி மத்தி, வட்டுக்கோட்டையை வசிப்பிடமாகவும் கொண்ட குமாரசாமிக் குருக்கள் ஸ்ரீஸ்கந்தபுஸ்பநாதசர்மா புதன் கிழமை (03.02.2016) இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான குமாரசாமிக்குருக்கள்-சிதம்பரேஸ்வரி அம்மா தம்பதியரின் அன்பு மகனும், பரமேஸ்வரியின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற க.சிவசுப்பிரமணிய சர்மாவின் (அராலி) அன்பு மச்சானும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (04.02.2016) வியாழக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனம் செய்யப்பட்டது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

வண்ணைப்புரம் சிவன்கோயிலடி,
அராலி மத்தி,
வட்டுக்கோட்டை.

தகவல்:
குடும்பத்தினர்.

### நாகமுத்து மகாலிங்கம்

பிறப்பு: 07.06.1931 இறப்பு: 04.02.2016



உரும்பிராய் மேற்கு, அண்ணமார் கோயிலடியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட நாகமுத்து மகாலிங்கம் நேற்று (04.02.2016) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நாகமுத்து- குட்டிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும், மகாலிங்கம் சரஸ்வதியின் அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான நல்லையா, நடராசா மற்றும் மனோன்மணி, பூமணி ஆகியோரின் அன்புச் சகோதரனும், ஸ்ராலிங் செல்வரஞ்சினி, லிங்கமோகன் ஆகியோரின் பாசமிகு தந்தையும், ஞானப்பிரகாசம், ஸ்ராலிங் ஆகியோரின் அன்பு மாமனும், நிரேஷன், இவோன் அனுஷா, லெறின்ஸ் அனோஷன் ஆகியோரின் அன்புப் பேரனும், ரெறோன், ஹரிஸ்ரன் ஆகியோரின் அன்புப் பூட்டனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (05.02.2016) வெள்ளிக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக முற்பகல் 11.00 மணியளவில் உரும்பிராய் வேம்பன் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: குடும்பத்தினர்.



### செல்லத்துரை ஜெயானந்தநாயகம் (சின்னராசா)

(ஜெயா இன்டஸ்ரீஸ் உரிமையாளர்-மாலுசந்தி)

தம்பிவளவு, பத்தானை, அல்வாய் கிழக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட செல்லத்துரை ஜெயானந்தநாயகம் (சின்னராசா) 03.02.2016 புதன் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லத்துரை - மீனாட்சியம்மா தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்ற மனோரஞ்சிதத்தின் அன்புக் கணவரும் தனிபாவின்(லண்டன்) அன்புத்தந்தையும் சுயதாசனின் அன்பு மாமனாரும் செல்வராசா (தம்பி - பொறியியலாளர்-அவுஸ்திரேலியா), இராஜேஸ்வரி, சாந்தகுமார் (அவுஸ்திரேலியா), ஜெயக்குமார்(அவுஸ்திரேலியா), கமலேஸ்வரி(கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரரும் சந்தோஷ், சகானா, சாதனா ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியை இன்று (05.02.2016) வெள்ளிக் கிழமை பி.ப ஒரு மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தெருமூடிமடத்தடி கருகம்பன் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தம்பிவளவு, பத்தானை,
அல்வாய் கிழக்கு, அல்வாய்

தகவல்:
குடும்பத்தினர்.

077 188 1446,077 3203963

## கண்ணீர் அஞ்சலி

எமது ஸ்தாபனத்தில் காசாளராக கடமையாற்றிக் கொண்டிருக்கும் திரு. கேசவலிங்கம் அவர்களின்



துணைவியார்
திருமதி இரத்தினம்மா கேசவலிங்கம்
அவர்களின் மரணச் செய்தி அறிந்து துயரடைவதோடு. அவரது பிரிவால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தினை தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்தித்து நிற்கும்...

ஸ்ரீநிகேதபவன் சைவ உணவகம்
உரிமையாளரும், முகாமையாளரும், சக ஊழியர்களும்.

## மரண அறிவித்தல்கள்

### திருமதி நடராசா சிவயோகம்

பிறப்பு-1930-10-09 (ஞாணக்கா) இறப்பு-2016-02-04



இணுவில் கிழக்கு வங்கியடியைச் சேர்ந்த திருமதி நடராசா சிவயோகம் நேற்று (04.02.2016) வியாழக்கிழமை சிவபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற பொன்னு நடராசா அவர்களின் துணைவியும் காலஞ்சென்றவர்களான செல்லர் - பாக்கியம் தம்பதிகளின் மகளும் பொன்னு - சின்னம்மா தம்பதிகளின் மருமகளும் காலஞ்சென்றவர்களான கனகமுத்து, தங்கராசம், கனகலிங்கம், மகேஸ்வரி, பரமலிங்கம், தர்மலிங்கம் ஆகியோரின் சகோதரியும் புவேந்திரநாதன் (ஜேர்மனி), சிவசோதிநாதன் (ஜேர்மனி), வைரவநாதன் (ஜேர்மனி), அருட்சோதிநாதன் (ஜேர்மனி), தவசோதிநாதன் (ஆசிரியர் - யூனியன் கல்லூரி) ஆகியோரின் பாசமிகு தாயாரும் சந்திரவதனா (ஜேர்மனி), சிவகலா (ஜேர்மனி), சுரனுதா (ஜேர்மனி), மேசிவின்சலா (ஜேர்மனி), கலைச்செல்வி ஆகியோரின் பாசமிகு மாமியாரும் கம்சாநந்தி, ஆனந்தபைரவி, சகாநந்தி, பிரகலன், பிரதாபன், விதுசன், விதுவந்தன், விதுசி, சுபாங்கி, சுபநிலவன் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியாருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (05.02.2016) வெள்ளிக்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் காரைக்கால் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
தவசோதிநாதன் (மகன்)

### விஸ்வநாதர் கனகசபை



இருபாலையைப் பிறப்பிடமாகவும், கொல்லங்கலட்டியை வசிப்பிடமாகவும், உடுவில் பிரதேச செயலக லேன், வேதாரணியம் வளவை தற்போதைய வசிப்பிடமாகவும் கொண்ட விஸ்வநாதர் கனகசபை நேற்று (04.02.2016) வியாழக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான விஸ்வநாதர் - வள்ளியம்மை தம்பதியரின் பாசமிகு மகனும் காலஞ்சென்றவர்களான கந்தையா - தங்கமுத்து தம்பதியரின் அன்பு மருமகனும் நாகேஸ்வரியின் (ஓய்வு நிலை ஆசிரியர் - கோப்பாய் இருபாலை கந்தவேள் தமிழ்க்கலவன் பாடசாலை) அன்புக் கணவரும் காலஞ்சென்றவர்களான வன்னியசிங்கம், அபிராமி, சரவணமுத்து ஆகியோரின் அன்புசகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (05.02.2016) வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக பிற்பகல் 12.30 மணியளவில் மருதனார்மடம் பூவோடை இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
021 320 9421 நாகேஸ்வரி (மனைவி)

## நல்லிணக்கத்துக்கான மற்றொரு படி தமிழில் தேசிய கீதம் பாடப்பட்டமை

### கொழும்பு ஆங்கில ஊடகம் தெரிவிப்பு

கொழும்பு, பெப்.5

இலங்கையின் உள்நாட்டுப் போருக்கு பின்னர், இனங்களுக்கு இடையில் நல்லிணக்கத்தை ஏற்படுத்தும் மற்றுமொரு படியாக உத்தியோகபூர்வமற்ற முறையில் தடைசெய்யப்பட்டிருந்த இலங்கை தேசிய கீதத்துக்கான தடை நீக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு கொழும்பு ஆங்கில ஊடகம் ஒன்று தெரிவித்துள்ளது. இது தொடர்பில் அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

கொழும்பில் நேற்று நடைபெற்ற தேசிய சுதந்திர தின வைபவத்தில் தமிழில் தேசிய கீதம் பாடப்பட்டது.

சிங்கள பாடசாலை மாணவ, மாணவிகள் சிங்களத்தில் தேசிய கீதத்தை பாடியதுடன், தமிழ், முஸ்லிம் பாடசாலை மாணவ, மாணவிகள் தமிழில் தேசிய கீதத்தை பாடினர்.

சிங்கள இனவாதிகளின் எதிர்ப்பையும் மீறி மேற்கொள்ளப்பட்டுள்ள இந்த நடவடிக்கையானது 2009ஆம் ஆண்டு வரை தமது தனியான தாயகத்திற்காக 26 வருடங்கள் போரிட்ட தமிழ் மக்களை நெருக்கமாக்கி கொள்ளும் முயற்சியாகும்.

போருக்கு பின்னர், போர் வெற்றியினால், கடும் போக்காளரான மகிந்த ராஜபக்ச தமிழ் சமூகத்துடன் விரசத்தை ஏற்படுத்தியதாக ஜனாதிபதி குற்றம் சுமத்தியுள்ளார். தேசிய கீதத்தின் தமிழ்மொழி பெயர்ப்புகளை முன்னாள் ஜனாதிபதி உத்தியோகபூர்வமற்ற தடையை விதித்திருந்தார்.

இன்றைய (நேற்றைய) சுதந்திர தின நிகழ்வில் உரையாற்றிய ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, தனது அரசியல் எதிராளிகள், போரில் ஈடுபட்ட முப்படையினருக்கு மனித உரிமை மீறல்கள் தொடர்பில் தண்டனை வழங்க போகிறார்கள் என்ற அச்சத்தை ஏற்படுத்தி வருகின்றனர் எனக் கூறியுள்ளார்.

இந்த நிலையில், ஐ.நா. பரிந்துரைகள் தொடர்பில் தமது அரசு சில எதிர்க்கட்சிகள் மற்றும் தேசியவாத சிங்கள பௌத்த குழுக்களின் எதிர்ப்புகளை எதிர்நோக்கி வருவதாகவும் ஜனாதிபதி கூறியுள்ளார்.

இறுதிக்கட்ட போரில் கண்மூடித்தனமான ஷெல் வீச்சு தாக்குதல்களை நடத்தியதாகவும் கொலை, பலவந்தமாக காணாமல் போகச் செய்தமை, சித்திரவதை, பாலியல் கொடுமைகளில் ஈடுபட்டமை மற்றும் பொதுமக்களை கொலை செய்தமை ஆகிய குற்றச்சாட்டுக்கள் இலங்கை அரசின் மீது சுமத்தப்பட்டது.

அத்துடன், சிறுவர்களை படையில் சேர்த்தமை மற்றும் பொதுமக்களை கொலை செய்தமை தொடர்பில் விடுதலைப் புலிகள் அமைப்பின் மீதும் குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

ஐ.நா. மனித உரிமை ஆணையாளர் அல் ஹுசேன் கடந்த வருடம் வெளியிட்டிருந்த அறிக்கையில், இரண்டு தரப்பினரும் போர் குற்றங்களையும், மனிதாபிமானத்துக்கு எதிரான குற்றங்களையும் இழைத்து மனித உரிமை மீறல்களில் ஈடுபட்டுள்ளதாக தெரிவித்திருந்தார்.

ஐ.நா. மனித உரிமை ஆணையாளர் அல் ஹுசேன் நாளை சனிக்கிழமை இலங்கைக்கு வருகைதர உள்ளமை குறிப்பிடத்தக்கது என அதில் கூறப்பட்டுள்ளது. (வ)

## இரவோடு இரவாக

நீங்கள் இதனை செய்ய முற்படும்போது அழைக்காமல் இப்போது எல்லாவற்றையும் முடித்து விட்டு அழைக்கின்றீர்கள். இப்போது நான் பங்கெடுப்பது பொருத்தமாக இருக்காது என்று பதிலளித்திருந்தேன். இதன் பின்னர் என்னைச் சந்திக்கவேண்டும் என்று கேட்டிருந்தனர்.

அதற்கமையவே இந்தச் சந்திப்பு நடைபெற்றது. அவர்கள் இதன் போது, நீங்கள்தான் மக்கள் பிரதிநிதிகள். இந்த அரசமைப்பு வரைவை நீங்கள்தான் கொண்டு செல்லவேண்டும் என்று கேட்டுக் கொண்டனர். அத்துடன் இந்த வரைவை எங்களைப் பாவித்துக் கொள்ளுமாறும் தேவையானவற்றைச் செய்வதற்குத் தயாராக இருப்பதாகவும் அவர்கள் தெரிவித்தனர்.

மக்கள் எங்களுக்கு ஆணை கொடுத்திருக்கின்றனர். அதற்கமைய நாங்கள் புதிய அரசமைப்பு வரைவைத் தயாரிப்போம் என்று அவர்களுக்குக் கூறினேன். இந்தச் சந்திப்பு நடக்கும்போது அவர்களது அரசமைப்பு வரைவை என்னிடம் தரவில்லை. அரசமைப்பு வரைவு சந்திப்பு முடிந்து இரண்டு மூன்று மணித்தியாலங்களின் பின்னரே என்னிடம் கொண்டு வந்து தந்தார்கள்.

தாங்கள் எங்களைத்தான் ஏற்றுக் கொள்வதாகத் தெரிவித்தனர். அத்துடன் அரசமைப்பு வரைவு தொடர்பில் கட்சியின் தலைமைப்பீடத்துடன் கதைத்துத்தான் எதுவும் தெரிவிக்க முடியும் என்று அவர்களிடம் தெரிவித்தேன். இதன்போது, எமது தலைவர் இரா.சம்பந்தனைச் சந்திக்கவேண்டும் என்று கேட்டுக் கொண்டனர். அதற்குரிய ஏற்பாடுகளை செய்து தருவதாக நான் தெரிவித்தேன் - என்றார்.(த-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மரண அறிவித்தல்கள்



### பூபாலசிங்கம் சண்முகநாதன்

அரியாலை யாழ்ப்பாணத்தைப்பிறப்பிடமாகவும், லண்டனை வசிப்பிடமாகவும் கொண்ட பூபாலசிங்கம் சண்முகநாதன் கடந்த 30.01.2016 சனிக்கிழமை கொழும்பில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வி. பூபாலசிங்கம் - பொன்னம்மா தம்பதியரின் அன்பு மகனும் பத்மாபொன்றோஸின் அன்புக்கணவரும் சாந்தா, சிந்தியா, ஜோனதன் ஆகியோரின் அன்புத் தந்தையும் பியோனா, இந்திரஜித் ஆகியோரின் அன்பு மாமனாரும் ஜெய், கரினா, மைலி ஆகியோரின் பேரனும் காலஞ்சென்றவர்களான தியாகராஜா, நடராஜா மற்றும் பரம் ஆகியோரின் அன்புச்சகோதரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் எதிர்வரும் (07.02.2016) ஞாயிற்றுக்கிழமை இல. 591, கோல்றோட், கல்கிசை மகிந்த மலர்ச்சாலையில் நடைபெற்று முற்பகல் 10.00 மணியளவில் பூதவுடல் கல்கிசை பொது மயானத்தில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
591, கோல்றோட், கொழும்பு. குடும்பத்தினர்.

**077 599 7865, 031 492 6582**

தரம் – 03 முதலாவது புலமைச்சுடர்
இதோ வெளிவந்துவிட்டது!




மாதம் தோறும்
1ஆம், 15ஆம்
திகதிகளில்
வெளிவருகின்றது

* சுற்றாடல், தமிழ், கணிதம் ஆகிய பாடங்களுக்கான அலகு ரீதியிலான பயிற்சிகள்
* மூளைக்கு வேலை
* கட்டுரை எழுதிப் பழகுவோம்!
* இலகுவான மாதிரி வினாத்தாள்
* நுண்ணறிவுசார் வினாக்கள்
* சிறுவர்களுக்கான கதை
* மற்றும் பல அம்சங்களுடன்



பிரதிகளைப் பெற்றுக்கொள்ள:-
வடக்கு: 077-6569617/ 077-3920632,
வவுனியா: 077-2772726 உதயன், சுடர்ஒளி
முகவர்களிடமும் பெற்றுக்கொள்ளலாம்.

ஓம் விராட் விஸ்வப் பிரம்மனே நம

### செல்வி தம்பையா பாய்க்கியம்

(ஒய்வு பெற்ற ஆங்கில ஆசிரியை)



பண்டத்தரிப்பு அம்மன் வீதியைப் பிறப்பிடமாகவும்.வசிப்பிடமாகவும் கொண்ட தம்பையா பாய்க்கியம் அவர்கள் கடந்த 03.02.2016 புதன்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தம்பையா - நாகரத்தினம் தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்ற கண்மணி, பூபதி (கனடா), காலஞ்சென்றவர்களான நடராசா, லட்சுமணசாமி மற்றும் தியாகராசா-(கனடா), கந்தசாமி (கொழும்பு), மனோகரன் (அவுஸ்திரேலியா), ராஜமனோகரி (லண்டன்) ஆகியோரின் அன்புச்சகோதரியும் காலஞ்சென்றவர்களான தெய்வேந்திரம், இளையதம்பி மற்றும் நாகேஸ்வரி, புஸ்பராணி, மகாலட்சுமி (கனடா), ஜெயராணி (கனடா), சுமணா (கொழும்பு), இந்துமதி (அவுஸ்திரேலியா), குணராஜா (கணேசு - லண்டன்) ஆகியோரின் அன்பு மைத்துனியும் கணேசமூர்த்தி (கனடா), பேரின்பமூர்த்தி (கனடா), நந்தினி (கனடா), பாஸ்கரன் (கனடா), பகீரதன் (கனடா), நந்தன் (கனடா) ஆகியோரின் அன்புச் சிறிய தாயாரும் கோசலா (ஆசிரியர்), மேகலா, ரூபகலா (லண்டன்), சாந்தினி, நிலாவர்ணகுமார், நந்தினி; சுதா, சஞ்சீவன் (கனடா), சஞ்சயன் (கனடா), சங்கீதா (கனடா), திலீப்குமார் (கனடா), செல்வக்குமார் (கனடா), தாரணி (கனடா), சொரூபிகா (கனடா), துசான், உதயகுமார் (கொழும்பு), துசாளி, திரஞ்சனா (கொழும்பு), றொசான் சமிந்த உதயகுமார் (கொழும்பு), அம்பிகா (அவுஸ்திரேலியா), அன்ா (அவுஸ்திரேலியா), எஸ்தர் (அவுஸ்திரேலியா) ஆகியோரின் அன்பு மாமியும் ராஜாராம் (லண்டன்), கோபிராஜ் (லண்டன்) ஆகியோரின் அன்புப் பெரியம்மாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (05.02.2016) வெள்ளிக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் மூளாய் வீதி, வட்டுக்கோட்டையில் உள்ள அவரது சகோதரனின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக வழுக்கையாறு இந்து மயானத்திற்குஎடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
லீலா ஸ்ரோஸ் முன்பாக
மூளாய் வீதி, வட்டுக்கோட்டை.
ப.சக்தியரூபன்
077 707 9182

## மரண அறிவித்தல்



### சூசைமுத்து அன்ரன் றொபேட்

முரசுமோட்டையைப் பிறப்பிடமாகவும், இராமநாதபுரத்தை வதிவிடமாகவும் கொண்ட சூசைமுத்து அன்ரன் றொபேட் 02.02.2016 செவ்வாய்க்கிழமை அகால மரணமானார்.

அன்னார் காலஞ்சென்ற ஞானப்பிரகாசம் சூசைமுத்து-றோசலின் பாக்கியம் தம்பதியரின் அன்பு மகனும், றோசலினின் அன்புக் கணவரும் தனுஸ்ரோஜ்சின் அன்புத் தந்தையும், ஆன்புஸ்பகாந்தி (புஸ்பம்-பிரான்ஸ்), காலஞ்சென்றவர்களான பேனாட், ஜெராட், அல்பேட் மற்றும் ஆன் புனித ஜெயந்தி (ஆசிரியை-இராமநாதபுரம் ம.வி), அன்ரன் எட்வேட் (பெல்ஜியம்) ஆகியோரின் பாசமிகு சகோதரனும், இராசரத்தினம் (பிரான்ஸ்), நடராசா (அதிபர்-இராமநாதபுரம் ம.வி), கஜேந்திரன், விஜி, ராஜன், நரேந்திரன், சுரேஸ், கலா (இந்தியா); மாலா (டென்மார்க்), சுசி, சசி, சந்தியா (பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மைத்துனரும், அமுதா (பிரான்ஸ்), கவிதா (கொலன்ட்), கீதா (இந்தியா), வதனா (பிரான்ஸ்), குமார் (பிரான்ஸ்), குட்டி (பிரான்ஸ்), கதீசன், சியானுகா (இராமநாதபுரம் ம.வி), பரிதியன் (இராமநாதபுரம் ம.வி) ஆகியோரின் அன்பு மாமனும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை இன்று (05.02.2016) வெள்ளிக்கிழமை மு.ப. 10.00 மணியளவில் இராமநாதபுரம் ஆரோக்கியநாதர் ஆலயத்தில் இரங்கல் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு, பூதவுடல் நல்லடக்கத்துக்காக முரசுமோட்டையில் உள்ள சேமக்காலைக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நணபர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

இல.475/5, பழைய கண்டி வீதி,
இராமநாதபுரம்.

தகவல்: குடும்பத்தினர்.
T.P No : 077 110 2241,
077 374 7567

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தென்னாபிரிக்காவுக்கு மீண்டும் அடி; ஒருநாள் தொடரிலும் தொடர்கிறது




இங்கிலாந்து – தென்னாபிரிக்கா அணிகளுக்கு இடையிலான ஒருநாள் தொடரில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற முதலாவது ஆட்டத்தில் 39 ஓட்டங்களால் வெற்றிபெற்ற இங்கிலாந்து, ஐந்து ஆட்டங்களைக் கொண்ட தொடரில் 1:0 என்று முன்னிலை வகிக்கிறது.

நாணயச்சுழற்சியில் வெற்றி பெற்ற இங்கிலாந்து முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது. ஆரம்ப வீரர்களாக றோய் மற்றும் கேல்ஸ். அதிரடியில் அடித் தளமிட்டார் றோய். றோயின் ஆட்டத்துக்குஏற்பாடுகொடுத்தார் கேல்ஸ். ஆறாவது பந்துப்பரிமாற்றத்திலேயே 60 ஓட்டங்களை எட்டியது இங்கிலாந்து. இரண்டு ஓட்டங்களால் அரைச்சதத்தை தவறவிட்டு ஆட்டமிழந்தார் றோய். ரூட்டின் ஆட்டமும் சிறப்பாகவே அமைந்தது. கேல்ஸ், ரூட் இருவரும் அரைச்சதம் கடந்தனர். கேல்ஸ் 57 ஓட்டங்களுடனும் ரூட் 52 ஓட்டங்களுடனும் ஆட்டமிழந்தனர். பட்லர் – ஸ்ரோக்ஸ் இணை பின்வரிசையில் மிரட்ட 41ஆவது பந்துப் பரிமாற்றத்தில் 300 ஓட்டங்களை எட்டியது இங்கிலாந்து. சதம் கடந்தார் பட்லர். பின்வரிசை வீரர்களும் கிடைத்த வாய்ப்புக்களை சரிவரப் பயன்படுத்த முடிவில் இங்கிலாந்து 399-9.

பந்துவீச்சில் தென்னாபிரிக்கா சார்பாக மொறிஸ் 3 இலக்குகளையும், லாஞ், தகீர் இருவரும் தலா 2 இலக்குகளையும், மோர்கல், பெக்கார்டின் இருவரும் தலா ஓர் இலக்கையும் கைப்பற்றினர்.

பெரிய இலக்குத்தான் என்றாலும் இவ்வாறான இலக்குகளை விரட்டுவதில் தென்னாபிரிக்கா வீரர்கள் வல்லவர்கள். அதிலும் சொந்தமண் பலம் அந்த அணிக்கு மேலும் கைகொடுக்கும். இலக்கை எட்டக்கூடிய வகையில் விளாசலை ஆரம்பித்தார் டிகொக். ஆறு ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார் அம்லா. டிகொக் – பிளாசிஸ் இணை இங்கிலாந்தை மிரட்ட ஆரம்பித்தது. மேலதிக இலக்குச் சரிவில்லாமல் 100 ஓட்டங்களை எட்டியது தென்னாபிரிக்கா. இருவரும் அரைச் சதம்கடந்தனர். 55 ஓட்டங்களுடன் வீழ்ந்தார் பிளாசிஸ். வில்லியர்ஸ், டுமினி, றொஸ் சொவ் மூவரும் பெரிதாகச் செயற்படவில்லை. மறுமுனையில் சதம் கடந்தார் டிகொக். 33.3 பந்துப் பரிமாற்றங்களில் 250 ஓட்டங்கள் என்ற நிலையில் இருந்தபொழுது மழை குறுக்கிட்டமையால் ஆட்டம் நிறுத்தப்பட்டது. டக்வேர்த் லூயிஸ் முறைப்படி 39 ஓட்டங் களால் இங் கிலாந்துக்கு வெற்றி வழங்கப்பட்டது.

பந்துவீச்சில் இங்கிலாந்து சார்பாக மொயின் அலி 3 இலக்குகளையும், வில்லி, றொப்லி இருவரும் தலா ஓர் இலக்கையும் வீழ்த்தினர். ஆட்ட நாயகனாக டிகொக் தெரிவானார். (ம)


# சென்.அன்ரனிஸ் அணி அபாரம்

யாழ்ப்பாணம், பெப். 5

எவ். ஏ. கிண்ணத்துக்காக நடத்தப்பட்ட கால்பந்தாட்டத்தொடரில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற ஆட்டமொன்றில் மணற்காடு சென்.அன்ரனிஸ் அணி வெற்றி பெற்றுள்ளது.

இலங்கை கால்பந்தாட்டச் சம்மேளனத் தினால் நடத்தப்படும் எவ்.ஏ. கிண்ணத்துக்கான தொடரில் மன்னார் கால்பந்தாட்ட லீக்கில் அங்கம் வகிக்கும் கழகங்களுக்கு இடையிலான ஆட்டம் ஒன்று நேற்றுமுன்தினம் புதன்கிழமை கழுகுகள் விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம்பெற்றது. பலாலி விண்மீன் அணியை எதிர்த்து மணற்காடு சென்.அன்ரனிஸ் அணி மோதிக் கொண்ட இந்த ஆட்டத்தில் இரண்டு அணியினரும் தலா ஓர் கோலைப் பெற்றமையால் ஆட்டம் சமநிலை தவிர்ப்பு உதைகள் வரை நீடித்துச் சென்றது. இதில் மணற்காடு சென்.அன்ரனிஸ் அணி 4:2 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது. (ம-23)

# இரு கைகளாலும் பந்துவீசிய சுழல் வீரர் கமிந்து மென்டிஸ்



19 வயதுக்குட்பட்டோருக்கான உலகக்கிண்ணத் தொடர் பங்களாதேஷில் நடைபெற்று வருகிறது. இலங்கை – பாகிஸ்தான் அணிகளுக்கு இடையில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற ஆட்டமொன்றில் இலங்கையின் சுழற்பந்து வீச்சாளரான கமிந்து மென்டிஸ் இரு கைகளாலும் பந்துவீசி வியக்க வைத்தார்.

பாகிஸ்தான் அணியின் வலது கை வீரரான கசன் மோசின், இடது கை வீரரான பவ்யாஸ் இருவரும் இணைப்பாட்டமாக நிலைத்து நின்ற வேளையிலேயே மென்டிஸ், கசன் மொசினுக்கு இடது கையாலும், பவ்யாஸுக்கு வலது கையாலும் பந்துவீசி அசத்தினார். இந்த ஆட்டத்தில் இலங்கை அணி 23 ஓட்டங்களால் தோல்வியடைந்தது. (ம)

# பாடசாலைகளின் இல்ல மெய்வன்மைப் போட்டிகள்

யாழ்ப்பாணம், பெப். 5

**பாசையூர் சென்.அன்ரனிஸ் றோ.க. மகளிர் வித்தி.**

பாசையூர்சென்.அன்ரனிஸ்றோமன் கத்தோலிக்க மகளிர் வித்தியாலயத்தின் வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டிகள் எதிர்வரும் திங்கட்கிழமை பிற்பகல் 2மணிக்கு வித்தியாலய அதிபர் ரி.பேரின்பம் தலைமையில் பாசையூர்சென்.அன்ரனிஸ் விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம்பெறவுள்ளன. நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக வடமாகாண சபை உறுப்பினரும் விளையாட்டுத்துறை இணைப்பாளருமான இ.ஆனல்ட் கலந்துகொள்கிறார். சிறப்புவிருந்தினராக உடற் கல்வி பிரதிப்பணிப்பாளர் சண். தயாளனும் கௌரவ விருந்தினராக பாசையூர் புனித அந்தோனியார் ஆலய பங்குதந்தை லியோ ஆம்ஸ்ரோங் அடிகளாரும் கலந்து கொள்ளவுள்ளனர்.

**சங்கானை சிவப்பிரகாச ம.வி.**

**சங்கானை சிவப்பிரகாச இந்து ஆரம்பப் பாடசாலை**

சங்கானை சிவப்பிரகாச மகா வித்தியாலயமும் சங்கானை சிவப்பிரகாச இந்து ஆரம்பப் பாடசாலையும் இணைந்து நடத்தும் வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டிகள் சங்கானை சிவப்பிரகாச மகா வித்தியாலயத்தின் அதிபர் இ.சிறிதரன், சங்கானை சிவப்பிரகாச இந்து ஆரம்பப் பாடசாலையின் அதிபர் ஆ.பிரன்சிஸ் சேவியர் ஆகியோரின் தலைமையில் இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு பாடசாலை விளையாட்டு மைதானத்தில் இடம் பெறவுள்ளன. நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக சங்கானை வலி. மேற்கு பிரதேச செயலர் அ.சோதிநாதன் கலந்துகொள்ளவுள்ளார்.

**கொடிகாமம் திருநாவுக்கரசு மத்திய கல்லூரி**

கொடிகாமம் திருநாவுக்கரசு மத்திய கல்லூரியின் இல்ல மெய்வன்மை திறனாய்வுப் போட்டிகள் இன்று வெள்ளிக்கிழமை பி.பகல் 1.30 மணிக்கு கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளன. கல்லூரியின் அதிபர் கு.இரவீந்திரனின் தலைமையில் நடைபெறும் நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக கொடிகாமம் வைத்தியசாலைப் பொறுப்பதிகாரி மருத்துவர் ப.அச்சுதன் கலந்து கொள்ளவுள்ளார்.

**அல்வாய் கிழக்கு இந்து தமிழ்க் கலவன் பாடசாலை**

அல்வாய் கிழக்கு இந்து தமிழ்க் கலவன் பாடசாலையின் வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டி இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு அதிபர் ந.இராசலிங்கம் தலைமையில் நடைபெறவுள்ளது. இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன் கலந்து கொள்வார்.

**மெதடிஸ்த மிஷன் தமிழ்க் கலவன் பாடசாலை**

புலோலிமெதடிஸ்தமிஷன்தமிழ்க்கலவன்பாடசாலையின் வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டி இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு அதிபர் பி.தயாநிதி தலைமையில் நடைபெறவுள்ளது. நிகழ்வுக்கு வடமராட்சி கல்வி வலய பிரதிக்கல்விப் பணிப்பாளர் எஸ்.புஸ்பலிங்கம் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்ளவுள்ளார்.

**வதிரி வடக்கு மெதடிஸ்த மிஷன் தமிழ்க் கலவன் பாடசாலை**

வதிரி வடக்கு மெதடிஸ்த மிஷன் தமிழ்க் கலவன் பாடசாலையின் வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டி நாளை சனிக்கிழமை பிற்பகல் 2மணிக்கு பாடசாலையின் மைதானத்தில் நடைபெறவுள்ளது. பாடசாலையின் அதிபர் ப.சிவசுப்பிரமணியத்தின் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வுக்குப் பிரதம விருந்தினராக வடமாகாணசபை உறுப்பினர் சு.சுகிர்தன் கலந்துகொள்ளவுள்ளார்.

**அல்லைப்பிட்டி றோ.க.த.க. பாடசாலை**

அல்லைப்பிட்டி றோ.க.த.க. பாடசாலையின் வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டிகள் இன்று பிற்பகல் ஒரு மணிக்கு பாடசாலையின் மைதானத்தில் நடைபெறவுள்ளன. பாடசாலையின் அதிபர் வி.என். பத்மநாதனின் தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். வலய ஓய்வுநிலை பிரதிக் கல்விப் பணிப்பாளர் பொ.அருணகிரிநாதன் கலந்து கொள்ளவுள்ளார்.

**அச்சுவேலி மத்திய கல்லூரி**

அச்சுவேலி மத்திய கல்லூரியின் வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டிகள் நாளை பிற்பகல் 2 மணிக்கு கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளன. கல்லூரியின் அதிபர் சி.திரிகரனின் தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். வலய கல்விப்பணிப்பாளர் ந.தெய்வேந்திரராஜா கலந்து கொள்ளவுள்ளார்.

**ஏழாலை மேற்கு சைவ சன்மார்க்க வித்தியாசாலை**

ஏழாலை மேற்கு சைவ சன்மார்க்க வித்தியாசாலையின் வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டிகள் நாளை பிற்பகல் 1.30 மணிக்கு வித்தியாலயத்தின் மைதானத்தில் நடைபெறவுள்ளன. வித்தியாலயத்தின் அதிபர் பி.கிரிதரனின் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக உடுவில் கோட்டக்கல்வி அலுவலர் சு.சண்முககுலகுமாரன் கலந்துகொள்ளவுள்ளார்.

**வரணி வடக்கு சைவப்பிரகாச வித்தி.**

வரணி வடக்கு சைவ பிரகாச வித்தியாலயத்தின் வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டிகள் இன்று பிற்பகல் 2 மணிக்கு வித்தியாலயத்தின் மைதானத்தில் நடைபெறவுள்ளன. வித்தியாலயத்தின் அதிபர் வை.விஜயகுமாரனின் தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக வித்தியாலயத்தின் முன்னாள் அதிபர் ப.இராசரத்தினம் கலந்துகொள்ளவுள்ளார்.

**நெல்லியடி மெதடிஸ்த மிஷன் தமிழ்க் கலவன் பாடசாலை**

நெல்லியடி மெதடிஸ்த மிஷன் தமிழ்க் கலவன் பாடசாலையின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 1.30மணிக்கு நெல்லை ஆலயத்துக்கு அருகில் நடைபெறவுள்ளது. பாடசாலையின் அதிபர் ந.தேவராஜா தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக கரவெட்டி கோட்டக் கல்வி அதிகாரி க.பொன்னையா கலந்து கொள்ளவுள்ளார். (ம-23-422-9-173-122)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்றைய மோதல்கள்

யாழ்ப்பாணம், பெப். 5

*றோயல் வி.கழகத் தொடர்*

ஊரெழு றோயல் விளையாட்டுக்கழகம் வடமாகாண ரீதியாக நடத்தும் கால்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் உரும்பிராய் இந்துக்கல்லூரியின் மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் இன்று வெள்ளிக்கிழமை இரவு 8 மணிக்கு மின்னொளியில் இடம்பெறும் சுப்பர் 8 அணிகளுக்கு இடையிலான ஆட்டத்தில் அந்தோனியார்புரம் சென்.அன்ரனிஸ் அணியை எதிர்த்து மன்னார் கில்லறி அணி மோதவுள்ளது.

*குணபாலசிங்கம் ஞாபகார்த்தத் தொடர்*

யாழ். கால்பந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் குணபாலசிங்கம் குடும்பத்தினர் ஊரெழு றோயல் விளையாட்டுக் கழகத்துடன் இணைந்து நடத்தும் 40 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கான 7 வீரர்கள் பங்குபற்றும் விலகல் முறையிலான கால்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் உரும்பிராய் இந்துக்கல்லூரி மைதானத்தில் மின்னொளியில் இடம்பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் இன்று வெள்ளிக்கிழமை இரவு 7 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் ஊரெழு றோயல் அணியை எதிர்த்து கலைவாணி அணி மோதவுள்ளது.

*குமரையா ஞாபகார்த்தத் தொடர்*

கால்பந்தாட்ட மத்தியஸ்தர் சங்கம் நடத்தும் ஈ.கே.குமரையா ஞாபகார்த்த கிண்ணத்துக்கான கால்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் அரியாலையில் அமைந்துள்ள கால்பந்தாட்ட பயிற்சி மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் இன்று வெள்ளிக்கிழமை மாலை 4.15 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் ஊரெழு றோயல் அணியை எதிர்த்து அரியாலை ஐக்கிய அணி மோதவுள்ளது.

*யங்ஸ்ரார் வி.கழகத் தொடர்*

வவுனியா வைரவ புளியங்குளம் யங்ஸ்ரார் விளையாட்டுக் கழகம் வவுனியா கால்பந்தாட்ட லீக்கில் அங்கம் வகிக்கும் அணிகளுக்கு இடையில் நடத்தும் சாந்தன், யூட், கயன் ஞாபகார்த்த கிண்ணத்துக்கான லீக் முறையிலான கால்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் வவுனியா வைரவ புளியங்குளம் யங்ஸ்ரார் விளையாட்டுக்கழக மைதானத்தில் மின்னொளியில் இடம்பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் இன்று வெள்ளிக்கிழமை இரவு 7 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் அல்கிஜ்ரா அணியை எதிர்த்து ஈஸ்வரன் அணி மோதவுள்ளது. (ம-23)

## நெடுந்தீவு விளையாட்டுப் போட்டிகள்

நெடுந்தீவு பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட பதிவுசெய்யப்பட்ட கழகங்களுக்கு இடையிலான விளையாட்டுப் போட்டிகள் இன்று வெள்ளிக்கிழமை நெடுந்தீவு பிரதேச செயலர் எஸ்.ஜெயகாந் தலைமையில் நடைபெறவுள்ளன. நெடுந்தீவு மகா வித்தியாலய மைதானத்தில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக மேலதிக அரச அதிபர் செந்தில் நந்தனன் கலந்துகொள்ளவுள்ளார்.

(ம-7)

# கிளி.மாவட்ட சதுரங்கத் தொடரின் முடிவுகள் கிளி.ம.வி யின் மாணவர்கள் பெரும் ஆதிக்கம்





கிளிநொச்சி, பெப். 5

கிளிநொச்சி மாவட்டச் சதுரங்கச் சங்கம் கடந்த மாதம் 30ஆம், 31ஆம் திகதிகளில் கிளிநொச்சி மாவட்ட மட்டத்தில் நடத்திய சதுரங்கத் தொடரின் முடிவுகள்.

*ஆண்கள் பிரிவு*

9 வயது ஆண்கள் பிரிவில் கிளிநொச்சி மகாவித்தியாலயத்தின் ஜெ.பிறேம்டிலக்சன் முதலாம் இடத்தையும் அதே வித்தியாலயத்தின் ஆர்.ஜனார்த்தன் ரீ.லேனுதரன் இருவரும் முறையே இரண்டாம் மூன்றாம் இடங்களையும் கைப்பற்றினர்.

11 வயது ஆண்கள் பிரிவில் பளை இந்து ஆரம்ப வித்தியாலயத்தின் ரீ.துவாரகன் முதலாம் இடத்தையும், கிளிநொச்சி மகாவித்தியாலயத்தின் மாணவர்களான சி.சிஹானந், ச.றெவிஸ்டன் இருவரும் முறையே இரண்டாம் மூன்றாம் இடங்களையும் கைப்பற்றினர்.

13 வயது ஆண்கள் பிரிவில் கிளிநொச்சி மகா வித்தியாலயத்தின் எஸ்.பிரணவன் முதலாம் இடத்தைக் கைப்பற்றினார். இரண்டாம் இடத்தை அதே கல்லூரியின் ரீ.நவீனன் தனதாக்கினார். மூன்றாம் இடத்தை கிளிநொச்சி இந்துக்கல்லூரியின் ஆர்.டதுர்சன் தனதாக்கினார்.

15 வயது ஆண்கள் பிரிவில் கிளிநொச்சி மகா வித்தியாலயத்தின் மாணவர்களான எம்.குயிலன், ரீ.இளங்கோபன், வீ.டிசாந்தன் மூவரும் முதல் மூன்று இடங்களைப் பெற்றனர்.

17 வயது ஆண்கள் பிரிவில் கிளிநொச்சி மகா வித்தியாலயத்தின் எஸ்.சிவானுஜன் முதலாம் இடத்தையும், கிளிநொச்சி மத்திய மகா வித்தியாலயத்தின் மு.துளசிகேசன் இரண்டாம் இடத்தையும், கிளிநொச்சி மகா வித்தியாலயத்தின் பீ.டிலக்சன் மூன்றாம் இடத்தையும் கைப்பற்றினர்.

19 வயது ஆண்கள் பிரிவில் கிளிநொச்சி மகா வித்தியாலயத்தின் மாணவர்களான ரீ.பிரசன், ரீ.பிரவீனன், வீ.தஜன் மூவரும் முறையே முதல் மூன்று இடங்களையும் தமதாக்கினர்.

19 வயதுக்கு மேற்பட்ட ஆண்கள் பிரிவில் கிளிநொச்சியின் எம்.பார்த்தீபன் முதலாம் இடத்தையும், கனகபுரத்தின் பீ.திவாகரன் இரண்டாம் இடத்தையும், இராமநாதபுரத்தின் கோ.விதுர்சன் மூன்றாம் இடத்தையும் கைப்பற்றினர்.

*பெண்கள் பிரிவு*

9 வயதுப் பெண்கள் பிரிவில் கிளிநொச்சி மத்திய ஆரம்ப வித்தியாலயத்தின் பீ.துளசிகா முதலாம் இடத்தையும், கிளிநொச்சி மகா வித்தியாலயத்தின் கே.நேசிகா இரண்டாம் இடத்தையும், விவேகானந்தா வித்தியாலயத்தின் பீ.நந்து மூன்றாம் இடத்தையும் கைப்பற்றினர்.

11 வயதுப் பெண்கள் பிரிவில் கிளிநொச்சி மகா வித்தியாலயத்தின் எம்.வைகா முதலாம் இடத்தையும், விவேகானந்தா வித்தியாலயத்தின் பீ.கலையிசை இரண்டாம் இடத்தையும், பளை இந்து ஆரம்ப வித்தியாலயத்தின் கௌ.பிறையினி மூன்றாம் இடத்தையும் கைப்பற்றினர்.


13 வயதுப் பெண்கள் பிரிவில் கிளிநொச்சி மகா வித்தியாலயத்தின் எம்.மருனிதா முதலாம் இடத்தையும், தருமபுரம் மத்திய கல்லூரியின் பீ.திலக்சிகா இரண்டாம் இடத்தையும், கிளிநொச்தி மகா வித்தியாலயத்தின் கே.மயூரதா மூன்றாம் இடத்தையும் தமதாக்கினர்.

15 வயதுப் பெண்கள் பிரிவில் பளை மத்திய கல்லூரியின் பீ.நிருசனா முதலாம் இடத்தையும், அதே கல்லூரியின் ஏ.பவித்திரா இரண்டாம் இடத்தையும், கிளிநொச்சி மகா வித்தியாலயத்தின் ரீ.சிந்துசா மூன்றாம் இடத்தையும் கைப்பற்றினர்.

17 வயதுப் பெண்கள் பிரிவில் உருத்திரபுரம் மகா வித்தியாலயத்தின் கே.பவனி முதலாம் இடத்தையும், அதே பாடசாலை யின் எஸ்.தனுஜா இரண்டாம் இடத்தையும், தருமபுரம் மத்திய கல்லூரியின் எஸ்.தர்சிகா மூன்றாம் இடத்தையும் கைப்பற்றினர்.

19 வயதுப் பெண்கள் பிரிவில் உருத்திரபுரம் மகா வித்தியாலயத்தின் மாணவிகளான எஸ்.நிரூசா, வி.யுகப்பிரியா, எஸ்.வினுசா மூவரும் முறையே முதல் மூன்று இடங்களையும் கைப்பற்றினர்.

19 வயதுக்கு மேற்பட்ட பெண்கள் பிரிவில் வட்டக்கச்சியின் ஜே.குவேதினி முதலாம் இடத்தையும், இராமநாதபுரத்தின் தி.லோயினி இரண்டாம் இடத்தையும், கிளிநொச்சியின் எஸ்.தனுசியா மூன்றாம் இடத்தையும் கைப்பற்றினர். (ம-405)



# ஊர்சுற்றும் ஓட்டம்

யாழ்ப்பாணம், பெப். 5

முல்லை மாவட்ட பிரதேச செயலக பிரிவினருக்கான ஊர்சுற்றும் ஓட்டம் நாளை 6ஆம் திகதி சனிக்கிழமை காலை முல்லைத்தீவு மாவட்ட செயலகத்தின் முன்பாக ஆரம்பமாகவுள்ளது.

ஆண்களுக்கான ஓட்டம் 12 கி.மீற்றர் தூரம் உடையதாகவும், பெண்களுக்கான ஓட்டம் 8 கி.மீற்றர் தூரம் உடையதாகவும் நடைபெறவுள்ளன. முல்லை மாவட்ட செயலகத்துக்கு உட்பட்ட பிரதேச செயலகங்களான கரைதுறைப்பற்று, புதுக்குடியிருப்பு, ஒட்டுசுட்டான், மாந்தை கிழக்கு, துணுக்காய், வெலிஓயா ஆகிய பிரதேச செயலகங்களுக்கு உட்பட்டவர்கள் முல்லை மாவட்ட விளையாட்டு உத்தியோகஸ்தரிடமோ அல்லது சனிக்கிழமை காலை 6.30மணிக்கு முன்னதாக போட்டி ஆரம் பிக்கும் இடத்துக்கு வருகை தருவதன் மூலமோ பதிவுகளை மேற்கொள்ள முடியும்.

நிகழ்வில் விருந்தினர்களாக முல்லை மாவட்ட அரச அதிபர் ரூபவதி கேதீஸ்வரன், மேலதிக அரச அதிபர் மோகன்ராஜ், பிரதம கணக்காளர் றெஜினோல்ட் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளார். (ம-422-402)

# அடுத்த மாதம்வரை றோயர் பெடரர் இல்லை

முன்னணி ரென்னிஸ் வீரரான பெடரர் முழங்காலில் செய்துகொண்ட அறுவைச் சிகிச்சை காரணமாக அடுத்த ஒரு மாதத்துக்கு தொடர்களில் கலந்துகொள்ளமாட்டேன் என்று தெரிவித்துள்ளார். சமீப காலமாக பெடரரின் விளையர்ட்டில் பெரிதாக தாக்கம் இல்லை. அரையிறுதி, இறுதி ஆட்டங்கள் வரை முன்னேறும் அவருக்கு ஜோகோவிக் முடிவுகட்டி வருகிறார். பெடரரின் இந்தத் தோல்விக்கான பிரதான காரணங்களில் ஒன்றாக உடற்தகுதி இன்மையும் காணப்பட்டது. குறிப்பாக முழங்காலில் ஏற்பட்ட உபாதை அவருக்கு பெரும் சிக்கல் கொடுத்து வந்தது. இதனால் பெடரர் தற்பொழுது முழங்காலில் சத்திரசிகிச்சை மேற்கொண்டுள்ளார். இதனால் இந்த மாதம் முழுவதும் அவர் களமிறங்கமாட்டேன் என்று அறிவித்துள்ளார். (ம)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# மெய்வன்மைப் போட்டிகள்

யாழ்ப்பாணம், பெப். 5

**வற்றாப்பளை மகாவித்தியாலயம்**

வற்றாப்பளை மகாவித்தியாலய இல்ல மெய்வன்மைப் போட்டி இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு பாடசாலை விளையாட்டு மைதானத்தில் நடைபெறவுள்ளது. நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமாகாண சபை உறுப்பினர் க.சிவநேசன் கலந்துகொள்ளவுள்ளார்.

**தெல்லிப்பழை யூனியன் கல்லூரி**

தெல்லிப்பளை யூனியன் கல்லூரியின் மெய்வல்லுநர் போட்டி இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு கல் லூரியின் மைதானத்தில் நடைபெறவுள்ளது. கல்லூரியின் முதல்வர் வே.க. இரத்தினகுமார் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வலிகாம வலய கல்விப் பணிப்பாளர் எஸ். சந்திரராஜா கலந்து கொள்ளவுள்ளார்.

**நீர்வேலி றோ.க.த.க. பாடசாலை**

நீர்வேலி றோமன் கத்தோலிக்க தமிழ்க் கலவன் பாடசாலையின் வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டி இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு பாடசாலை மைதானத்தில் நடைபெறவுள்ளது. பாடசாலையின் அதிபர் சி.தர்மரத்தினம் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக வடக்கு மாகாண சபை உறுப்பினர் திருமதி அனந்தி சசிதரன் கலந்து கொள்ளவுள்ளார்.

(ம-422-11-102)

# போராடி வென்றது மன்செஸ்டர் சிற்றி




நடைபெற்றுவரும் இங்கிலாந்து பிறீமியர் லீக் கால்பந்தாட்டத் தொடரில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற மன்செஸ்டர் சிற்றி, சந்தர்லாண்ட் அணிகள் மோதிய ஆட்டத்தில் சிற்றி அணி போராடி வெற்றிபெற்றுள்ளது.

ஆட்டத்தின் 16ஆவது நிமிடத்தில் சிற்றியின் சேர்ஜியோ முதல் கோலைப் பதிவுசெய்தார். முதல் பாதியின் முடிவுவரை வேறெந்த கோல்களும் பதிவாகவில்லை. இரண்டாம் பாதியிலும் கோல் கணக்கில் மாற்றம் ஏற்படாத நிலையில் 1:0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது மன்செஸ்டர் சிற்றி. இந்த வெற்றியின் மூலம் 47 புள்ளிகளுடன் பிறீமியர் லீக் தரவரிசையில் அந்த அணி இரண்டாம் இடத்தை வகிக்கின்றது. (ம)

# நியூசிலாந்து - ஆஸ்திரேலியா இரண்டாவது ஆட்டம் நாளை

நியூசிலாந்து - ஆஸ்திரேலியா அணிகளுக்கு இடையிலான மூன்று ஆட்டங்களைக் கொண்ட ஒருநாள் தொடரின் இரண்டாவது ஆட்டம் நாளை நடைபெறவுள்ளது.

முதலாவது ஆட்டத்தில் நியூசிலாந்து வெற்றிபெற்றிருந்தது. இதனால் இன்றைய ஆட்டத்தில் வென்றால் மட்டுமே ஆஸ்திரேலியாவால் தொடரில் தன் இருப்பைத் தக்கவைக்க முடியும். எனவே கட்டாய நிலமையில் ஆஸ்திரே லியா களமிறங்குகிறது. இந்த ஆட்டத்தில் ஆஸ்திரேலியாவின் சகலதுறை வீரரான பல்க்நெர் விலகியுள்ளமை அந்த அணிக்கு மேலும் பின்னடைவை ஏற்படுத்தும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. (ம)

## 4ஆம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 15 . 03 . 1936

மறைவு 20 . 01 . 2012

மீசாலை

அமரர் திருமதி **புஸ்பலதிகவதி கணேசலிங்கம்**

(இளைப்பாறிய பிரதிக்கல்விப் பணிப்பாளர் - தென்மராட்சி வலயம்)

திதி : அபரபக்க துவாதசி (05.02.2016)

கரு தந்து உயிர் தந்து உடல் தந்த தாயே!
அன்புடன் அறிவு தந்து உயர வைத்தாய் நீயே!
அதிகாலை எழுந்ததும் நின்முகம் தேடும் நமைவிட்டு
கணப் பொழுதில் விண்ணுலகம் சென்றது தானேனோ?
ஆண்டுகள் நான்காகித் தவிக்கின்றோம் உனைப்பிரிந்து
ஆறுதல் சொல்ல நமக்கு இனி யார் இவ்வுலகில்?

உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**குடும்பத்தினர்.**

35 1/1A, குமாரசாமி வீதி, திருநெல்வேலி.
72/27, பனிக்கர் வீதி, திருநெல்வேலி.
"சிவகிரி", மீசாலை வடக்கு, மீசாலை

போட்டிப் பரீட்சை வகுப்புக்கள்
SLAS SLEAS
திறந்த பரீட்சைகளுக்கு
பிரதி ஞாயிறு 9.00 - 4.00 மணி
சில அனுமதிகள் உண்டு
பிரிவு - II
திங்கள் - வெள்ளி வரை
பி.ப 5.00-6.30 மணி வரை
அனுமதிகள் உண்டு
SLAS
மட்டுப்படுத்தப்பட்ட பரீட்சைக்கு
ஞாயிறு 9.00-4.00 மணி வரை
வாழ்வின் எழுச்சி உத்தியோகத்தர்
பிரதி சனி 2.00-5.00 மணி வரை
T.P: 076 688 3394
யாழ்ப்பாணக் கல்லூரி பட்டப்படிப்புகள் பிரிவு

விசேட கருத்தரங்குகள்
SLEAS
மட்டுப்படுத்தப்பட்ட பரீட்சைக்கு
பொது உளச்சார்பு பொது அறிவு
தவசேகர் (SLTES,M.Ed)
விடய ஆய்வு
அருணகிரிநாதன் (SLEAS)
ஒப்பீட்டுக் கல்வி
பாலசந்திரமூர்த்தி (M.A,M.Ed)
ஒவ்வொரு ஞாயிறும் 10.00 - 4.00 மணி
கட்டணம் 3000/-
T.P: 076 688 3394
யாழ்ப்பாணக் கல்லூரி பட்டப்படிப்புகள் பிரிவு

விசேட கருத்தரங்கு
SLAS SLEAS
பிரதி சனி 9.00-5.00pm
வாழ்வின் எழுச்சி (சமுர்த்தி) அபிவிருத்தி உத்தியோகத்தர்
ஆரம்பம் 13.02.2016-2.00pm
விரிவுரையாளர்
P. உமாசங்கர்
P. கமல்நாதன்
நாவலர் கல்வி நிலையம் ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.
T.P: 077 469 66 95

பொருளியற் கல்லூரி
நாவலர் றோட், யாழ்ப்பாணம். K.K.S. றோட், இணுவில் (இரு இடத்திலும்)
A/L 2018
கலை - வர்த்தகப் பிரிவு
மீண்டும் புதிய பிரிவு
நாளை ஆரம்பம் 6.2.2016 சனி
இதுவரை அனுமதி பெறாத மாணவர்கள் நாளையில் இருந்து உங்கள் அனுமதிகளை பெற்றுக் கொள்ளவும்.
Note: எமது மற்ற நிறுவனமான BARATHY சித்தன்கேணியிலும் புதிய பிரிவு ஆரம்பமாகின்றது.

பிரத்தியேக வகுப்பு
A/L - 2018 - 2017
பௌதிகவியல்- MR. இரவீந்திரன் B.Sc, M.Sc PGDE
இரசாயனவியல்-பிரதீபன் B.Sc(HONS) Che-SPL PGDE
Note: 20 மாணவர்களுக்கு மட்டும் அனுமதிகள். ஒவ்வொரு மாணவர்களுக்கும் தனிக்கவனம் செலுத்தப்படும்.
இடம்: பொருளியற் கல்லூரி நாவலர் றோட் - யாழ்ப்பாணம்.

BTEC HND
SOFTWARE ENGINEERING
BUSINESS MANAGEMENT
PEARSON edexcel
மேலதிக விபரங்களுக்கு 071 777 5666
அனுமதிக்கு முந்திக்கொள்ளுங்கள்
பல நூறு மாணவர்கள் பயணித்த இவ் வெற்றிப் பாதையில் உங்கள் காலடியையும் பதித்துக்கொள்ளுங்கள்
IIS CITY CAMPUS
#200, Sivan Pannai Road, Jaffna
Tel: 222 8060 Web: www.iis.edu.lk

மாணவரின் உள்ளத்திலிருந்து
லந்துசா, யாழ்ப்பாணம்



சுண்டிக்குழி மகளிர் கல்லூரி மாணவியாகிய நான் முகாமைத்துவ துறையில் வேண்டும் என்ற கனவை IIS இல் இணைந்ததன் மூலம் நனவாக்கிக் கொள்ள முடியும் என்ற நம்பிக்கையை இந் நிறுவனம் எனக்கு ஊட்டியுள்ளது. ஏனைய நிறுவனங்களுடன் ஒப்பிடும் போது நீண்ட கால அனுபவம், குறைவான கட்டணம், நம்பிக்கையான நிறுவனம் என்பவற்றின் அடிப்படையில் IIS எனது சரியான தெரிவாகும்

METROH
தொழில்நுட்பக் கல்லூரி
நாவலர் றோட்-யாழ்ப்பாணம்.
(பொருளியற்கல்லூரியின் கிளை நிறுவனம்)
A/L 2018 தொழில்நுட்பப்பிரிவு
பிரிவு II ஆரம்பம் 06.02.2016
சனி 8.00 AM
உங்கள் அனுமதிகளை பெற்றுக் கொள்ளவும்
A/L 2017, A/L 2016, நடைபெறுகின்றன.

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 05.02.2016 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org